# கண்டுகொண்டேன் காதலை...

ரமணிசந்திரன்



# கண்டுகொண்டேன் காதலை

1

"ஆக, எல்லாப் பகுதிப் பிரச் சினைகளையும் விரிவாக ஆராய்ந்து, தீர்வுகளும் கண்டுவிட்டதால், இந்த வார கூட்டம், இத்துடன் முடிவடை கிறது. எல்லோரும் கிளம்பலாம்" என்று மோகனசுந்தரம் கூறியதும், அப்பாடா என்று இருந்தது, சாருமதிக்கு.

அவள் அஞ்சியபடி எம்டியிடம் மாட்டிக் கொள்ள வில்லை. கடவுள் அருளால் தொல்லையின்றி தப்பிவிட் டாள்.

ஆனாலும் இவனிடமெல்லாம் வேலை பார்க்கும்படி யான தலைவிதி, அவளுக்கு நேர்ந்திருப்பது, எவ்வளவு அநியாயம்! அப்போது, அவள் வேலையில் சேர்ந்து ஒரு வாரம் ஆகவில்லை. அவள் வேலை செய்யும் மூன்றா

வது தளத்துக்குச் செல்வதற்காக, முந்தைய ஐந்து நாட்களைப் போல, அன்றும் லிஃப்டில் ஏறினாள். அவ் வளவே.

கூட நின்றவர்கள் ஏன் ஏறவில்லை என்று யோசனை யோடு பார்த்தால், அதில் ஏற்கனவே ஏறியிருந்தவன் முதலாளி.

இவனைப் பார்த்துவிட்டு மற்றவர்கள் 'லிஃப்டில்' ஏறவில்லையோ? அப்படி ஓர் எழுதாத சட்டம் உண்டு என்று அவளுக்குத் தெரியாதே என்று சாருமதி யோசிக்கும்போதே "அழகாய் இருக்கிறாய், இன்றைய இரவை என்னோடு கழிக்கிறாயா?" என்று முதலாளி கேட்டால், தலைவிதியைத்தானே, அவள் நொந்தாக வேண்டும்?

அவன்தான், மற்றவர்கள் 'லிஃப்டில்' ஏறாமல் எப்படியோ தடுத்திருப்பான் போல! கண்ணராவி!

அன்று, எப்படி நடுநடுங்கிப் போய்விட்டாள்!

போடா, நீயும் உன் வேலையும் என்று ராஜினாமாக் கடிதத்தை அவன் முகத்தில் வீசி எறிந்துவிட்டு வெளி யேற முடியாத நிலையில் அவள் இருந்தது, இன்னமும் அப்படியே இருப்பது, அதை விடவும் பெரிய அநியா யமே!

அன்று நடந்த அந்தச் சம்பவத்தால் அல்லவோ, முழுதாக ஆறு மாதங்கள் ஆன பிறகும், இன்று முழு வதும், சாருமதி இப்படிக் கலங்கிக் கொண்டே இருக்கும் படி, நேர்ந்திருக்கிறது!

அழகாக இருக்கிறாள், உண்மைதான். ஆனால், அவளை விடவும் அழகாகப் பேரழகிகளாகவே இன்னும்



எத்தனையோ பெண்கள் இல்லையா? அதிலும், இன் றைய நிலையில், அழகைக் காட்டிக் கொள்ள தெரியாத பெண்கள்தான் உண்டே தவிர, அழகற்ற பெண்கள் கிடையவே கிடையாது என்கிற கருத்தில், அவளுக்கும் உடன்பாடு உண்டு.

அப்படியிருக்க, அவளுக்கு மட்டும் ஏன் இந்த சோதனை?

அதிலும் எத்தனையோ மனவேதனை, கலக்கங்கள் எல்லாம் அனுபவித்து காலம் என்கிற மருந்தும், பெரும் முயற்சியுமாக அதையெல்லாம் தாண்டி வந்து, நல்ல வேலை, வருமானம், நிம்மதி என்று சற்றே அமைதி அடைந்திருக்கும் அந்தச் சமயத்தில், அந்தக் கேள்வி ரொம்பவே அநியாயமாக, அவளுக்குத் தோன்றியது.

அதிர்ந்து போய் "சா...ர்... நான்... நான்" என்று முதலில் தடுமாறிய சாருமதிக்கு, முதலாளியின் முகத்தில் அமர்த்தலான சிரிப்பைக் காணவும், ஒரு திடம் வந்தது.

கைநீட்டி, அவனிடம் சம்பளம் வாங்குகிற பெண், எங்கே மறுக்கப் போகிறாள் என்கிற திமிர்! வாங்குகிற சம்பளம், அவளது உழைப்புக்குத்தான் என்பது கூடத் தெரியாத சர்வம்!

நிமிர்ந்து நின்று "என்னைத் தப்பாக நினைத்து விட் டீர்கள், சார். நான் அந்த மாதிரிப் பெண் அல்ல. எனவே, இந்த எண்ணத்தை விட்டு விடுங்கள்!" என்றாள் அவள் அழுத்தமான குரலில்.

"விட்டு விடுவதா?" என்று, அவளை ஏற, இறங்கப் பார்த்தான் அவன்.

உடல் கூசிக் குறுகுறுத்தாலும், திடத்தை வருவித்துக் கொண்டு, அதே நிமிர்வுடன், அப்படியே நின்றாள் சாருமதி.

பார்த்து முடித்துவிட்டு ''அது, ரொம்பக் கஷ்டம். எனவே, ஒரு சரியான சந்தர்ப்பம் வருவதற்காகக் காத்திருக்கிறேன்'' என்றான் அவன்.

''அப்படி ஒரு சந்தர்ப்பம் வரவே வராது'' என்ற அவளது பதிலுக்கு, லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, லிஃப்ட் கதவைத் திறக்கும் பட்டனை அழுத்தி, கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான் மோகனசுந்தரம்.

அப்படியானால், எப்போதோ கதவை மூடி வைக்கும் பட்டனை அழுத்தியிருக்கிறான். மற்றபடி தான், நிற்க வேண்டிய தளம் வந்ததும், லிஃப்ட் கதவு தானாகத் திறக்குமே.

எம்.டி.யின் பின்னே லிஃப்டிலிருந்து வெளியேறிய போது, ஆங்காங்கே கண்ணில் பட்ட ஓரிருவரின் ஒரு மாதிரியான பார்வை உறுத்த, அந்த வேலைக்கு ஏற்பாடு செய்த முத்துக்கிருஷ்ணனிடம் போய் நின்றாள் சாருமதி.

சங்கிலித் தொடர் போல, நகரத்தில் ஒன்பது கிளைகள் உள்ள பெரிய சூப்பர் மார்க்கெட் 'உங்களுக்காக'! ஒவ்வொன்றிலும் ஆறு தளங்கள், ஒவ்வொரு தளத்திலும், ஒவ்வொரு வகையான பொருட்கள்!

'அங்கே இல்லாதது இல்லை' என்பது போல, விளம்பரம் கூட வந்தது. அது மெய்யே என்கிற அளவுக்கு, வாடிக்கையாளர்களுக்கு வேண்டிய அனைத்தையும் விற்பனை செய்யும் பல்பொருள் அங்காடி, அது. அது கொட்டித் தந்த வருமானத்தை முழுதாகத் தானே



சுருட்டிக் கொள்ளாமல் பணி புரிகிறவர்கள் திருப்தியோடு பணியாற்றும் விதமாக, அவர்களுக்கும் நல்ல ஊதியமே அளிக்கப்பட்டு வந்தது. எனவே, அங்கே வேலைக்குப் போட்டி அதிகம்.

அதில் சாருமதிக்கு வேலை கிடைத்தது என்பது, பெரிய விஷயம் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், வெளிப்பார்வைக்கு உயர்வாகத் தோன்றிய போதும், அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தது போல, உள்ளிருக்கும் பெரிய சொத்தை, அன்று தானே, அவளுக்குத் தெரிய வந்திருக்கிறது!

அவளுடைய தந்தைக்கு நண்பர் கூட்டம் பெரிது என்றாலும், நெருக்கமான நண்பர் முத்துக்கிருஷ்ணன் தான்.

ஓர் விபத்தில், சற்றும் எதிர்பாராத விதமாகப் பெற்றோர் இருவரும் மறைந்துவிட மலங்க விழித்துக் கொண்டு நின்ற பெண்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ததும், அவரேதான்.

பெண்கள் வயது வந்தவர்கள் என்பதாலோ, என்னவோ மற்றவர்கள் எல்லோரும், கல் விழுந்த காக்கைக் கூட்டம் தான்.

"இந்தக் கூட்டத்துக்கு செலவு செய்வது வீண். செய்யாதே என்றால், சிவா கேட்கவே இல்லை. இப்போது பார், ஒரு வித சேமிப்பும் இல்லாமல் நீங்கள் தவிக்கும்படி ஆகிவிட்டதே!'' என்று வருந்தியவர் முத்துக்கிருஷ்ணன். அத்தோடு நில்லாமல், நண்பனுக்கு, எங்கெங்கிருந்து, என்னென்ன பணம் வரக்கூடும் என்று தேடிப் பிடித்து. அவை அனைத்தையும் வசூல் செய்து சேர்த்தார்.

பெரிதாக ஒன்றும் சேர்ந்துவிடவில்லை என்றாலும், பெண்கள் இருவரும் படிப்பை முடிக்கவும், தொடர்ந்து ஏதோ ஒரு வேலை செய்வதற்கான பயிற்சி பெறவும், அவ்வளவு காலமும் அவர்களது செலவுக்கும் சேர்த்து, அந்தப் பணம் போதுமானதாக இருந்தது.

பெரியவள் சாருமதி புத்திசாலி என்பதோடு, படிப்பில் ஈடுபாடும் இருந்ததால், கல்லூரிப் படிப்பை முடித்த தோடு, அலுவலக நிர்வாகம் பற்றிய பயிற்சியும் எடுத்து, அதில் சிறந்த முறையில் வெற்றியும் பெற்றாள்.

அவளது தகுதியைக் காட்டி, அவரும், தான் பணி புரியும் 'உங்களுக்காக' சூப்பர் மார்க்கெட்டிலேயே, அவ ளுக்கு வேலை வாங்கிக் கொடுத்தார்.

எனவேதான், இந்தப் பிரச்சினை வந்ததும், முத லாளிக்கு எதிராக அவர் என்ன செய்ய முடியும் என்ற எண்ணம் ஒருபுறம் இருந்தாலும், ''அங்கிள்...'' என்று அவள் முத்துக்கிருஷ்ணனிடம் போய் நின்றாள்.

ஆனால், பெரியவர் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ''சின்னவர் குணம், பெண்கள் விஷ யத்தில் கொஞ்சம் ஒரு மாதிரிதான் என்றாலும், சாரும்மா. நிறையப் பெண்கள், தானாகப் போய் விழுகிறவர்கள் தான். அவர், யாரையும் எந்த வகையிலும் கட்டாயப் படுத்தியதாகவோ, விரட்டித் திரிந்ததாகவோ, கேள்வி யில்லை. எனவே, நீ ஒதுங்கிப் போனால், அதுவே போதும். ஆனால் அவசரப்பட்டு வேலையை விட்டு டாதே. இது போல நல்ல சம்பளத்தோடு, வேறு வேலை கிடைப்பது பெரும் கஷ்டம். அப்படியே ஒரு வேலை கிடைத்து வெளியே போனாலும் போகிற இடத்திலும் பிரச்சனைகளே வராது என்றும்தான், நமக்கு என்ன



நிச்சயம்? எதற்கும் உன்னை என் பிரிவிலேயே, என் செயலாளராகப் பணியில் வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறேன். அதிலேயே, எம்டி புரிந்து கொள்வார்'' என்றார் அவர்.

அவர் சொன்னதும் சரியே.

முத்துக்கிருஷ்ணன் சொன்னது போல, எம்டி ஓர் எல்லையில் இருந்தால், தான் மறு எல்லையில் இருக்கும் விதமாகச் சாருமதி கவனத்துடன் நடந்து கொண்டாள்.

அதிலேயே அவளது தன்மை புரிந்து விட்டதோ, என்னவோ, அன்றைய முதல் அதிர்ச்சிக்குப் பிறகு, இந்த ஆறு மாதங்களாகச் சாருமதிக்கு எந்தவிதமான பிரச் சினையும் வரவில்லை.

எம்டியிடமிருந்து மட்டுமல்ல.

இந்த விஷயம் எப்படியோ கசிந்து பரவியதாலோ, அல்லது மூத்த அலுவலரான முத்துக்கிருஷ்ணனின் பாதுகாப்பு காரணமாகவோ, பொதுவாக இது போன்ற எல்லாப் பெரிய நிறுவனங்களிலும் சில்லுண்டித்தனம் செய்வதற்கென்றே வேலைக்கு வரும் ஒரு சில புல் லுருவிகள் கூட, அவள் பக்கம் வராமல் ஒதுங்கியே போனார்கள்.

அவளும் பெருமளவு நிம்மதியாகவே வேலையைப் பார்க்கலானாள்.

அந்த நிம்மதிக்கு முதல் சோதனை, இன்றுதான் நேர்ந்திருந்தது. நேர்ந்தது என்றுகூடச் சொல்ல முடியாது. நேர்ந்து விடுமோ என்ற அச்சம்தான் அதிகம் இருந்தது!

அதற்கு அவசியம் இல்லை என்று, ஒரு வழியாக இப்போது புரிந்தாலும், இந்தக் கூட்டத்திற்கு அவள்தான்

செல்ல வேண்டும் என்று முத்துக்கிருஷ்ணன் அங்கிள் சொன்னதிலிருந்து, அவள் உள்ளூர நடுங்கிக் கொண் டல்லவா, இருந்தாள்!

ஒவ்வொரு வாரமும், வெள்ளிக்கிழமை, மதிய உணவு முடிந்ததும், அனைத்துத் தளங்களுடைய நிர்வாகிகளின் கூட்டம், ஒன்று நடக்கும். எம்டியின் தலைமையில், பொது நிர்வாகி, கூட இருப்பார். சில தருணங்களில், எல்லாக் கிளைகளுடைய பொது நிர்வாகிகளும்கூட, அந்தக் கூட்டத்துக்கு வருவார்கள்.

ஒவ்வொரு தளத்திலும் நடக்கும் விற்பனையை மேற்படுத்துவதுதான், கூட்டத்தின் முக்கிய நோக்கம். அந்தந்த 'கால தேச வர்த்தமானங்க'ளுக்கு ஏற்ப, புதுப் புது திட்டங்கள், உத்திகளைப் பயன்படுத்துவது பற்றிக் கலந்து பேசுவார்கள். மற்ற பிரச்சினைகள் ஏதாவது இருந் தால், அதையும் அலசி ஆராய்ந்து, தீர்வு காண்பார்கள்.

ஊக்கப் பரிசுகள், தள்ளுபடி விற்பனைகள், பாதுகாப்பு, திருட்டு என்று தொழில் பற்றி, அங்கே பேசப்படாத விஷயமே கிடையாது.

டீ அல்லது காபி பிஸ்கட்டுடன் கூட்டம் நடந்து முடியும்.

வழக்கமாக, தளங்களின் தலைமை நிர்வாகிதான், இந்தக் கூட்டத்தில் பங்கெடுப்பது, அவருடைய செய லாளர், இன்னும் தேவையென்றால், குறிப்பெடுப்பதற் காகக் கூட ஒருவரும் செல்வதுண்டு.

ஆனால், எந்தக் காரணம் கொண்டும், சாருமதி, இந்தக் கூட்டங்களுக்குச் சென்றதே கிடையாது. அவள் தான் மோகனசுந்தரம் இருக்கும் இடத்துக்கு, நேர் எதிர்



எல்லையில் இருப்பது வழக்கமாயிற்றே! அவன் தலைமை தாங்கும் கூட்டத்துக்கு, அவள் ஏன் செல்லப் போகிறாள்?

அவர் சொன்ன ஆலோசனைதானே? எனவே, முத்துக்கிருஷ்ணனும், இந்தக் கூட்டங்களுக்குச் சாருவை அழைப்பது கிடையாது. அவள் குறித்துக் கொடுப்பதை வைத்துக் கொண்டு, அவரே பார்த்துக் கொள்வார்.

அந்தத் தளத்தில், முத்துக்கிருஷ்ணனுக்கு அடுத்த இடத்தில் இருப்பவள் சாருமதி என்பது, மோகனசுந்தரத் துக்குத் தெரியாமல் இராது. கூட்டிப் பெருக்கும் துப்புர வுத் தொழிலாளர் வரை, பெயர் நினைவு வைத்திருப் பவன் அவன். அவளை மறந்திருப்பான் என்று சொல்ல வழியில்லை.

ஆனால், முதலில் முத்துக்கிருஷ்ணன் சொன்னது போலவே அவளது ஒதுக்கத்தை ஏற்று, முதலாளியும் ஒதுங்கிக் கொண்டான் என்பது, சாருவின் இதமான நம்பிக்கை!

இப்படி இருக்கையில் உடல்நலம் கெட்ட தாயாரைப் பார்க்கப் போவதாகச் சொல்லி, முத்துக்கிருஷ்ணன் ஒருமுறை வெளியூர் போனார்.

வெள்ளிக்கிழமைக் கூட்டத்துக்கு வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுத்தான், அவர் சென்றார்!

ஆனால், வெள்ளியன்றும் அவரது இருக்கை தொடர்ந்து காலியாகவே இருக்கவும், சாருமதிக்குப் பகீரென்றது.

அவர் வரவில்லை என்றால், அவரது இடத்தில் தானல்லவா, கூட்டத்துக்குச் செல்ல நேரும்! அந்த

எம்டி இருக்குமிடம் தேடிப்போய், அவன் கண்களில் பட்டு, மறுபடியும் ஏதாவது பூதம் கிளம்பிவிடக் கூடாதே!

முத்துக்கிருஷ்ணனுக்கு டெலிபோன் பண்ணி, அவரது வரவு பற்றிக் கேட்கலாமா என்று சாருமதி யோசிக்கும் போது, அவரே அவளை போனில் அழைத்துப் பேசினார்.

தாயின் உடல்நிலை காரணமாக, வார இறுதி வரை, அன்னையுடனேயே இருந்துவிட்டு, திங்களன்று வேலைக்கு வரப் போவதாகவும், அதனால், அன்றைய கலந்துரையாடல் கூட்டத்துக்கு, அவருக்குப் பதிலாக, அவருடைய செயலாளரான சாருமதி செல்ல வேண்டும் என்றார், அவர்.

சாருமதி அஞ்சிக் கொண்டிருந்தாலும், இதற்காகத் தானே? எல்லா விவரமும் அறிந்த அவரே, இப்படிக் கூறலாமா என்று முன்பு, நடந்ததை மறைமுகமாக, அவருக்கு நினைவுறுத்தினாள்.

ஆனால் முத்துக்கிருஷ்ணனுக்கு, இப்போது வாராந் திரக் கூட்டம்தான், பெரிதாகப் பட்டது போலும்.

"எல்லாம் அவரவர் நடந்துகொள்கிற விதத்தில்தான் இருக்கிறது என்று, இத்தனை மாதங்களில் அவள் புரிந்து கொள்ளவில்லையா?" என்று, சற்றுக் கண்டிக்கும் தொனியில் என்றாலும், அவரும் குறிப்பாகவே கூறி விட்டு, அன்றைய கூட்டத்தில் காட்டப்பட வேண்டிய கணக்குகள், பிற பிரச்சினைகளைப் பற்றிப் பேசலானார்.

தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது, சாருமதிக்கு.



ஏனெனில் அப்போது பார்த்துதான் அவளது தளத்தில் ஒருத்தி திருமணத்துக்கு ஒரு வாரம் விடுமுறை கேட்டிருந்தாள். அடுத்த மாதம் 'ரிட்டையர்' ஆகும் ஒருவர், பல ஆண்டுகளாகச் சேர்த்து வைத்திருந்த விடுமுறையை, இப்போது மட்டும் எடுப்பதாக இருந்த ஒரு பெண், குழந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக, நிரந்தரமாக வேலையை விடுவதாகக் கடிதம் எழுதி யிருந்தாள்.

இவர்களுக்குப் பதில், ஆள் போட வேண்டும்.

இதற்கும் மேலாக, சில தங்கிவிட்ட பொருட்களின் விற்பனையைக் கூட்டுவதற்காக, சில உத்திகளை எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தது.

அத்தனையையும் மோகனசுந்தரத்தின் கவனத்தைத் தன் பேரில் ஈர்க்காமல், அவள் எப்படிச் செய்வது?

கஷ்ட காலம் இப்படி வந்து சேர வேண்டுமா?

ஆனால், மனம் இருந்தால், மார்க்கம் உண்டு என்பது போல, இதையே யோசித்துக் கொண்டே இருந்தவள், சட்டென துள்ளிக் குதித்தாள்.

சூப்பர் மார்க்கெட்டின் அலுவலர்களுக்காக, அங்கே ஒரு தனிக் குழுவே இருந்தது. தனி இலாகா, மனித வளம் பற்றிப் பயின்று பட்டம் பெற்ற ஒரு பெண் அதிகாரியின் தலைமையில், அது இயங்கியது.

சரியாகச் சொல்லுவது என்றால், அவளது தளத்தின் பிரச்சினை, திருட்டோ, சோம்பேறித்தனமோ, சண்டைச் சச்சரவுகளோ அல்ல. நியாயமான சில காரணங்களுக் காகப் பதில் ஆட்களை நியமிப்பது மட்டுமே.

இதைச் சாருமதி, கூட்டத்தில் பேச வேண்டியதே இல்லை. தேவையான குறிப்புகளை எடுத்துப் போய்,

அலுவலர்களுக்கான துறை அதிகாரியிடம் கொடுத்து விட்டு, வந்தால் விஷயம் முடிந்தது.

அதேபோலக் கொடுத்துவிட்டும் வந்தாள். இனி, அந்த அதிகாரியின் தலைவலி!

விற்பனை விஷயத்தையும் அவை போன்ற மற்ற தளத்தினர் பேசி ஆராய்ந்து முடிவு கண்டபோது, 'கும்பலோடு கோவிந்தா'வாக சத்தத்தை அடக்கிப் பேசி, அவள் சேர்ந்து கொள்ள, தனிப்படத் தெரியாமலே கூட்டத்தைச் சமாளித்துவிட்டாள்.

கூட்டம் முடிந்ததும், டீ, பிஸ்கட்டுக்காகப் பயன்படுத்திய தட்டு, கப்புகளை மற்றவர்களோடு சேர்ந்து ஒதுக்கிவிட்டு, அவர்களுடனேயே சேர்ந்து, அரவமின்றி அங்கிருந்து வெளியேறிவிட முனைந்தால், "சாருமதி!" என்று அவளைப் பெயர் சொல்லி அழைத்தான் "உன்னுடன் பேச வேண்டும் எனவே, நீ பிறகு போகலாம்."

ஒரு கணம், அவளோடு சேர்ந்து எல்லோருமே அசைவற்று நின்றார்கள் என்றாலும், மறுகணமே அது மாறிவிட்டது.

கால்கள் வேரோடியது போல, சாருமதி மட்டும் அப்படியே நிற்க, மற்றவர்கள் வழக்கம்போல அவர்களுள் பேசியபடி, எம்டியிடம் ஒரு மரியாதை விடைபெறலுடன் அங்கிருந்து வெளியேறலானார்கள்.

அவளும் அங்கே நின்று கொண்டிராமல், சக அலுவலர்கள் முகத்தில் இது வழக்கம்தானே என்பது போன்ற ஒரு அறிந்த பாவனையும் இல்லாதிருக்குமானால், ஒரு வேறுபாடும் தெரிந்திராது.

ஆனால், இரண்டுமே இருந்ததால், சாருமதி உள்ளூரக் கூசிக் குறுகிக் கொண்டிருந்தாள்.



எல்லாம் அவரவர் நடந்து கொள்கிற விதத்தில் இருக்கிறதாமே! இப்போது அவள் என்ன மாதிரி நடந்ததில், இவன் அவளை இப்படித் தாமதிக்க வைத்திருக்கிறானாம் என்று. அவளுக்கும் தங்கைக்கும் எத்தனையோ உதவிகள் செய்திருக்கும் பெரியவர் முத்துக்கிருஷ்ணனிடமே, அவளுக்கு எரிச்சல் வந்தது.

எரிச்சலும் அவமானமுமாக உள்ளூரக் கனன்றாலும், அதைக் காட்டிகொள்ளாமல் நிமிர்ந்து நிற்கும் முயற்சியாக இருந்தவளிடம், மோகனசுந்தரம் வந்து நின்றான்.

"நீ ஏதாவது என்னிடம் சொல்ல வேண்டுமா?" என்று சன்னக் குரலில் வினவினான்.

ஒரு கணம் சாருமதிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் என்ன சொல்லக் கூடும் என்று இவன் எதிர்பார்க்கிறான்?

திகைத்து விழித்தவளுக்கு, சற்று முன் வெளியே சென்ற சக அலுவலர்களின் முகபாவனை நினைவு வர, சட்டெனக் கன்றி சிவந்தாள்.

## 2

குன்றலும் கோபமுமாகக் கன்றிச் சிவந்தபோதும், இது என்ன பைத்தியக்காரத்தனம் என்றும் அவளுக்குத் தோன்றியது.

அவனால் எப்படி இப்படி நினைக்க முடியும்?

மோகனசுந்தரம் எதைப் பற்றிப் பேசுகிறான் என்று, ஓரளவு இலகுவாகவே சாருமதியால் ஊகிக்க முடிந்தது. ஆனால், இப்படி ஒரு கருத்து. அவனுக்கு எப்படி வந்தது என்றுதான் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்த நிறுவனத்தின் வாராந்திரக் கூட்டம்! அவளுக்கு மேல் அதிகாரி ஊரில் இல்லாததாலேயே, அவள் பங்கேற்றிருக்கிறாள், அதுவும் பட்டப் பகலில், பதினைந்து பேரோடு சேர்ந்து.

என்னவோ, அவன் தனியாக இருக்கும் மதன மாளிகையில், கிறக்கத்துடன் அவனை நாடி, அவள் வந்தது போல, இது என்ன பேச்சு?

ஒரு நாள், முதலாளியைப் பக்கத்தில் பார்த்தால், உடனே காலடியில் விழுந்து விடுவாளாமா?

இந்த ஆறு மாதங்களாக, அவள் எப்படி ஒதுங்கிப் போனாள் என்று, இந்த மகா மன்மதனுக்கும் தெரியும் தானே? அதிலேயே, அவளது மனம், அவனுக்குப் புரிந்திருக்க வேண்டுமே!

ஆனால், அவனையும், அவளையும் தனியே விட்டுப் போனவர்களின் எண்ணம்? அதுவும், இதேதானே?

அப்படியானால்...

இந்தப் பெரிய ஹாலில், அவனும், அவளும் மட்டும் தனியாக இருக்கும்போது, இப்படித்தான் நடக்கும் என்று, அவர்கள் எல்லோருக்குமே நிச்சயமா?

முதலாளி மோகனசுந்தரத்திடம், அவ்வளவு 'நம்பிக்கை' போல!

என்னவோ, முத்துக்கிருஷ்ணன் அங்கிள் பெரிதாகச் சொன்னாரே, யாரையும் எம்டி விரட்டிப் பிடித்ததாகவோ கட்டாயப்படுத்துவதாகவோ கேள்வி இல்லை என்றாரே!

மற்றவர்களின் பார்வைக்கும், இவனது கேள்விக்கும் வேறு என்ன பொருள்?



அதிலும், என்ன நகாசாகக் கேட்கிறான்? அவள் வந்து, அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா என்று?

அதாவது, அவள், தானாக வந்து காலில் விழ வேண்டுமாம்! அப்போதுதானே, கட்டாயப்படுத்தியது இல்லை என்கிற நற்சான்று, அங்கிள் சொன்னது போலப் புகழ் கிடைக்கும்!

பெண்கள், தானாகவே வந்து விழுகிறார்களாம்! எப்படி என்று, இப்போதல்லவா தெரிகிறது! ரொம்பவே கெட்டிக்காரன்தான்!

ஆனால், கெட்டிக்காரத்தனம், அவனுக்கு மட்டும் சொந்தமானது அல்லவே!

எனவே அவனை நிமிர்ந்து நேராகப் பார்த்து "எதுவும் சொல்ல வேண்டியது இல்லை, சார்" என்று நிரடற்ற குரலில் தெளிவாகப் பதில் சொன்னாள்.

மோகனசுந்தரம் எதிர்பாராத பதில் போலும். ஆனாலும் அப்படி யாருமேவா இவனை எதிர்த்து நின்றிருக்க மாட்டார்கள்? நம்பக் கடினமாகத்தான் இருந்தது, சாருமதிக்கு.

அவனுக்கும் அதே நிலைதான் போலும், லேசாகப் புருவம் சுருக்கி யோசித்தவன் முகம் உடனே தெளிந்தது.

"நீ தவறாக, வேறு மாதிரி எண்ணிவிட்டாய் என்று தோன்றுகிறது. இது நம் விஷயம் அல்ல. ஆனால் அப்படி... முதலில் இதைச் சொல். நீ, உன் சகோதரியுடன் கடைசியாக எப்போது பேசினாய்!" என்று விசாரித்தான் மோகனசுந்தரம்.

இப்போது இன்னொரு விதமாகத் திணறிப் போனாள், சாருமதி.

இவன் எதற்குத் தங்கையைப் பற்றிக் கேட்கிறான்? அவள் என்ன பண்ணி வைத்தாள்? இப்போதெல்லாம் ஒழுங்காகத்தானே வேலைக்குப் போகிறாள்?

முதலில், அவனது கேள்விக்குப் பதிலைத் தேடினாள். பாலாவுடன் அவள் கடைசியாக எப்போது பேசினாள்?

அன்று காலையில்தான், சாருமதி, தங்கை சாருபாலாவுடன் பேசியது.

பேசியது என்று சொல்வதைவிட, தூக்கத்திலிருந்து அவளை எழுப்ப, மூத்தவள் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாள் எனலாம்.

ஏற்கனவே, வேலைக்கு மட்டம் போடுகிறாள். தாமதமாக வருகிறாள் என்று பாலா மீது குற்றச்சாட்டு இருந்தது. பாலா வேலை செய்த தளத்து நிர்வாகி, சாருமதியிடமே இது பற்றி விசாரிக்குமாறு கூறியிருந்தார்!

அப்போது தமக்கை கேட்டதற்கு, பாலா சொன்ன பதில் இதுதான்.

''என்ன செய்வது? உனக்கு சுயநலம்! நீ மட்டும் நல்ல பெயர் எடுத்தால் போதும் என்று, என்னை எழுப்பி விடாமலே, சீக்கிரமாக எழுந்து, கிளம்பி வேலைக்குப் போய்விடுகிறாய். அன்றைக்குத் தாமதமாக விழித்து விட்டு, அவசர அவசரமாகக் கிளம்பிப் போயும், திட்டுத்தான் வாங்கிக் கட்டிக் கொண்டேன். அதனால்தான், தாமதமாக வேலைக்குப் போவதற்குப் போகாமலே இருந்து விடுவது மேல் என்று, திரும்பப் படுத்துத் தூங்கி விடுகிறேன்!''

எங்கே போய் முட்டிக் கொள்வது?

அன்றிலிருந்து, தங்கையை எழுப்பி விடுகிற வேலை ஒன்று, சாருமதிக்கு வந்து சேர்ந்தது. குறைந்த பட்சமாக



பொன்னான பதினைந்து நிமிஷங்களை, இதற்காக ஒதுக்கிக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. ஆனாலும் பாலா ஒழுங்காக வேலைக்குப் போவதற்காகக் கஷ்டப்பட்டேனும், சாருமதி அதைச் செய்து கொண்டிருக்கிறாள். அவளும் போகிறாள்.

எனவே, அந்த வகையில், பாலாவைக் குறை கூற ஏழியில்லை.

ஆனால், இதில் வேறே ஏதோ இருக்கிறது. இந்த எம்டி, பாலாவை எப்போது பார்த்தாய் என்று கேட்கவில்லை. எப்போது பேசினாள் என்கிறான்.

பேசியது எப்போது என்றால்... அதுவும் அப்போது தான்.

இடத்தைக் கொடுத்தால், மடத்தைப் பிடுங்குகிறவள், சாருபாலா.

தமக்கை தனக்காகப் பார்க்கிறாள் என்று தெரிந்ததும், அதை இயன்ற அளவு பயன்படுத்திக் கொண்டாள்.

பல் துலக்கும் பிரஷ்சிலிருந்து, குளித்துவிட்டுப் போட உள்ளாடை, தலை வாரும் சீப்பு, எல்லாம் தமக்கையே எடுத்து வைக்கச் செய்வாள்.

அன்றைக்கு எதை அணிவது என்று, ஒவ்வொன்றாக உடம்பில் வைத்துப் பார்த்து, மடித்ததை மீண்டும் கலைத்து வீசுவது வேறு.

உபயோகித்துவிட்டு, எடுத்த இடத்தில் வைக்காமல், அங்கங்கே போட்டு விடுவது...

இதற்கு மேல், அறையை ஒழுங்கு படுத்துவது வேறு!

ஒழுங்கு படுத்தாமல் விடவும், சாருமதிக்கு மனம் வராது. அவளுக்குத்தான் இருக்குமிடம் சுத்தமாக,

அழகாக இருக்க வேண்டும். தங்கையிடம் முட்டிக் கொள்வதற்குப் பதிலாகத்தானே செய்து விடுவாள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எதிர்காலத்தில் பயன் படக்கூடும் என்று இருவருமே முடிந்த அளவு சேமிக்க வேண்டும் என்று, சாருமதி, பாலாவிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். சொல்லும்போது, சரிசரி என்று சாருபாலா தலையாட்டத்தான் செய்வாள்.

ஆனால், சின்னவளுக்கு, வாரத்துக்கு ஒரு நாளாவது, சினேகிதப் பட்டாளத்தோடு, வெளியே சுற்றியாக வேண்டும்.

செலவை எல்லோரும் பங்கு பிரித்துக் கொள்வது தான். ஆனால் அப்படிச் சுற்றும்போது, வாங்கித் தின்கிற தீனி, சும்மா கௌரவத்துக்காக எல்லோருடனும் சேர்ந்து வாங்குகிற பொருட்கள், போக்குவரத்துச் செலவு... எல்லாம் கணக்கிட்டால், அக்கா, தங்கை இருவருக்கும் பத்து நாட்களுக்குக் கட்டி வருகிற தொகை செலவாகி இருக்கும்.

எடுத்துச் சொன்னால், ''அம்மா, அப்பா இருந்தால்...'' என்று அழுவாள்.

''அம்மா, அப்பா நினைவாகவே இருக்கிறது. வேதனையை மறக்கத்தான் சினேகிதர்களோடு சுற்றப் போனேன்'' என்று அவள் கூறும்போது, பெரியவர்களுக்கே, பாவம் என்று தோன்றிவிடும்.

அவள் இரண்டு வயது மூத்தவள், பொறுப்பு தெரிந்தவள். அவளுக்கே, பல சமயம் பெற்றோர் நினைவு வந்து, பாடாய்ப் படுத்திவிடும். ஏதாவது ஒரு வேலையில் மனதை ஈடுபடுத்தி, சமாளிப்பாள்.



பாலா வீட்டுக்குக் கடைக்குட்டி, பெற்றோருடைய செல்லம்! அவளுக்கு எப்படி இருக்கும்? பாவம்தானே!

சாருமதி அளவு புத்தி இல்லை என்று, முத்துக்கிருஷ்ணன் விரைவிலேயே கண்டு பிடித்து விட்டதால், அவளைக் கம்ப்யூட்டரில் பில் போட்டுப் பணத்தை வாங்கிப் போடும் வேலையில்தான் சேர்த்து விட்டார்.

இருவரும் தங்குவதற்காக பணிபுரியும் இடத்துக்கு அருகிலேயே, வேலை பார்க்கும் மகளிர் தங்கும் விடுதி ஒன்றில், சாருமதி ஓர் அறை ஏற்பாடு செய்தது குறித்து அவருக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், அறையின் வாடகை, உணவுக்கான செலவு எல்லாவற்றையும், இருவரும் சமமாகவே பிரித்துக் கொள்ள வேண்டும் என்றும், அவர் திட்டம் செய்திருந்தார்.

அப்போதைக்கு தலையாட்டியபோதும், சாருபாலா ஒரு போதும், தன் பங்கை முழுதாகக் கொடுத்ததே கிடையாது எனலாம்.

பலமுறை இட்டு நிரப்பிக் கொடுத்தபோதும், சின்னவளின் பொறுப்பற்ற தன்மை தாங்காமல், வெகு சில சமயங்களில், பெரியவள் பொறுமையிழந்து கத்தி விடுவதும் உண்டு.

அன்று, அப்படிப்பட்ட நாளாக இருந்திருந்தது.

விடுதிக்குப் பணம் கட்டுவதற்குப் பத்தாம் தேதி தான் கடைசி நாள். தன் பங்கை, இன்று தருகிறேன், நாளை தருகிறேன் என்று தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்த சாருபாலா, காலையில் வழக்கமாக அடிக்கிற கூத்தையெல்லாம் அடித்து முடித்தாள்.

அறையை விட்டுக் கிளம்புமுன், விடுதிக்குக் கட்டப்பட்ட பணத்தைக் கேட்டபோது, ஏதோ பெரிதாகக் கதை சொன்னாள்.

ஓர் அழகான கைப்பையாம், விட்டால், மறுபடியும் அதேபோலக் கிடைக்கவே கிடைக்காதாம். அதனால், இருந்த பணத்தையெல்லாம் போட்டு, அதை வாங்கி விட்டாளாம். இப்போது அந்த மாதத்தில் மிச்ச நாளை ஓட்டவே, கடன் வாங்குகிற நிலையாம்!

''இதில் விடுதிக்கு வேறு கட்டு என்றால், பணத்துக்கு எங்கே போவது? சும்மா, முழுதும் நீயே கட்டிவிடு'' என்று மேம்போக்காகச் சொன்னது மட்டுமின்றி ''நான் அலங்காரம் செய்து முடிக்கும்முன், என் பழைய கைப் பையில் உள்ளதை எல்லாம் இதற்கு மாற்றி வைக்கா, நீதான் தயாராகி விட்டாயே!'' என்றாள் பாலா சர்வ சாதாரணமாக.

'ஒட்டகத் துரும்பு' போல ஆகிவிட, சாருமதி பொங்கி விட்டாள்.

பொறுமையில்லாதவள், முன்பின் யோசியாத முட் டாள், அது இது என்று திட்டிவிட்டு, ''இது கடைசித் தடவை. இன்னொரு தரம் இப்படிச் செய்தால், நான் வேறு அறை பார்த்துக் கொண்டு போய் விடுவேன். அப்புறம், முழுசும் நீதான் கட்ட வேண்டியிருக்கும், ஜாக்கிரதை'' என்று மிரட்டினால், அதைக் கொஞ்சமும் லட்சியமே பண்ணவில்லை சின்னவள்.

''ஐயோ! சும்மாக் கத்தாதேக்கா. நீ போடுகிற இறைச் சலில் எனக்கு வேகமாக நகங்களுக்குப் பாலீஷ் போட முடியவில்லை. நீ வாயை மூடிக் கொண்டிருக்காவிட் டால், நான் வேலைக்குத் தாமதமாகத்தான் போக நேரும்'' என்று ஒரு மறைமுகமான மிரட்டலுடன் அவள் நிதானமாக நகத்துக்குச் சாயம் தீட்ட, தலையில் அடித்துக் கொண்டு அங்கிருந்து அகன்றாள் சாருமதி.



அதுதான், பாலாவுடன் அவள் கடைசியாகப் பேசியது.

இதில் முதலாளி மனிதனிடம் சொல்வதற்காகப் பெரிதாக என்ன இருக்கிறது?

அவளிடம் இருந்தே வரட்டும் என்பதுபோல, அவளது முகத்தில் பார்வையைப் பதித்து அசையாமல் நின்ற வனிடம்தான், இப்போது சாருமதிக்குக் கோபம் வந்தது.

ஒன்றுமில்லாத, உப்புப் பெறாத விஷயத்துக்கு அவளை நிற்க வைத்து, மற்றவர்கள் அவளை மட்டமாக நினைக்கும்படி செய்திருக்கிறான்.

இது, அவனது எண்ணம் நிறைவேற, ஒரு வித்தியாச மான அணுகுமுறை போலும்! ஆனால், அதற்கு, அவன் வேறு ஆளைப் பார்க்க வேண்டும்!

குரலை உணர்ச்சியற்றதாகச் செய்துகொண்டு ''வழக்கம்போலக் காலையில்தான், சார் அவளை எழுப்பி விட்டபோது பேசியதுதான். அவ்வளவுதானே, சார்? நான் போகலாம் அல்லவா?'' என்று கேட்டாள் அவள்.

என்னதான் மரக்கட்டைத் தனமாகப் பேச முயன்ற போதும், குரலில் சிறு ஏளனம் கலப்பதை, அவளால் தவிர்க்க முடியவில்லை.

இப்படியெல்லாம் பெயரைக் கெடுப்பதன் மூலம், என்னை மடக்கிவிட முடியும் என்று நினைத்தாயாக்கும் என்ற ஏளனம்.

அவனும் புரிந்து கொண்டான் என்பது கண்களின் சிறு சலனத்தில் புரிய, சற்றே படபடப்பாய் உணர்ந்தாள் அவள்.

அவள் கண்டு கொண்டாள் என்பதற்காகத் திட்டத்தை மாற்றுவானா? அல்லது அதையே தொடர்வானா?

வெளிப்படையாக எதையும் காட்டிக் கொள்ளாமல், மோகனசுந்தரம், தன் விசாரணையைத் தொடர்ந்தான். ''அது, நீங்கள் தங்கும் விடுதியில், பிறகு இவ்வளவு நேரத்தில்? மறுபடி பேசவே இல்லையா?''

என்ன விடாத தொணதொணப்பு என்று எரிச்சல் வந்தது அவளுக்கு. சீக்கிரமாக இங்கிருந்து வெளியே போய், ஓரிருவர் கண்ணில் பட்டாலும், அனைவரின் தப்பு எண்ணமும் நீங்கிவிடும். ஆனால் அதற்கு, இவன் இடம் கொடுக்கக் காணோமே!

அதுதான் நோக்கம் என்கையில், வேறெதை எதிர் பார்ப்பது?

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''வேலைக்கு வந்தால், மதியம் ஒரு மணி வரை, எங்களுக்கு வேலை நேரம், சார். வேலை நேரத்தில், நானோ, தங்கையோ, ஒருவரையொருவர் சந்திக்க முயன்றதில்லை. உணவு நேரத்தில் அவள் கூடச் சேர்ந்தவர்களுடன் காண்டீனுக்குப் போய்விடுவாள். நான் விடுதியில் கட்டித் தருவதை கொண்டு வருவதால், தளத்து அலுவலர்களின் தனிப் பகுதியிலேயே சாப்பிட்டு விடுவேன். அதனால், அப்போதும் பேச இயலாது. வேலை முடிந்து, விடுதிக்குச் சென்ற பிறகுதான். எதுவானாலும் பேசுவோம்'' என்று வேகமாக விளக்கம் கொடுத்தாள் சாருமதி.

அப்போதும் ''நேரில் பேச முடியாதுதான். ஆனால் செல்போனில்? அப்படி உரையாடுவது உண்டுதானே? இன்னும் பேசியிருப்பீர்களே?'' என்று விடாமல் வினவினான் மோகனசுந்தரம்.



வேலை நேரத்தில் செல்போனில் சொந்தப் பேச்சு பேசுவது தடை செய்யப்பட்டிருக்கையில், இது என்ன அசட்டுக் கேள்வி என்று இருந்தது. சாருமதிக்கு எப்படியாவது, அவளை மாட்டி வைக்க நினைக்கிறானா?

ஆனால், மற்றவர்களுக்கு மறைத்து, பாலா பேசுவது, அவளுக்கும் தெரியும். அது பற்றி எச்சரிக்கை செய்தால், அலட்சியமாக 'உச்'சுக் கொட்டுவாள். அவளையெல்லாம் யாராலும் பிடிக்க முடியாதாம்! ஆனால் விதியை உடைப்பது தமக்கைக்குப் பிடிக்காது என்பதால், அவளோடு பேசுவதில்லை.

இவனது கேள்வி, சகோதரிகள் இருவரும் பேசுவது பற்றித்தானே?

''இல்லவே இல்லை சார். அப்படிப் பேசக்கூடாது என்று நிறுவனக் கட்டுப்பாடு இருப்பது எனக்குத் தெரியும், சார். அத்தோடு அடிக்கொரு தரம் பேசிக் கொண்டிருக்கிற பழக்கமும், எங்களுக்குக் கிடையாது. அதுதான். இரவு முழுதும் ஒரே அறையில்தான் இருக்கப் போகிறோம். அதற்குள், பேசத் தேவை என்ன, சார்? ஒன்றுமில்லையே.''

''இருக்கிறதே!'' என்று ஒற்றை வார்த்தையாய் அவன் சொன்ன விதத்தில், சட்டென மிரண்டு போனாள் சாருமதி.

''சா...ர்?''

அவளது முகத்திலிருந்து, இப்போதும் அவனது பார்வை விலகவில்லை.

பார்வையை அகற்றாமல், ''நன்றாக யோசித்துச் சொல்லு, சாருமதி. நேரிலோ, போனிலோ சாருபாலா உன்னிடம் பேசவே இல்லைதானா? காலையில் அலுவலுக்கு வந்த

பிறகு, நீ அவளைப் பார்க்கவே இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

பேச்சா? பார்வையா?

இவன் வேறு என்னவோ கேட்கிறான். தப்பாக எதையும் சொல்லிவிடக் கூடாது!

யோசித்து, ''பார்த்தேன், சார்'' என்றாள் சாருமதி.

முதலாளியின் பார்வையில் கூர்மை கூடுவது, நன்றாகவே தெரிந்தது. ஆனால், காரணம் புரியாது, ''மதியம் நான் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவிவிட்டு, எட்டிப் பார்த்தபோது, காண்டீனில் உணவு முடிந்து, பாலா... என் தங்கை சாருபாலா திரும்பிப் போவதைப் பார்த்தேன். எங்கள் தளத்து ஜன்னல் வழியே, கீழே காண்டீன் வாசல் தெரியும்'' என்று முடித்தாள்.

சாப்பிடப் போன இடத்தில், பொழுது போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விடாமல், பாலா சரியான நேரத்துக்கு வேலைக்குப் போகிறாளா என்று, சாருமதி அவ்வப்போது கவனிப்பது உண்டு. ஆனால், அந்த விளக்கம் இவனிடம் சொல்லத் தேவையில்லைதானே?

''ஓ!'' என்றான் அவன். ''அதாவது, அவள் உன்னுடன் பேச முயற்சிக்கவே இல்லை... பேசவுமில்லை என்கிறாய்!''

பாவி, பாவி! அதைத்தானேய்யா, இவ்வளவு நேரமும், திரும்பத் திரும்பச் சொல்லித் தொலைத்திருக்கிறேன். இன்னும் எத்தனை தரம் இதையே கேட்டு, என் நேரத்தை வீணாக்குவாய்? ஆனால், என்ன விதமாக நீ கேட்டாலும், என் பதில் இது ஒன்றேதான் என்று ஆத்திரத்



துடன் நினைத்தாலும், அதை அப்படியே சொல்ல முடியாமல், ''ஆமாம் சார்'' என்றாள் சுருக்கமாக.

''ம்ம்ம்...''

இன்னமும் ஒத்துக் கொள்ள முடியாதவன் போல, அவன் யோசிப்பது போலக் காட்டவும் சாருமதி பொறுமையிழந்தாள்.

இவன் இப்படியே இன்னும் எவ்வளவு நேரத்தை, வீணாக்கப் போகிறான்? மற்றவர்கள், அவளை ஒரேடியாகக் கழிசடை என்று எண்ணுமளவுக்கா?

சட்டென முடிவு செய்து ''விஷயம் இதுதான் என்றால், என் பதிலைச் சொல்லியாயிற்று, சார். உண்மை அதுதான் என்பதால், இன்னும் எத்தனை தரம் கேட்டாலும் மாறாத பதில், அதனால், நான் போகிறேன்'' என்று கையோடு கொண்டு வந்திருந்த குறிப்புப் புத்தகம், பேனா, போன்ற பொருட்கள் அடங்கிய பையை எடுத்தாள்.

''பொறு...'' என்று முதலாளி கை நீட்டித் தடுக்கவும், சாருமதி விதிர் விதிர்த்துப் போனாள்.

'என்ன இது? இவன் இப்படி நடக்க மாட்டான் என்று அங்கிள் சொன்னாரே!'

விழியகல அவள் நோக்கும்போதே, அவன் சொன்னான் ''உன் தங்கை ஒரு பெரிய தப்பு செய்திருக்கிறாள். அது பற்றி உண்மையறியத்தான். இத்தனை கேள்வியும்'' என்றவன், தொடர்ந்து சாருபாலா செய்த பிழை பற்றிக் கூறினான்.

கண்ணை இருட்டிக் கொண்டு வர, சற்று நேரம், பேச்சு மூச்சு எல்லாம் நின்று போயிற்று, சாருமதிக்கு!

# 3

எவ்வளவு நேரம், சாருமதி அப்படிக் கல்லாய் உறைந்து நின்றாளோ, யாரோ ''சாருமதி!'' என்று அழைக்கவும், அவளுக்கு மீண்டும் சுற்றுப்புறம் தெளிவாயிற்று.

யாரோ என்ன? அழைத்தவன் மோகனசுந்தரம்தான், எம்டி. முதலாளி!

ஆனாலும் முதலாளியாய், என்ன மாதிரிக் குற்றம் சுமத்திவிட்டான்.

அவளுடைய தங்கையைப் போய்... பாலாவுக்கு நிறைய ஆசைகள் உண்டுதான். பொறுப்பும் கிடையாது அவ்வளவே, அவளைப் போய் திருடி என்பதா?

தந்தையுடைய நினைவு வந்தது. சாருவுக்கு, சிவபாலன் மக்களுக்குக் கொடுக்கத் தெரியுமே தவிர, சுருட்டுவது, கற்றுக் கொடுத்தாலும், வராது!

தன்னையறியாது தலையைச் சிலுப்பி ''பொய்! முழுப்பொய்! யாரோ இட்டுக் கட்டிய கதை'' என்றாள் சீற்றத்துடன்.

ஓரத்து மேஜை மேல் இருந்த தண்ணீர் பாட்டில்களில் ஒன்றை எடுத்து வந்து, சாருமதியின் எதிரே வைத்தான் அவன் ''உட்கார், உட்கார்ந்து, கொஞ்சம் தண்ணீர் குடி. நடந்த விஷயத்தை நான் சொல்கிறேன். உன் அபிப்பிராயத்தை, அப்புறம் சொல்லு.''

சில வினாடி நேரம், விறைப்பாக நின்றவள், சட்டென அமர்ந்து, பாட்டிலைத் திறந்து, வேகமாக நாலைந்து



மடக்கு நீரை அருந்தி, பாட்டிலை வைத்துவிட்டு, அவனைப் பார்த்தாள்.

அவனும் ஓர் இருக்கையில் அமர்ந்து சொல்லலானான் ''ஸ்பாட் செக்'' பற்றி, உனக்குத் தெரியும். இன்று மதியம் மூன்று மணிக்கு, உரிய அதிகாரிகள் திடுமென வந்து, பணம், பொருள் கணக்குகளைச் சரி பார்த்தபோது, சாருபாலாவின் பொறுப்பில் இருந்த பணப் பெட்டியிலிருந்து, ஒன்றரை லட்ச ரூபாய்க்கும் மேலாகக் குறைந்திருக்கிறது. மாதத்தின் முதல் வாரத்து விற்பனை. சும்மாவே, யாருடனாவது பேசிக் கொண்டு வேலையை மெதுவாகச் செய்கிறாள் என்று, அவள் மேல் ஒரு புகார் இருக்கிறது. அதற்காகத் தளத்து நிர்வாகி, அவளைக் கண்டித்தும் இருக்கிறார். ஆனால் இது பெரிய குற்றம். அவளைக் கண்டிப்பது மட்டும் போதாது என்று, என்னிடம் கூட்டி வந்தார்கள். விவரம் கேட்டால், தெரியவில்லை என்று மட்டும் சொல்கிறாள். ஆனால் நிறையப் பணம் வந்ததை ஒப்புக் கொள்கிறாள். பில் போட்ட கம்ப்யூட்டரில் பிழைக்கு வழி இல்லை. ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மட்டும் ரப்பர் பாண்ட் கொண்டு, கட்டிப் போட்டாளாம். அதையும், எண்ணிக் கட்டவில்லை. உள்ளே இந்தக் கட்டே இல்லை. பணப் பெட்டியைப் பூட்டாமல், இடத்தை விட்டுப் போகவில்லை என்கிறாள். பின்னே, பணம் எங்கே என்று கேட்டால் அது 'தெரியவில்லை' தான். இது பெரிய குற்றம். பணத்துக்குக் கணக்குக் காட்டாவிட்டால், வேலை போவது மட்டுமில்லாமல் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்க நேரிடும் என்று சொல்லி, அவளை

விடுதிக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறேன். பணத்தை பற்றியோ, பிடிபட்டது, மேலே நடந்தவை எல்லாமே பெரிய விஷயங்கள் என்பதால், அவை பற்றியோ உன்னிடம் எப்படியும் சொல்லியிருப்பாள் என்றுதான் நான் உன்னிடம் அவ்வளவு விசாரித்தது. அவள் என்ன மாதிரி இதை உன்னிடம் கூறினாள் என்று தெரிந்தால் குற்றம் பற்றிக் கூடுதல் விவரம் அறியலாம் என்று என் ணினேன். ஆனால்... இனி நீதான் சொல்ல வேண்டும்" என்று முடித்தான் மோகனசுந்தரம்.

நீதான் சொல்ல வேண்டும் என்றால்? அதாவது உன்னையும் நம்பவில்லை என்று சொல்லாமல் சொல் கிறானா?

உண்மை பேசுகிறவர்களுக்கு, அவர்களது சொல்லை யாரும் நம்பவில்லை என்றால், மிகவும் வேதனையாக இருக்கும். சாருமதிக்கும் வலித்தது.

முகம் இறுக, "நான் சொன்னது நிஜம். பாலா என் னிடம் இது பற்றி... இதை மட்டுமல்ல, எதையும் பேசவே இல்லை. ஒருவேளை, விடுதியில் தனித்து அமர்ந்து இது எப்படி நேர்ந்திருக்கக் கூடும் என்று, அதையே யோசித்துக் கொண்டிருந்தாளோ, என்னவோ? ஏனெனில் அவளும், உரிமையற்ற பணத்தை தொடுகிறவள் அல்ல. அதிலும், இது திருட்டு நிச்சயமாக, என் தங்கை செய்திருக்கவே மாட்டாள்'' என்றாள் சாருமதி உறுதி யோடு!

லேசாகத் தோளைக் குலுக்கி "இருக்கலாம்" என்றான் மோகனசுந்தரம்.



அவள் திகைத்து நோக்கவும் "நீ நிர்வாகப் பிரிவில் இருப்பவள் நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு, வெறும் நம்பிக்கை மட்டும் போதாது என்று, உனக்கே தெரியும். உறுதியான சான்றுகள் வேண்டும். முத்துக் கிருஷ்ணன் சார் கூட, நீங்கள் அப்படிப்பட்ட பெண்கள் இல்லை என்றுதான் சாதிக்கிறார். ஆனால்..." என்று மறுபடியும் தோளைக் குலுக்கினான் அவன்.

"அங்கிளிடம், இது பற்றிச் சொல்லி விட்டீர்களா?" என்று கம்மிய குரலில் கேட்டாள் சாருமதி.

"உங்களுக்காக சிபாரிசு செய்தவர் அவர். தெரிவித்து தானே, ஆக வேண்டும்? ஆனால் எவ்வளவுதான் மூத்த அலுவலர் என்றாலும், அவரது சொல்லுக்கும் கூட, இந்த மாதிரி விஷயங்களில், அளவு மீறி மதிப்புக் கொடுக்க முடியாது. நிச்சயமான நடப்பு பற்றித் தெரிய வேண்டும். அதற்கு நிரூபணமும் வேண்டும். நீ உன் தங்கையிடம் விசாரித்துப் பார். என்ன நடந்திருக்கும் என்று, தெளிவாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய். சாருபாலா ஏதாவது கொஞ்சம் விவரம் தெரிவித்தாலும், அந்த வழியில் தொடர்ந்து விசாரிக்க, நிறுவனம் ஏற் பாடு செய்ய முடியும். சிசிடிவியிலும், அவள் ஓரிரு வரிடம் பேசிச் சிரிப்பது தெரிகிறதே தவிர, வேறு எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் கவனி சாருமதி. இது பண விவகாரம். அதிக அவகாசம் கொடுக்க முடியாது'' என்றவன், தன் செல்போனை எடுத்து எண்ணைத் தட்டியதோடு, 'ஸ்பீக்கரை'யும் ஆன் செய்தான்.

அவனுடைய செயலாளர் போனை எடுத்து "சொல் லுங்கள் சார்" எனவும் "நாளைக் காலை எட்டு முப்ப

துக்கு, மிஸ் சாருமதி சிவபாலனோடு எனக்கு ஓர் 'அ
பாயின்ட்மென்ட்' குறித்து வை" என்று உத்தரவிட்டான்
"சாருமதியோடு, அவளுடைய தங்கையும் வருவாள்
என்றான் தொடர்ந்து.

செல்லை அணைத்துவிட்டு "புரிந்ததல்லவா
நாளைக் காலை எட்டு முப்பது வரை உனக்கு அவகாசம்
அதற்குள், என் கணக்கு நேர் செய்யப்பட வேண்டும்
காலை எட்டரை மணிக்கு, சாருபாலாவோடு வந்து சே
இனி, நீ போகலாம்" என்றுரைத்துத் தானும் எழுந்தான்

சாருமதி முதலில் எண்ணிக் கலங்கியது போல அல்
லாமல், முழுக்க முழுக்க நிறுவனத்து விவகாரம். ஆனால்
இதையும்தான் யாரிடம் போய்ச் சொல்வது?

யாரிடமும், எதையும் சொல்லித் தெளிய வைக்கும்
எண்ணம் இல்லாமல், ஓர் இயந்திரம் போல நடந்து, தன்
இடம் நோக்கிச் சென்றாள், சாருமதி!

சூப்பர் மார்க்கெட் மூடுவதற்கு, இரவு ஒன்பது மணி
ஆகிவிடும் என்றாலும், நிர்வாகப் பிரிவினருக்கு, மாலை
ஆறு மணியோடு வேலை முடிந்து போகும்.

விற்பனை, கண்காணிப்பு துறைகளைச் சேர்ந்தவர்
களுக்கு, இரவு ஒன்பது மணி வரையிலும் கூட, வேலை
இழுத்துக் கொண்டு போகும். அவர்களுக்கு வேறு
மாதிரியான ஓய்வு நேரங்களை, மோகனசுந்தரம் ஏற்பாடு
செய்திருந்தான்.

இதன் காரணமாகவும், சகோதரிகள், அதிகம் பேசி
உரையாடுவது குறைந்து போயிற்று எனலாம். ஏனெ



னில், ஓய்வு நேரம் வெளியே சுற்றுவதற்கே உரியது
என்பது. சாருபாலாவின் கருத்து.

அப்படிச் சுற்றும்போது, அவள் யார் யாருடன் பழகு
கிறாளோ?

சாருபாலாவின் நட்பு வட்டத்தில் ஆண் பெண் இரு
பாலரும் உண்டு. யார் யார் எப்படிப்பட்டவர்களோ?

பெற்றவர்கள் இல்லாத நிலையில், பெரியவளாகப்
பொறுப்புடன் சாருமதி, அவர்களைப் பற்றித் தங்கை
யிடம் விசாரித்தது உண்டு.

"போக்கா! பெரிய பாட்டியம்மா மாதிரிக் கேட்காதே.
என்னைவிட, இரண்டு வயது தானே, நீயும் பெரியவள்?
வேண்டுமானால், எங்களோடு கூட, நீயும் வா. வந்து,
கண்ணுக் குத்திப் பாம்பு மாதிரி பார். அதை விட்டு,
நொட்டு, நொசுக்கு என்று கேள்வி கேட்காதே. எனக்குக்
கேவலமாக இருக்கிறது!" என்று பாலா எரிச்சல் படவே,
கேள்வி கேட்பதை விட்டு விட்டாள்.

ஆனால், தமக்கையின் கவலைப் பார்வையும், சின்ன
வளுக்கு ஆத்திரத்தையே ஏற்படுத்தியது.

"எதற்கு இப்படி 'உம்'மென்று மூஞ்சியை வைத்துக்
கொண்டிருக்கிறாய்? என்ன, இவர்களில் யாரோடேனும்
ஓடிப் போய் விடுவேன் என்று நினைத்தாயா? உன்னைப்
போலவே நானும் சிவபாலன் மகள்தான். அப்படியெல்
லாம், அப்பா பெயரை அசிங்கப்படுத்தி விட மாட்டேன்.
என் கல்யாணம், 'ஜாம்ஜாம்' என்று எல்லோரும்
அறியத்தான் நடக்கும். நீ இப்படி சிஐடி பார்வை பார்த்து
என்னை நாறடிக்காதே!" என்று கத்தவே, பெரியவள்
பேசாமல் ஒதுங்கி விட்டாள்.

அப்பா பெயரை அசிங்கப்படுத்த மாட்டேன் என்று இளையவளின் சீறலை அடிக்கடி நினைத்துப் பார்த்து மனதை அமைதிப்படுத்திக் கொள்வாள்.

இப்படிப் பேசியவள் தப்புச் செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கை!

ஆனால், இப்போது பாலா செய்திருப்பது என்ன என்று தவித்தவாறே விடுதியை நோக்கி வேகமாகச் சென்றவளுக்கு, அப்போதும் தங்கையிடம் நம்பிக்கை தான்.

இந்தப் பணத்தை பாலா தொட்டிருக்க மாட்டாள். அது நிச்சயமே. ஆனால், பணம் எங்கே போயிற்று?

வேலை முடிந்ததும், அவளும் உட்கார்ந்து, சிசிடி.வி எடுத்த படத்தை ஓடவிட்டுப்பார்த்தாள். சுற்றிச் சுழன்ற கேமரா எடுத்த படத்திலிருந்தும், ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை.

மேல் அதிகாரியிடம் திட்டு வாங்கிய பிறகும், அவ ளுடைய நண்பர்கள் சிலருடன் பேசிச் சிரித்தபடியே தான், சாருபாலா பில்லைப் போட்டுப் போட்டு பணத்தை வாங்கிப் பணப் பெட்டியின் உள்ளே வீசிக் கொண்டிருந் தாள்.

சும்மா உள்ளே வீசியவள், சற்று கவனத்துடன் அந்த தந்த நோட்டுக்களோடு பிரித்து வைத்திருந்தால், பெரிய கட்டாய் ரப்பர் பாண்ட் போட்டு வைத்திருந்த ஆயிரம் ரூபாய்க் கட்டைக் காணோமே என்று பார்க்கத் தோன்றி யிருக்கும். ஆனால் சாருபாலாவுக்கு, நண்பர்களுட னான பேச்சும் சிரிப்பும்தானே முக்கியமாக இருந்திருக் கிறது!



ஆனால், அதை நினைத்து, இப்போது என்ன வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறாளோ? கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால்?

உள்ளூர ஒரு கைப்பும், கூடவே கவலையுமாக அவர்களது அறையை அடைந்த சாருமதி, சூயிங்கத்தைக் குதப்பியபடி, காதில் 'இயர்போனுடன்' பாட்டுக் கேட்ட வாறு படுத்துக் கிடந்த தங்கையைப் பார்த்ததும், கொதித்துப் போனாள். காலையில் கிளம்பும் அவசரத்தில் வீசியெறிந்த துணிமணிகளைக் கூட, எடுத்து மடித்து வைக்கவில்லை. எல்லாம், அப்படி அப்படியே கட்டி லிலும், நாற்காலியிலும், தரையிலுமாகக் குப்பை போலக் கிடந்தன.

இவளால் சாருமதி, மோகனசுந்தரத்தின் முன்னே தலை நிமிர முடியாத அவமானத்தோடு, குன்றிக் குறுகி இருந்துவிட்டு வந்திருக்கிறாள். இதற்குத் தீர்வு என்ன என்று, அப்போதிருந்து, தவியாய்த் தவித்துக் கொண்டும் இருக்கிறாள்.

ஆனால், இத்தனைக்கும் காரணமான இவளோ, உல்லாசமாகப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறாள்!

என்னதான் பொறுப்பற்றவள் என்றாலும், தனக்கு என்ன கதி நேரக்கூடும் என்ற கவலை கூடவா இராது?

ஆத்திரத்துடன், தங்கையின் காதுகளில் மாட்டி யிருந்த 'இயர்போன்' கருவியை பிடுங்கி எறிந்துவிட்டு, பாலாவிடமே அதைக் கேட்டாள் சாருமதி.

''இந்தப் பாட்டைக் கேட்காமல், உம்மென்று முகத்தை நீட்டி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் மட்டும், பிரச்சினை சரியாகிவிடுமா'' என்று சாருபாலா கேட்கவும், பெரியவளுக்குத்தான் வாயடைத்துப் போயிற்று.

சின்னவள் சொல்வது, சரிதானே! பாலா பாட்டு கேட்டதால் கெட்டதென்ன? அன்றி, பாட்டைக் கேளா திருப்பதால், கிடைக்கப் போவதுதான் என்ன?

ஆனால், அதைப் பற்றி யோசனையே இல்லை என்றால், அந்த அலட்சியம் சரியில்லைதானே?

அருகில் அமர்த்தி, அன்று நடந்தது பற்றி விசாரித்தாள்.

ஆனால் ''அலுவலகத்தில்தான், திருப்பித் திருப்பிக் கேட்டு, போரடித்தார்கள்! இப்போது, நீ வேறா? ஆளை விடு!'' என்று கழன்று கொள்ளவே சாருபாலா முயன்றாள்.

''அந்தப் பணம் என்ன ஆயிற்று என்பது பற்றி, ஒரு சிறு விவரமாவது கிடைக்கும் வரை, உன்னைக் கேட்டுக் கொண்டே தான் இருப்பார்கள். பாலா, எனக்கும், இப்போது வேறு வழியில்லை, கேட்டுத்தான் ஆக வேண்டும்.''

''என்ன பிரயோஜனம்? மறுபடி மறுபடி கேட்டால் மட்டும், தெரியாதது தெரிந்தது ஆகிவிடுமா? வீண் நேர விரயம். அதைவிட வேறு வழியில் முயற்சி செய்து தொலைந்த பணத்தைக் கண்டு பிடிக்கலாம்!'' என்றாள் தங்கை எரிச்சலோடு.

'காலை எட்டு முப்பது வரை அவகாசம்' என்கிறான் முதலாளி. இவளானால், பேசவே தயாரில்லை. வேறு வழியில் 'முயற்சி செய்' என்கிறாள்.

யாருக்கு ஆபத்து என்று கொஞ்சமேனும் யோசிக்கிறாளா? அதட்டிப் பேசினால், இன்னமும் எகிறுவாள்.



''பாலா, தயவு பண்ணிப் புரிந்து கொள். உன் பொறுப்பில் இருந்த பணம், காணாமல் போனது என்றால், உன்னைத்தான் குற்றம் சொல்வார்கள்...''

''அதெப்படி? எனக்குத்தான், அது எப்படிக் காணாமல் போயிற்று என்று தெரியாது என்று சொல்கிறேனே! அப்புறம் எப்படி, என்னைக் குற்றம் சொல்ல முடியும்? அப்படி யாராவது சொன்னால், குடலைப் பிடுங்கி விடுவேன்!'' என்றாள் பாலா ஆத்திரமாக.

''பாலா, ப்ளீஸ்! இதைப்போல எல்லாம் உளறாதே. அவர்கள் போலீசுக்குப் போனால், பெரிய ஆபத்தாகி விடும்.''

''என்னக்கா, ஆபத்து? சும்மா எனக்குப் பூச்சாண்டி காட்டாதே'' என்றாள் தங்கை அலட்சியமாக.

''இல்லை, பாலா. அப்புறம் வழக்கு, சிறை என்று நமக்கு ரொம்பக் கேவலமாகி விடும்மா'' என்று எடுத்துச் சொன்னாள் தமக்கை.

ஆனால், சாருபாலா வேறு விதமாக எகிறினாள். ''என்னது? வழக்கும் சிறையுமா? அதற்கெல்லாம், தப்பு செய்தவர்கள்தான் பயப்பட வேண்டும். நான்தான், அந்தப் பணத்தை எடுக்கவில்லையே! அப்படியில்லை... என் மேல் தான் தப்பு என்றால், அதை, அவர்கள் நிரூபிக்கட்டும். அப்புறம் பார்க்கலாம்! அதை விட்டுச் சும்மா என் மேல் பொய் வழக்கு. அது இது என்று போனால், நான் அவர்களைச் சும்மா விட மாட்டேன். சுப்ரீம் கோர்ட்டு வரை போய், அவர்களைப் பிய்த்து உதறி விடுவேன். தெரியுமா?'' என்றாள் வீராவேசமாக.

சுப்ரீம் கோர்ட்டா? அங்கெல்லாம் போய் வழக்காட, எவ்வளவு செலவாகும் என்று, இந்த மட்டிக்கு ஏதாவது

தெரியுமா? வாய்க்கு வந்தபடி உளறுகிறாளே! இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது?

அவ்வளவு நேரம் பேசியதை விடத் தமக்கையின் கவலைப் பார்வை, பாலாவின் மனதைத் தொட்டது போலும்.

''நீ சும்மாக் கவலைப்படாதேக்கா. அப்படி யாரும், என்னைச் சிறையில் தள்ளிவிட முடியாது. முதலில் நான் தப்பு செய்ததாக, நிர்வாகம் நிரூபித்தாக வேண் டும். அது அவர்களால் முடியாது. அதனால், நாம் கவலைப்படத் தேவையே கிடையாது! தினு கூட அப்படித்தான் சொன்னான். 'நீ திருடாதபோது, எதற்குப் பயப்பட வேண்டும்? சொன்னதை மட்டும் மாற்றிச் சொல்லிவிடாதே' என்று எனக்குச் சொல்லிக் கொடுத் திருக்கிறான்'' என்று தன் திடத்துக்கான விளக்கம் கொடுத்தாள், அவள்.

''தினு? யார் அந்தத் தினு?''

இவளுக்கு மேல் ஞானசூனியமாக இருப்பான் போலத் தெரிகிறதே என்று எரிச்சலுடன் சாருமதி கேட்க, ''என் சினேகிதன்!'' என்று பெருமையாகச் சொன்னாள் சாரு பாலா ''அவன் மட்டுமில்லை, அக்கா. சோனா, சுரேஷ், சங்கர் எல்லோருமே, அப்படித்தான் சொல்லுகிறார்கள்!''

பரமார்த்த குருவுடைய சீடர்கள் போல, மட்டி, மடையன், முட்டாள், மூடனாக அல்லவா, இவளுடைய நண்பர்களும் இருக்கிறார்கள்! கவலைப்படத் தேவை கிடையாதாமா? இவர்கள் பேச்சைக் கேட்பதற்கு பாலா விலங்கை எடுத்துத் தன் கைகளில், தானே மாட்டிக் கொள்ளலாம்!



பேசுகிற பேச்சைப் பார்த்தால், அப்படித்தான் ஆகப் போகிறது என்பது, நிச்சயம்! சுப்ரீம் கோர்ட்டில், பித்து உதறுகிற யோசனையையும், இந்த வள்ளல்கள்தான் வழங்கியிருப்பார்கள்! அறிவுக் கொழுந்துகள்!

அதற்கு மேல் பொறுமையை இழுத்துப் பிடிக்க, மூத்தவளால் முடியவில்லை.

''உன் சினேகிதர்கள்தானே? உன்னைப் போல அரை வேக்காடாகத்தான் இருப்பார்கள்'' என்றாள் கடுமையான குரலில்.

''அக்கா!'' என்று முறைத்தவளிடம் ''முதலில் இந்த விஷயத்தில் உனக்கு ஆலோசனை சொல்ல, அவர் களுக்கு என்ன தகுதி இருக்கிறது! சொல்லு? முன் அனு பவமா? அல்லது, இது பற்றிய கல்வியா? ஒன்றும் கிடையாதில்லையா? அதனால், ஜெயிலில் களி தின்ன வேண்டாம் என்ற எண்ணம், கொஞ்சமேனும் இருக்கு மானால், அவர்கள் சொல்லும் இந்த அசட்டு வீராப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, நிர்வாகம் படித்த நான் சொல் வதைக் காது கொடுத்துக் கேள்'' என்ற பெரியவளின் அதிகாரக் குரலுக்குச் சற்று மதிப்பு இருந்தது.

சாருபாலா சற்றே வாயை மூடவும், மேற்கொண்டு, சட்டப்படி என்னென்ன நடக்கக்கூடும் என்று சாருமதி எடுத்துச் சொல்ல, சின்னவள், உள்ளூரக் கொஞ்சம் பயந்தும் போனாள்.

ஆனால், சாருபாலாவின் பயம், பணிவினாலும், எந்தப் பயனும் இருக்கவில்லை.

ஏதோ மாயாஜால நிகழ்ச்சியில் வருவது போல், அந்த ஒன்றரை லட்ச ரூபாய்ப் பணம் போன விதம், இரு வருக்குமே புரியவில்லை.

மதிய உணவுக்குச் செல்லும்போதுதான், ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைத் தனியே எடுத்துக் கட்டி விட்டு, சாருபாலா சென்றது. அப்போதும் பணப் பெட்டியைப் பூட்டிச் சாவியை கைப்பையில் வைத்து அதை கையோடு எடுத்துக் கொண்டுதான் சென்றாள்.

அந்த நேரத்தில் பணப் பெட்டியை அடுத்தவரிடம் ஒப்படைப்பது கிடையாது. எண்ணிக் கொடுத்து, உணவின் பின் எண்ணி வாங்குவதில், அதிக நேரம் வீணாகும் என்பது நிர்வாகத்தின் கருத்து. எண்ணிக் கொடுக்கவில்லை என்றால், பிற்பாடு கணக்கில் தகராறு வந்தால், பெரிய பிரச்சினையாகி விடும்.

எனவே, பில் போட இருக்கும் நாலு பேரும், இரண்டிரண்டு பேராகப் போய் உணவருந்திவிட்டு வருவார்கள். எப்படியும், இரண்டு பேர் பில் போட இருப்பதால், விற்பனையும் பெரிதாகத் தடைப்படாது.

சிநேகிதர்கள் ஐந்து பேரும் சாப்பிடப் போய், சேர்ந்தே திரும்பி வந்தார்கள்.

''சோதனைக்கு வரும்வரை, நாலு பேரும் கூடவே இருந்தார்களா?'' என்று சாருமதி கேட்டாள்.

அப்படி இருந்திருந்தால், அவர்களில் யாருக்கேனும், ஏதாவது தெரிந்திருக்கக் கூடும். அவர்களிடம் கேட்டுப் பார்க்கலாமே என்று அவள் யோசிக்குமுன், அப்படியில்லை என்றாள் தங்கை.

அவரவருக்கு ஏதேதோ சாமான்கள் வாங்க வேண்டியிருந்ததால், சேர்ந்தோ, பிரிந்தோ, போய், வாங்கிக் கொண்டு வந்தார்கள். ''அவர்கள் முழு நேரமும் பக்கத்தில் இருந்திருந்தால், இந்த மாதிரித் திருட்டுப் போக



விட்டிருப்பார்களா? திருடிய கழுதையை, அந்த வினாடியே பிடித்துத் தோலை உரித்திருக்க மாட்டார்களா?'' என்று வீரமாகக் கேட்டாள் தங்கை.

ஆனால், பக்கத்திலேயே நின்று, ஏதாவது பேசிச் சிரித்து, அவளது கவனத்தைக் கலைக்காமல் இருந்திருந்தால், தப்பு நடக்க வாய்ப்பே இருந்திருக்காது என்றிருந்தது, மூத்தவளுக்கு.

அதைச் சொல்லி தங்கை இருக்கும் இணக்கத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று அவள் பேச்சை அடக்கும்போதே, சின்னவளே, மறுபடியும் தொடர்ந்தாள்.

''யாரோ நடுத்தர வயது பெண் ஒருத்தி, பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருட்கள் பையை வாங்கும்போது ரொம்ப ஒட்டி, சிசிடிவி காமிராவை மறைக்கிற மாதிரி நின்றாள் என்று, தினு சொன்னான், அக்கா. ஆனால், டி.வி.யில் பார்த்தால், நடுத்தர வயதில் ஏழெட்டுப் பேர் இருந்தார்கள். தனியாக எதுவும் தெரியவில்லை. எல்லோருமே, ஒரு மாதிரி நாற்பது போலத்தான் இருந்தது. 'நீ கூட அப்படித்தானேப்பா நிற்கிறாய்' என்று நிர்வாகி அலட்சியமாகச் சொல்லி விட்டார், அக்கா எல்லோருக்கும் மேல் அதிகாரி என்கிற திமிர் அவருக்கு!'' என்றாள் பாலா கோபமாக.

இதற்கு என்ன பதில் சொல்வது? என்னவானாலும், தளத்து நிர்வாகியைத் திட்ட, சாருமதிக்கு மனமில்லை. அவளும், ஒரு தளத்துடைய நிர்வாகிக்குச் செயலாளராகப் பணி புரிகிறவள் அல்லவா? அவரது பொறுப்புகள் பற்றி, அவளுக்குத் தெரியும். அவரது அதிகாரத்தின் கீழ் இயங்கும் தளத்தில் இப்படி நடந்ததற்கு எம்.டி.யிடம் அந்த நிர்வாகியும் பதில் சொல்லியாக வேண்டுமே!

ஆனால், உடன் பிறந்தவளின் பதிலை எதிர்பாராமலே "தினுவுக்கு முகத்தில் அடித்த மாதிரி ஆகிவிட்டதுக்கா. உதவியாக இருக்குமோ என்று சொன்னால், என்னையே மாட்டி விடப் பார்க்கிறாரே என்று ரொம்ப வருத்தப்பட்டான்! பாவமில்லை?" என்று நண்பனுக்காக உருகினாள் சாருபாலா.

"பாவம்தான்!" என்று அவளுக்கு ஒத்து ஊதிவிட்டு "ஆனால் பாலாம்மா, நாம் இப்போது அவனை விட, ரொம்பப் பாவமான நிலையில் இருக்கிறோம். அதனால் முதலில் இந்தப் பிரச்சனையில் இருந்து, நாம் எப்படி மீள்வது என்று, அதைப் பற்றி யோசிப்போமா?" என்று, அந்தத் தினுவிடமிருந்து தங்கையின் கவனத்தைத் தங்களிடம் திருப்பினாள் சாருமதி.

## 4

நண்பன் தினு சொன்ன நடுத்தர வயதுப் பெண்கள் அத்தனை பேரையும், ஒவ்வொருவராக நினைவில் கொண்டு வந்து, சாருபாலா மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பார்த்தாள்.

"பச்சைச் சேலை, நீலச் சேலை, பச்சையும் நீலமும் கலந்து பூப்போட்டது. இந்த மூன்று பேரில் ஒருத்தர்தான் பணத்தைச் சுருட்டியிருக்க வேண்டும் என்று, எனக்குத் தோன்றுகிறது அக்கா. மூன்று பேருமே தினு சொன்ன நடுத்தர வயது. அவர்களில் யாராக இருக்கும்?" என்று அதே யோசனை சின்னவளுக்கு.

பத்தாவது தடவையாக இதைக் கேட்டு விட்டு "வயதைச் சொன்ன தினு. அவள் கட்டியிருந்த சேலையையும் கவனித்திருக்கலாம்" என்றாள் சாருமதி, சலிப்புடன்.



"என்னக்கா, நீயும் நிர்வாகி போலவே பேசுகிறாய்? அவரும் அசட்டுத்தனமாக, இதையேதான் கேட்டார். தினு ஆண்பிள்ளை. அவனுக்குச் சேலை நிறம் எல்லாம் எப்படி நினைவிருக்கும்? அதுவும் மூன்று சேலைகளுமே, கொசகொசவென்று கண்டபடி பூப்போட்டிருந்தது. எனக்கே குழம்பிப் போகிறது. பாவம், தினுவுக்கு எப்படி நினைவிருக்க முடியும்? ஓகோ! அக்கா, இப்படிக் குழம்பட்டும் என்றுதான், அந்தத் திருடி, அதுபோலச் சேலை கட்டியிருந்தாளோ? என்று பரபரப்புடன் கேட்டாள் சின்னவள்.

"எந்தத் திருடி?"

சொத்தென்றாகிவிட்டது பாலாவுக்கும்.

"அதுதானே, எந்தத் திருடி? நிச்சயமாகத் தெரியாமல், போலீசிலும் ஒன்றும் சொல்ல முடியாது. இல்லையாக்கா? நாம், இப்படிக் கஷ்டப்படுகிற இவ்வளவு நேரத்தில் அந்த திருடி, அந்தப் பணத்தை எங்கெங்கோ, எப்படி யெப்படிப் பதுக்கி விட்டாளோ? அல்லது ஜாலியாக செலவழித்தாளோ, என்னவோ? நல்ல நகை கூட வாங்கியிருப்பாள், அந்தத் திருடி!" என்று புலம்பிப் பொருமினாள் அவள்.

"சும்மாத் திருடி, திருடி, என்று தெரிந்த மாதிரிச் சொல்லாதே, பாலா. பணத்தை எடுத்தது, ஆணாகவும் இருக்கலாம்..."

"ஆனால், தினு சொன்னானே..."

இப்போது குறுக்கிட்டது. சாருமதி "அந்த தினு என்னத்தை உருப்படியாகச் சொன்னான்? எவளோ ஒரு நடுத்தர வயதுக்காரி, உன் பக்கத்தில் நின்றதாக மட்டும் தான் சொன்னான். அது யார், என்ன என்று எதுவும்,

இவனுக்கே தெரியாது. அப்புறம் என்ன? அதனால் அந்தப் பேச்சை விடு. இப்போது, நம் பிரச்சினையைப் பார்ப்போம்.''

தினு என்கிற தினகரனை, அப்படி விட்டுவிட, சாரு பாலாவுக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், முன்னிருந்த பிரச்சினை பூதாகாரமாக எழுந்து மருட்ட அக்காவும் அதட்ட, வேறு வழியின்றி, அதைப் பற்றிய ஆலோசனையில் கலந்து கொள்ள முன் வந்தாள்.

ஆனால் திருட்டைப் பற்றிச் சிறு குறிப்பைக் கூடக் கண்டு பிடிக்க முடியாமல் போனதால் மீந்திருக்கும் அடுத்த வழியைப் பற்றி சாருமதி சொன்னாள்.

திருட்டுப் போன பணத்தைக் கட்டி விடுவது!

வழி சொன்ன தமக்கையை, வெறித்துப் பார்த்தாள், தங்கை.

''இவளுக்கென்ன, பைத்தியமா? என்று சந்தேகம் வந்துவிட்டதா, பாலா? அப்படி எதுவும் இல்லை. நிர்வாக விதிகளின்படி ஒருவரின் பொறுப்பில் இருந்த பணம் தொலைந்து போயிற்று என்றால், அதைத் திருப்பி வைப்பது. அவர்கள் பொறுப்பு. திருடியது யார் என்று தெரிந்து சொல்ல முடிந்தால், திருடனைத் துரத்திப் பிடிப்பார்கள். இப்போது திருடிய ஆள் பற்றி எதுவுமே தெரியாத நிலையில், நம் பேரில்தான் பழி விழும். சட்டப்படி, அதற்கான நடவடிக்கை எடுப்பார்கள். அதாவது, நாம்தான் திருடியதாக...''

''ஐயய்யோ, அக்கா!'' என்றாள் பாலா மிரண்டு போய்.

இப்போது பயந்து என்ன செய்வது?



ஒரு பெருமூச்சுடன் சாருமதி தொடர்ந்தாள்.

''அது நடக்காமல் இருக்க வேண்டுமானால், திருட்டுப் போன பணத்தை, அப்படியே நாம் திருப்பிக் கட்ட வேண்டும்...''

''இது அநியாயம்க்கா. நாம் தொடவே இல்லாத பணத்தை, நாம் திருப்பிக் கட்டுவதா? ஒன்றரை லட்சம் என்றால், எவ்வளவு பணம்! இதில் என்னென்ன செய்ய லாம். ஒரு பீட்சா, ஒரு கார்னட்டோ ஐஸ்க்ரீம் கூட வாங்கிச் சாப்பிட்டிருக்காத பணத்தை, நாம் திருப்பிக் கொடுப்பதா? ஊகூம். நான் இதை ஒப்புக் கொள்ளவே மாட்டேன். நான் சொல்லுகிறேன். கொடுக்கக் கூடாதுக்கா!'' என்றாள் வேகத்துடன்.

தன்னையறியாமல் உதடு நெளிய ''நீ கொடுக்கச் சொன்னால்கூட, நம்மால் முடியாதும்மா'' என்றவளின் பார்வை, அறையில் அங்கங்கே சிதறிக் கிடந்த விலை உயர்ந்த பொருட்களின் மீது படிந்தது.

எத்தனை அலங்காரப் பொருட்கள்! எத்தனை உடைகள்! செருப்பு, கைப்பை என்று எத்தனை? இன்னும் எத்தனை ஊர் சுற்றல் செலவுகள்!

இவையெல்லாம் சேர்த்து, அந்த ஒன்றரை லட்சத்துக்குக் கிட்டே கூட வராதுதான். ஆனால் மோகனசுந்தரத்திடம் கொஞ்சமேனும் கௌரவமான ஒரு தொகையைச் சொல்ல முடிந்திருக்குமே! இப்போது, பிச்சையெடுப்பது போல அல்லவா, தோன்றும்!

யாசகர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது என்ற பொருள் கொண்ட ஆங்கில பழமொழி, ஏனோ அவளுக்கு, அப்போது நினைவு வந்தது.

அப்படியானால், மோகனசுந்தரம்தான், அவர்கள் கதியை நிர்ணயிக்கப் போகிறான். இந்தச் சின்னப் பெண்ணிடம், அவனுக்கு இளக்கம் தோன்ற வேண்டுமே!

சாருபாலா அசட்டுத்தனமாக ஆசைப்படுவாளே தவிர, அவளும் முட்டாள் அல்ல. தமக்கையின் பா வையைத் தொடர்ந்தவளுக்கு முகம் கன்றிக் கறுத்தது

ஒரு வேகத்துடன் எழுந்து சென்று, அலமாரியை திறந்து உருட்டிப் புரட்டிவிட்டு, சோர்வுடன் திரும்பி வந்து அமர்ந்தாள். ''மறுபடி விற்றுப் பணம் புரட்ட கூடிய மாதிரியாக ஒன்றுமே இல்லைக்கா'' என்றாள் வருத்தத்துடன்.

இருக்காதுதான். அன்றன்றைய நாகரீகம் என்று வா கிக் குவித்ததில், எதைப் பின்னாளில் விற்க முடியும்? அதுவும், அவளே மீண்டும் பயன்படுத்த விரும்பா பொருட்களை?

ஆனாலும் வீட்டுக்குச் செல்லப் பெண்ணாக வளர்ந்த தங்கை வருந்துவது பொறுக்காமல், அவளது கையை பற்றித் தட்டிக் கொடுத்தாள் சாருமதி.

''இருக்கட்டும், பாலும்மா. திருட்டுப் போன பணத் தைத் தவணை முறையில் கட்டுவதாகக் கேட்போம் இருவர் சம்பளத்திலுமாகப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று...''

கையை உருவிக் கொண்டு ''அதெப்படிக்கா முடி யும்? இப்போதே, என் செலவுக்கு என் சம்பளம் பற்ற வில்லை. இதில் பிடித்தம் வேறு செய்தால், என் செலவை என்னால் எப்படிச் சமாளிக்க முடியும்? ஊகூம். நான்



கொடுக்க மாட்டேன். என்னால் முடியாது'' என்று சீறிச்சிட்ட தங்கையை வெறித்துப் பார்த்தாள், சாருமதி.

கவனக் குறைவாகப் பணத்தைத் தொலைத்தவள், சாருபாலா 'நீ உன்' என்று ஒருமையில் பேசினால், தனித்து நிற்பது போலத் தங்கை வருத்தப்படுவாளே என்று நம்முடைய பிரச்சினை என்று, தன்னையும் இணைத்தே சாருமதி பேசிவந்தாள். தன் வருமானத்தையும் சேர்த்துக் கொடுக்கவும் முன் வந்திருந்தாள்.

ஆனால், தன் வருமானத்திலும் கொஞ்சம் குறையக் கூடும் என்றதும், பாலா என்னமாக மாறிவிட்டாள்!

தன்னை மீறி எழுந்த எரிச்சலில், ''சரி. போ! போய், எம்.டி.யிடம் இப்போது என்னிடம் கூறியதை, அப் படியே சொல்லு. எம்டி கண்டிப்பானவர் என்று கேள்வி. அவர், உடனே போலீசைக் கூப்பிடுவார். அப்புறம் என்ன நடக்கும் என்று, நீயே யோசித்து உன் விருப்பம் போல நடந்துகொள்'' என்றாள் சாருமதி சுள்ளென்று.

வழக்கம்போல, அக்காவே எப்படியாவது சமாளித்து விடுவாள் என்று எண்ணிப் பேசிய சாருபாலாவுக்குத் தமக்கையின் பேச்சு அதிர்ச்சியைத் தர ''ஐயய்யோ! ஐயோக்கா! என்னைத் தனியாக விட்டு விடாதே'' என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சத் தொடங்கினாள்.

அவளை அமைதிப்படுத்தி, பணத்தைத் திருப்புவது பற்றிய தன் திட்டத்தை தங்கையிடம் சாருமதி விவரித் தாள்.

அவள் சொன்ன கணக்குப்படி பார்த்தால், உணவு, உறைவிடத்துக்காக விடுதிக்குக் கொடுப்பது போக பணமே மிஞ்சாது என்று புரிய, பாலா அதை மிகவும் எதிர்த்தாள்.

''ஒருநாள் பீட்சாவோ, பர்க்கரோ சாப்பிடக் கூட பணம் இருக்காது. இந்த விடுதிச் சாப்பாட்டையே சாப்பிட்டு, நாக்குச் செத்துப் போகும். துணிமணியெல்லாம் போட்டதையே திரும்பத் திரும்ப அணிந்து, நண்பர்கள் நடுவே கேவலப்பட நேரும்...'' என்று எத்தனையோ ஆட்சேபணைகளை அடுக்கிப் பார்த்தாள்.

ஆனால் இதையும் மறுத்து, எம்டி அவளைச் சிறைக்கே அனுப்பவும் கூடும் என்று மூத்தவள் எடுத்துக் கூறவும் உடனே அடங்கினாள்.

''செய்வாராக்கா? ஜெயில் என்றால், ரொம்பப் பயமாக இருக்கிறதே!'' என்று அவள் அச்சத்துடன் கேட்க, சாருமதிக்கு அது இன்னமும் வேதனையாக இருந்தது.

''எம்டியிடம் பேசிப் பார்ப்போம், பாலா. அவருக்குத் தன் பணத்தைத் திரும்பப் பெறுவதுதானே, முக்கியமாக இருக்கும். மறுத்து, சட்டப்படியான நடவடிக்கை எடுத்தால், பணம் ஒரேடியாகப் போய்விடுமே! அதனால் ஒத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன்'' என்று, தங்கைக்கு மட்டுமின்றித் தனக்கும் தென்பூட்ட முயன்றாள்.

மோகனசுந்தரத்தின் கைக்கு வந்தபோது இருந்ததை விடத் தொழிலையும் லாபத்தையும் அவன் பல மடங்கு பெருக்கியிருப்பதாக, முத்துக்கிருஷ்ணன் அவளிடம் சொல்லியிருக்கிறார். பணத்தை அலட்சியப்படுத்துகிறவனால், அது முடியாது.

எனவே, காணாமல் போன பணம், சிறு தொகையாகவேனும் திரும்பக் கிடைக்குமானால், அவன் அதை விட மாட்டான் என்று ஓர் எண்ணம் சாருமதிக்கு.



அதையே விடாப்பிடியாக பிடித்து, நம்பிக்கையையும் திடத்தையும் முயன்று, மனதுள் வளர்த்துக் கொண்டாள்.

ஆனால் இருவருமாக மறுநாள் காலை எட்டு முப்பதுக்கு நிறுவனத்துடைய எம்டி மோகனசுந்தரத்தின் முன்னே போய், இந்த யோசனையை, அவள் சொன்னபோது, அதை ஒத்துக் கொள்ள, முதலாளி அடியோடு மறுத்து விட்டான்.

'பிளான் பி' என்று தொழில் வட்டாரத்தில் சொல்வதுண்டு. முதலில் போடும் திட்டமான 'பிளான் ஏ' தவறாகப் போகும் பட்சத்தில், உடனே பயன்படுத்துவதற்காக 'பிளான் பி' என்று மாற்றுத் திட்டம் ஒன்றையும் தயாரித்து வைத்திருப்பார்கள்.

முதல் திட்டம் சரிவரவில்லை என்றால், சுணக்கமே இல்லாமல், அடுத்ததைச் செயல்படுத்தத் தொடங்கி விடுவார்கள்.

மோகனசுந்தரத்துக்கும், இதுவே வழக்கம். புதிதாக எதையும் செய்வது என்றால், அதற்கு, இரண்டு திட்டங்கள் தயாரிக்கச் சொல்லுவான்.

அதே பழக்கத்தில் ''அடுத்த யோசனை என்ன?'' என்று அவன் கேட்டபோது, ஒன்றும் சொல்ல முடியாமல், இரு பெண்களும் பேந்த விழித்தனர்.

பாலா வேறு 'ஒத்துக் கொள்வார் என்றாயே' என்பது போல, அவளைப் பார்க்க, சாருமதி ரொம்பவுமே திணறிப் போனாள்.

''என்ன சாருமதி?'' என்று, அவனது கேள்வி வேறு!

முயன்று சமாளித்துக் கொண்டு ''வே... வேறு எந்த வழியிலும், காணாமல் போன பணத்தை ஈடு செய்ய

வழியில்லை, சார். சொத்து. நகை, சேமிப்புப் பண
என்று எதுவும் இல்லை...'' என்றவளின் பேச்சி
குறுக்கிட்டு ''ஏன்?'' என்று கேட்டான் மோகனசுந்தரம்

''இரண்டு பெண்கள் சம்பாதிக்கிறீர்கள். விடுதிக்கு எவ்வளவு கட்ட நேரும் என்று, எனக்கு ஊகம் உண்டு ஏன் சேமிக்கவில்லை?''

சிறு அமைதியின் பின் ''சரி. உங்கள் நிலைமை பற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் உங்களது இந்த யோசனையை, நான் ஏற்பதற்கு இல்லை. இந்தப் பண குறித்து, உன்னிடம் மாற்றுத் திட்டம் எதுவும் இல்லை என்றால், நான் வேறு நடவடிக்கை எடுக்க வேண்டி யிருக்கும்'' என்றான் அவன் தெளிவாக.

பாலாவின் உதறலைச் சாருமதியால் உணர முடிந்தது

''சார், ப்ளீஸ்!'' என்றாள் கெஞ்சுதலாக, ''சற்று யோசித் துப் பாருங்கள், நாங்கள். இந்தப் பணத்தை எப்படியாவது திருப்பித் தரத்தான் நினைக்கிறோம். எங்களால் முடிந் ததைத் தருவதாகத்தான்...''

''நீ தருவதாகச் சொல்லும் தொகை, என் இழப்புக்கு வட்டி கூடக் கட்டாது என்பது, உனக்கே தெரிந்திருக்கும் ஆனால் உன் யோசனையை, அதற்காக மட்டுமாக நான் மறுக்கவில்லை. ஆனால் உன் திட்டத்தை ஏற்று, அதை நான் அமல்படுத்தினால், அது எவ்வளவு மோசமான முன் உதாரணமாக அமையக்கூடும் என்று, ஒரு தரமேனும் நீ யோசித்துப் பார்த்தாயா?

''ஒழுங்காக இருப்பவர்களையும் அது கெடுத்துவிடும் சாருமதி. எண்ணிப்பார். பெரிய தொகையை திருடி



விட்டு, மாதம் கொஞ்சமாகத் திருப்புகிறோம் என்று எல்லோரும் திருடத் தொடங்கி விட மாட்டார்களா?''

''நாங்கள் ஒன்றும் திருடவில்லை சார்!'' என்றாள் சாருபாலா ரோஷத்தோடு.

''நாங்களா? உன் தமக்கையை இதில் சேர்க்காதே, சாருபாலா. குற்றம் முழுக்க முழுக்க உன்னுடையது. அத்தோடு, உன் பொறுப்பில் இருந்த பணம், இப்போது கல்லாவில் இல்லை. உன்னால் கணக்குக் கொடுக்கவும் முடியவில்லை என்றால், அதன் பெயர் திருட்டுத்தான்'' என்றான் அவன் கடுமையாக.

காது மடல் வரை சிவக்க, குறுகித் தலை குனிந்து விட்டாள் சின்னவள்.

சாருமதிக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் இதில் அவள் எப்படிக் குறுக்கிடுவது?

சொல்பவன் முதலாளி, நேரடியாகத் திருடாவிட் டாலும், அவனது இழப்புக்குத் தங்கைதானே காரணம்?

ஒரு பெரிய சொட்டுக் கண்ணீர், பாலாவின் மடியில் விழுந்து சிதறுவதைக் கண்டதும் பொறுக்க முடியாமல் ''சார்... பா... சாருபாலாவின் பிழை, கவனக் குறைவு தானே தவிர... அது ஒன்றும் தப்பில்லை என்று நான் சொல்ல வரவில்லை சார். தப்புதான். ஆனால் அவள் சின்னப் பெண். மனிதர்களின் தன்மை பற்றிச் சரியாகத் தெரியாததால் நேர்ந்த தவறு...'' என்று என்ன சொல்லி, எம்டியை இளக வைப்பது என்று புரியாமல், தங்கைக்கு ஆதரவாக மனதில் தோன்றியதையெல்லாம் சொல்லிக் கொண்டே போனவள், மோகனசுந்தரத்தின் புருவங்கள் உயர்ந்த விதத்தில் பேச்சை நிறுத்தினாள்.

''பேசுவது முத்துக்கிருஷ்ணன் சாருடைய செயலாளரா என்று இருக்கிறது!'' என்று வியந்து கேட்டான் அவன். ''நிர்வாகப் படிப்பில் நல்ல 'கிரேடு' வாங்கியதாகக் கேள்விபட்டேனே!''

எதிராளியைக் குன்ற வைப்பதில், இவன் ரொம்பக் கெட்டிக்காரன் என்று எண்ணினாள் சாருமதி. கால் பெரு விரலை அழுத்தமாக ஊன்றி, தங்கையைப் போல முகம் சிவந்து விடாமல் அடக்க, அவள் முயன்று கொண்டு இருந்தபோதே, அவன் மீண்டும் பேசினான்.

''உன் தங்கை ஒன்றும் சின்னப் பெண்ணில்லை, சாருமதி. இன்னமும் ஓரிரு மாதங்களில், அவளது பத்தொன்பதாவது பிறந்த நாள் வந்துவிடும் என்று, அவளது அலுவலகக் குறிப்பு சொல்கிறது. ஓட்டுப் போடும் உரிமை வந்தே, ஓர் ஆண்டு ஆகப் போகிறது. அத்தோடு, எப்போதும் நாலைந்து பேர் புடை சூழச் சுற்றுகிறவளுக்கு, மனித இயல்பு தெரியாதிருக்கவும் வாய்ப்பில்லை. ஆகவே, உன் தவறான கருத்துக்களை உடனே மாற்றிக் கொள்வது, உனக்கு நல்லது. ஆனால் இப்போதைய பிரச்சினைக்கு, இவை எல்லாமே சற்றும் அவசியம் அற்றவை. எனக்கு, என் பணக் கணக்கு நேர் செய்யப்பட வேண்டும். அது இல்லை என்றால், அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி முடிவு செய்ய வேண்டும். அவ்வளவே. இறுதியாக என்ன சொல்கிறாய்? என் இழப்பு சரி செய்யப்பட ஏதேனும் வாய்ப்பு இருக்கிறதா?'' என்று, சாருமதியை நேராகப் பார்த்துக் கேட்டான்.

இதற்கு என்ன சொல்வது? அவள் சொன்ன யோசனையைத்தான், அவன் ஒத்துக் கொள்ள மறுத்து விட்டானே!



அல்லது ஒருவேளை பரவாயில்லை என்று இளகி... சாருமதி பரபரப்புடன் நிமிரும்போதே ''மாதா மாதம் கட்டுகிற பழைய ஐடியா என்றால், ப்ளீஸ் சாருமதி, அதைச் சொல்லாதே. அனாவசிய நேர விரயம்'' என்று, அவசரமாக எச்சரித்தான் மோகனசுந்தரம்.

சொல்வதற்கு, வேறு என்ன இருக்கிறது?

பணம் பற்றி வாய் திறக்க வழியில்லை. சிறு வயது என்று கெஞ்சவும் முடியாமல், ஓட்டுப் போட உரிமை பற்றிச் சொல்லி வாயடைக்கப் பண்ணி விட்டான்.

இனி, முதலாளியாய் மோகனசுந்தரம் என்ன சொன்னாலும், அதற்குப் பணிவதைத் தவிர, அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?

ஆனாலும், இவ்வளவு கல் நெஞ்சனாக ஒருவன் இருப்பானா?

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, இரு பெண்களும் அவனைப் பார்க்க, மோகனசுந்தரம் சாருபாலாவை விளித்தான்.

''நீ சற்று நேரம் வெளியே காத்திரு. உன் சகோதரியுடன் பேசிவிட்டு, உன்னைக் கூப்பிடுகிறேன்'' என்றான்.

இவனுக்குக் கூட, பாலாவின் முகத்தை நேரே பார்த்து, அவளைப் போலீசிடம் ஒப்படைக்கப் போவதாகச் சொல்ல முடியவில்லை போலும். பெரிதாகச் சின்னப் பெண் இல்லை என்றானே! அவன் தன்னிடம் சொல்லி, தான் போய்த் தங்கையிடம் சொல்லி... என்ன கொடுமை இது!

மோகனசுந்தரத்தின் பார்வை, தன் முகத்தில் இருப் பதை உணர்ந்த சாருமதி, முகத்தை உணர்ச்சியற்றதாகச் செய்து கொள்ள முயன்றாள்.

ஆனால், அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது என்று உணர்ந்து ''எதுவானாலும் சீக்கிரமாகச் சொல் லுங்கள் சார். என்னவோ, ஏதோ என்று, பாலா வெளியே தவித்துக் கொண்டிருப்பாள்'' என்று கேட்கும்போதே, என்ன அசட்டுத்தனமான பேச்சு என்று, அவளுக்கே தோன்றி விட்டது.

பாலாவோ, அவளுடைய தங்கையோ தவிப்பது பற்றி, இந்த முதலாளி மனிதனுக்கு என்ன கவலை? அவனுக்கு அவனது பண விஷயம் மட்டும்தான் முக் கியம் என்று, அவனே சொன்னானே!

அவள் எண்ணியதற்கு ஏற்ப ''நன்றாகவே தவிக் கட்டும். எவ்வளவுக்கெவ்வளவு தவிக்கிறாளோ, அவ்வள வுக்கு எதிர்காலத்தில், வேலையில் கவனமாக இருப் பாள்'' என்றான் அவன், இரக்கமற்று.

சிறைக்குள் சென்று, எவ்வளவு கவனமாக இருந்து என்ன பயன் என்று எண்ணமிட்டவள், ஏதோ உறைக்க, விலுக்கென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அல்லது பாலாவை, இவன் சிறைக்கு அனுப்புவதாக இல்லையோ? மற்றபடி எதிர்காலத்து கவனம் பற்றி, இவன் ஏன் பேசுகிறான்? அதுவும் வேலையில்? ஒரு வேளை... ஒருவேளை... ஆனால்...

நம்பிக்கையும், அவநம்பிக்கையும் மாறி மாறி, கண் களில் வர்ணஜாலம் புரிய, ஏக்கமும் பயமுமாக, மோகன சுந்தரத்தின் முகத்தைப் பார்த்தாள், சாருமதி.



சில வினாடிகளுக்கு முன் இருந்த கடுமையான கண்டிப்பும் இப்போது அங்கே இல்லை!

மாறாக ''சந்தர்ப்பம் வந்து விட்டது என்று தோன்று கிறது!'' என்றான் அவன், சன்னமாய் முறுவலித்தது.

சந்தர்ப்பமா? சந்தர்ப்பம்? என்ன சந்தர்ப்பம்?

## 5

மோகனசுந்தரத்தின் பேச்சு புரியாமல், சாருமதி திகைத்தது, ஓரிரு கணங்களே.

உடனே பொருள் புரிந்துவிட, காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப மாட்டாமல், அவன் முகத்தை வெறித்துப் பார்த் தாள் சாருமதி!

என்ன மாதிரி நிலையில் வைத்து, என்ன கேள்வி கேட்கிறான்? கிடுக்குப்பிடி போட, இதுவா நேரம்?

அல்லது, இவனுக்கெல்லாம், இதுதான் நேரமோ?

இவன் என்ன, மனிதனா, ராட்சசனா?

ஆனால், சிவபாலன் பெற்ற மகளைப் பற்றி, இவன் சற்றும் அறிந்து கொள்ளவில்லை. அவர் வளர்த்த விதம் பற்றியும்!

மிஞ்சி மிஞ்சி, இவனால், பாலாவைச் சிறைக்கு அனுப்ப முடியும். அவ்வளவுதானே செய்யட்டும்!

இந்த மாதிரிப் பேச்சுக்குப் பதில் சொல்வதே கேவலம் என்று சொல்லாமல் சொல்கிறவளாய், சாருமதி எழுந்து வெளியே செல்லத் திரும்பினாள்.

"ஒரு நிமிஷம் சாருமதி!" என்று அவளை நிறுத்தினான் மோகனசுந்தரம். "எனக்குப் பதில் சொல்லாமல் போகிறாயே! சந்தர்ப்பம் வந்துவிட்டதுதானே?" என்றான், அவளைக் கூர்மையாகப் பார்த்து, கேள்வியுமாக.

வெட்கமே இல்லாமல், மறுபடியும் கேட்கிறானே! திமிர்! முதலாளி என்கிற அகந்தை! இப்போது இவளால் மறுக்க முடியாது என்கிற திண்ணக்கம்!

சாவுக்குத் துணிந்துவிட்டால் சமுத்திரமும் முழங்கால் மட்டம்தான் என்று அறியாததால் வந்த கொழுப்பு!

மீண்டும் திரும்பி, அவனை நோக்கி நின்றாள் சாருமதி.

"நாங்கள் மத்திய தரத்துக் குடும்பம்தான் சார். என் தந்தை, பணம் காசு என்று ஒன்றும் சேர்த்து வைக்கவில்லை. ஆனால், தன்மானம், கௌரவம் எல்லாம் பெரிய சொத்து என்று, கற்றுக் கொடுத்திருக்கிறார்" என்றாள் அவள் நிதானமாக.

"நல்ல விவரம். கேட்க சந்தோஷமாயிருக்கிறது. சற்று எதிர்பார்த்ததும் கூட" என்றான் மோகனசுந்தரம். "ஆனால் என் கேள்விக்கு பதில் சொல்லவில்லையே?"

என்ன இவன்!

இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த கட்டுப்பாடு மறைய "அதைத்தான் சார், நான் இப்போது சொன்னதே. எந்த விதமான இக்கட்டு நேர்ந்தாலும், தன்மானத்தையும், சுயகௌரவத்தையும் இழந்து வாழக்கூடாது என்று, அப்பா எனக்குக் கற்றுத் தந்திருக்கிறார். சாரு பாலா சிறைக்கே சென்றாலும், என் மானத்தைப் பலிகொடுத்து, அவளைக் காப்பாற்ற, நான் உடன்பட



மாட்டேன். இப்போதேனும் என் பதில் புரிகிறதா?" என்றாள் சீற்றத்துடன்.

புருவம் சுருக்கி, "மானத்தைப் பலி கொடுத்து..." என்று யோசித்தவன், ஏதோ விஷயம் புரிந்தவன் போல "ஊகூம்!" என்று தலையசைத்தான்.

"சாருமதி நீதான் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. யோசி, நீ நினைத்தது போல நான் நடந்தால், என்ன ஆகும் என்று எண்ணிப்பார்! நிறுவனத்தைப் பாதிக்கும் விதமாக என்ன தப்பு வேண்டுமானாலும் பண்ணலாம். அப்புறம் இப்படித் தப்பி விடலாம் என்று, எல்லோரும்... எல்லாப் பெண்களும் எண்ண மாட்டார்களா...?"

"அதெப்படி நினைப்பார்கள்?" என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டுக் கேட்டாள் சாருமதி. பெண்களை மிகவும் மட்டமாகப் பேசுகிறான் என்பதோடு, இவன், காதில் ஏதோ பூச்சுற்றவும் முயற்சிக்கிறான்!

"நன்றாக நினைப்பார்கள், பெண்ணே! நன்றாகவே நினைப்பார்கள். எல்லோருமே உன்னைப்போல் ஒழுக்கம் பேணுகிறவர்கள் என்று எண்ண வேண்டாம். சில, பல வசதிகளுக்காகத் தானாகவே வந்து விழுகிற பிறவிகள், எதற்கும் துணிவார்கள். ஆனால், அதற்கு இடமளிக்க, எனக்கு அணுவளவும் விருப்பம் இல்லை..." என்று நிறுத்திவிட்டு, அவளைப் பார்த்தான் மோகனசுந்தரம்.

இவன் என்ன சொல்ல வருகிறான்? என்னவோ ஊடுருவுகிற மாதிரிப் பார்வை வேறு!

நெஞ்சு படபடக்க "பி... பின்னே?" என்று வினவினாள் அவள்.

பார்வை மாறாமல், "நான், திருமணம் செய்து கொள்ளக் கேட்டேன்" என்றான் அவன் தெளிவாக.

''வாட்!''

திகைப்பும் அதிர்ச்சியுமாகக் கால்கள் தடுமாற, சற்று முன் காலி செய்த இருக்கையில், சட்டென அமர்ந்தாள் அவள்.

மேஜை மீது மூடி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் தம்ளரை எடுத்து அவளிடம் நீட்டினான் அவன்.

அதிர்ச்சிக்கு எப்போதும், இவனது வைத்தியம் போலும் எண்ணி எண்ணியபோதும், மறுக்காமல் வாங்கிக் குடித்தாள் அவள்.

அவள் இரண்டு மிடறு குடிக்கும் வரை காத்திருந்து விட்டு, ''என்ன அவ்வளவு அதிர்ச்சி?'' என்று கேட்டான்.

இதற்கு என்னவென்று பதில் சொல்வது?

அவளது பதிலை அவனே சொல்பவனாகி ''என்னைப் பொல்லாத வில்லனாக எண்ணினாய் போல!'' என்றான் தொடர்ந்து.

அப்படித்தானா என்று அவன் ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேட்ட விதம் சீண்ட, சாருமதி மௌனம் கலைத்தாள்.

''நினைத்தது தப்பு என்கிறீர்களா?'' என்றாள், அவனும் நேராகப் பார்த்து.

அவனும் மறந்திருக்க வாய்ப்பில்லையே, மறந்திருந் தால் 'சந்தர்ப்பம்' என்கிற அதே வார்த்தையை எப்படிப் பயன்படுத்துவான்? மறந்துவிடவில்லை என்று, அவனது பதில் தெரிவித்தது.

''எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. என் நினை யில் இருந்து யோசித்துப் பார். முதல் முறையாக



உன்னைப் பார்த்தபோது, மனதில் ஒரு விருப்பம் தோன்றியது. வெளிப்படையாகக் கேட்டேன். முதலில் மறுத்தாலும் சில பல வசதிகளுக்காக, என்றோ ஒருநாள், நீயாக வருவாய் என்று நினைத்தேன். ஆனால், இந்த ஆறு மாதங்களாக, உன்னை எந்த விதத்திலும் நான் வற்புறுத்தினேனா? துரத்தி... விரட்டி... சும்மாச் சும்மா உன்னிடம் வந்து பேசி, உன்னை என் இடத்துக்கு வரவழைத்து... இந்த அளவு தொல்லைகூட, நான் தந்தது இல்லையே! ஒரு கனவானாக, உண்மையான பெரிய மனிதனாகத்தானே, நடந்து கொண்டிருக்கிறேன்?''

கனவான் என்கிற வார்த்தைக்கு, இவனது அர்த்தமே, வேறு விதமாக இருக்கிறது என்று எண்ணினாள் சாரு மதி. அவனது முதல் கேள்வியிலேயே, பெரிய மனிதத் தனம் கடைசி மூச்சை விட்டு விட்டது என்றல்லவோ, அவள் கருதினாள்!

இந்த இரண்டும் எப்படி, ஒன்றாக வாழ முடியும் என்று மூளை கேட்டது.

ஒரு மனமாக வாழ்ந்த பெற்றோரின் நினைவில் மனம் கனத்தது. கலங்கியது.

இந்தக் கேள்வி தங்கைக்குப் பாதகமாக முடியலாம். ஆனால், அவளது வாழ்க்கை பிரச்சினை என்பதால், கேளாமலும் தீராது.

மெல்ல நிமிர்ந்து ''என் ஒழுக்கம் பற்றிச் சொன்னீர்கள். உங்கள்... உங்களைப் பற்றியும் தெரியும். இ... இதையே, தொடர்வீர்களா?'' என்று கேட்டாள்.

ஒரு வினாடி யோசித்துவிட்டு ''குடும்பம் என்பது உன்னதமானது என்பதில், எனக்கு மாற்றுக் கருத்து

இல்லை. அதில் தவறு நேர விடுவேன் என்றும், இ
போதைக்கு எனக்குத் தோன்றவில்லை. ஆனால் நா
பொய் சொல்ல மாட்டேன். இதுதான் நிரந்தரம் என்
என்னால் அடித்துச் சொல்ல முடியாது. எனவே, ஓ
உறுதி தருகிறேன். என்றேனும் ஒரு நாள், நம் இருவரு
குமே பொறுக்க முடியாத நிலை வந்தால், ஒன்று மட்டு
நிச்சயம். நீ பொருளாதார ரீதியாகக் கஷ்டப்பட நேராது'
என்றான் அவன்.

''ஆனால், வாழ்க்கை?''

தயக்கமே இல்லாமல் ''ஒரு திருமணத்தில், வாழ்க்
கையின் எல்லாமே முடிந்து விடுகிற நிலை, இன்றைக்கு
இல்லை, சாருமதி. விவாகரத்து, மறுமணம் எல்லாமே
இயல்பாகி விட்ட சூழல், இது. 'இம்'மெனுமுன் ஒன்றை
உதறி, இன்னொன்றினுள் நுழைகிற அசட்டுத்தனம், நம்
இருவருக்குமே கிடையாது என்பது, என் கருத்து
அதனால், நம் திருமணம் ஒரு பெரிய வெற்றியாகவே
அமையவும் கூடும். அமையும் என்று நம்புவோமே!
என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் மோகனசுந்தரம்.

சொல்ல என்ன இருக்கிறது? மறுத்துப் பேசி, ஓடி
விடவா முடியும்?

திருமணம் என்கிற ஒரு கௌரவமான போர்வையில்
பாலாவைக் காப்பாற்ற முடியும் எனும்போது, அவளுக்கு
வேறு எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.

திருமணத்தின் வெற்றி, தோல்வி பற்றி இவன் என்ன
சொன்னாலும், அவளைப் பொறுத்தவரை, மண வாழ்வு
ஒன்றே ஒன்றுதான். ரத்து, மறுமணம் எதையும் அவள்
மனதார ஒப்புவதற்கில்லை. எனவே, இவன் சொல்வது
போல, நம்பிக்கையோடு இருக்க வேண்டியதுதான்.



எப்படியோ, அவன் சொல்லும்போது, நம்பவும் தோன்
றியது.

மனம் லேசாவதை உணர்ந்தபடி, சாருமதி சம்மத
மாகத் தலையாட்டினாள்.

முக்கியமாக, சகோதரிகள் இருவருமே கேவலப்படா
மல், சாருபாலா நல்லபடியாகத் தப்ப, இதுதான் வழி
என்று எண்ணும்போதே, பாலாவை எப்படிக் காப்பாற்றப்
போகிறான் என்று யோசனை வந்தது.

கல்லாவில் பணம் குறைந்தது, திடீர் சோதனை
அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்டிருக்கும். என்னதான்
மோகனசுந்தரம் முதலாளி என்றாலும், அதை, இல்லை
என்று மாற்ற முடியாது. அதிரடியாக, முதலாளி விருப்பம்
போலக் கணக்கு வழக்குகளை மாற்றுகிற பழக்கமும்
அங்கே கிடையாது.

''சார், பா... சாருபாலா! அவளை எப்படிக் காப்பாற்று
வது? பாலாவின் பிழை அலுவலகக் குறிப்புகளில்
பதிவாகி இருக்கும். ஒன்றரை லட்சம் இழப்பு! அதை
மாற்ற முடியாதே? அவள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்
காமல் விடுவது என்றால், நான் கேட்டபடி, மாதா மாதம்
பணம் கட்ட அனுமதிக்கப் போகிறீர்களா?''

கண்ணில் சிறு வியப்பும், குறுஞ் சிரிப்புமாக அவன்
தலையசைப்பதைக் கண் இமைக்காமல் பார்த்தாள்
சாருமதி. இவன் அழகன்தான் என்று, மனம் வேறு புறம்
பாய்ந்தது.

''மாதா மாதம் கட்டுவது பற்றித்தான், முன்னரே
சொன்னேனேம்மா?'' என்று அவன் கேட்கவும், சிந்தனை
மறுபடியும் நடப்புக்கு வந்தது.

"பின்னே?"

புன்னகை மாறாமலே அவன் சொன்னான். "கணக்கில் குறைந்த ஒன்றரை லட்சத்தையும் நிறுவனத்துக்குக் கட்டிவிட்டால், அப்புறம் அவளை எந்தக் குற்றத்தில் பிடிக்க முடியும்?"

விரிந்த விழிகளில் விவரம் புரிவது தெரிந்தது "ஓ பணத்தை நீங்கள் க.. கட்டி வி.. விடு...வதாக... சொல்லுகிறீர்களா? ரொ... ரொம்ப நன்றி. சார்!" என்றாள் கண்கள் கசிய.

"என்ன செய்வது? அக்காவின் கல்யாணக் கோலத்தைக் காண, தங்கை கைவிலங்கோடு வந்தால், நன்றாயிராதே!"

அவன் சொன்ன விதத்தில் சிரிப்பு வந்தாலும், தங்கை கைவிலங்கோடு நிற்பது போன்ற கற்பனை தோற்றத்தில், சாருமதியின் நெஞ்சு நடுங்கியது. எப்படியோ, அது நேராமல் காப்பாற்ற முடிந்ததே!

ஆறுதலாக மூச்சு விட்டு "முதலில் அவளிடம் சொல்லிவிடுகிறேன்" என்று ஆவலாக எழுந்தாள்.

"இல்லை, உட்கார்" என்றவனின் முகத்தில் தீவிரம் விழுந்திருந்தது.

"சா...ர்" என்று தயங்கியவளிடம் "சாருபாலா பற்றி நான் உன்னிடம் சிலது சொல்ல வேண்டியிருக்கிறது. அதைக் கேட்டுவிட்டு, அப்புறமாக உன் தங்கையிடம் எல்லா நல்ல சேதிகளையும் சேர்த்துத் தெரிவிக்கலாம்" என்று சற்று அழுத்தமான குரலில் அவன் கூறவும், உள்ளூரக் கலக்கத்துடன் அவன் சொல்லுக்குப் பணிந்தாள் அவள்.



இருக்கையில் சாருமதி அரைகுறையாக, ஒட்டில் அமர்வதைக் கவனியாதவன் போல, மோகனசுந்தரம் பேசத் தொடங்கினான்.

"கவனி, சாருமதி. நாம் இருவரும் மணந்து கொள்ளப் போகிறோம். மைத்துனி என்கிற முறையில், அவளுக்காக ஒன்றரை லட்சம் ரூபாயை நிறுவனத்தில் கட்டி, அவளால் நேர்ந்த இழப்பை நான் ஈடுகட்டப் போகிறேன்."

"ஆனால், இது இத்தோடு நிற்க வேண்டும். இதற்கு மேல், அவளால் எனக்கு இழப்பு நேரக்கூடாது."

"இனிமேல், வேலை நேரத்தில் பண விஷயத்தில் பாலா கவனமாக இருப்பாள் சார்!" என்றாள் சாருமதி அவசரமாக.

"அதற்குத் தேவையிராது" என்றான் அவன் சற்றே வறண்ட குரலில், "சாருபாலா செய்திருப்பது, நிறுவன விதிகளின்படி, மிகப் பெரிய குற்றம். எனவே, இனியும் அவளைப் பணப் பொறுப்பில் வைக்க முடியாது. விற்பனை பிரிவில் வேலை செய்யட்டும். சில மாதங்களில், அவள் எப்படி உருவாகிறாள் என்பதைக் கவனித்து, வேலை உயர்வு கொடுப்பது பற்றி, நிர்வாகம் முடிவு செய்யும்..."

அதாவது தளத்து நிர்வாகிகளோடு கலந்து, எம்.டி. யாக, இவன் முடிவு செய்வான். அதுவரை, ஒரு பதவி இறக்கத்தை பாலா ஏற்றுத்தான் ஆக வேண்டும், என்கிறான்.

நிர்வாகம் பயின்றிருந்ததோடு, உள்ளார்ந்த நேர்மையும் சேர, சாருமதிக்கு இதை மறுக்கவும் தோன்றவில்லை.

இத்தோடு பாலா தப்புவதே, பெரிய போனஸ் மாதிரி தானே?

சாருமதி பேசாமல் அமர்ந்திருக்க மோகனசுந்தரம் தொடர்ந்தான்.

''சாருபாலா விஷயமாக இன்னும் சிலது இருக்கிறது. அவளுக்கு பணம் ஏதும், உன் கையிலிருந்து கொடுக்கக் கூடாது. நீ ஒரு பத்து ரூபாய் கொடுத்தால்கூட, அதைப் பன் மடங்காக்கிப் பெறும் எண்ணம், அவளுக்கு வந்து விடும். அக்கா பணக்காரி ஆகிவிட்டாள், இனி நாமும் அப்படித்தான் என்று, அவள் தன்னையும் பணக்காரியாக எண்ணி, ஊதாரித்தனமாக வாழத் தொடங்கி விடுவாள். இப்போதே, உன் ஊதியத்தில் கணிசமான ஒரு பகுதி அவளுக்குத்தான் போகிறது, என்பது என் ஊகம். இல்லையென்றால், உன் வாழ்க்கை முறைக்கு, நீ இன்னமும் சேமித்திருப்பாய். ஆனால் இந்த ஒட்டுண்ணித்தனம், இனித் தொடரக்கூடாது. எந்த அதிகப்படிச் செலவையும் தாங்க, அக்கா வருவாள் என்கிற எண்ணம் வரக்கூடாது! இந்த நிபந்தனை எதற்காகச் சொல்கிறேன் என்று புரிகிறதா?''

''தன் காலில் நிற்பதற்கு, பாலா பழக வேண்டும், என்பதற்காக'' என்றாள் சாருமதி மெதுவாக, ஆனால், இது பாலாவுக்குப் புரிய வேண்டுமே! அந்த அளவு, அவள் யோசிப்பாளா?

அவளது மனதைப் படித்தவன் போல ''நீ கண்டிப்புடன் இருந்தால், இதை உன் தங்கையும் வெகு விரைவிலேயே புரிந்து கொள்வாள்'' என்று மோகனசுந்தரம் கூறவும், அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.



கூடவே, சற்று இதமாகவும்.

அப்படியே பல விஷயங்களில் ஒத்த மனம் இருந்தால், வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இருக்கக்கூடும் அல்லவா?

''கடைசியாக ஒன்று. நம் வீடு அடையாறில் இருக்கிறது. தனி வீடு. தாத்தா பாட்டி காலத்திலிருந்து, மூன்று தலைமுறைகளாக, நம் சொத்து. சாருமதி. இப்போது நான் சொல்லப் போவது உனக்கு வருத்தத்தை அளிக்கக் கூடும். ஆனால் இதில் மாற்றம் ஏற்பட நான் அனுமதிக்க மாட்டேன். அந்த வீட்டுக்குள் சாருபாலா ஒரு போதும் வரக்கூடாது'' என்றான் அவன், திடுமென அழுத்தம் பெற்ற குரலில்.

பல்வேறு கலக்கங்கள், குழப்பங்கள், தீர்வுகள், நம்பிக்கைகள் என்று, இந்த அறைக்குள் வந்ததில் இருந்து, அவளை ஆட்டிப் படைத்தவை. எத்தனையோ! ஆனால் எதன் பிரதிபலிப்பையும் முகத்தில் காட்டி விடக் கூடாது என்று, சாருமதி முடிந்தவரை கவனமாகவே இருந்தாள்.

ஆனால், இப்போது அது முடியவில்லை.

பத்து ரூபாய்க் கூடக் கொடுக்கக்கூடாது என்று, மோகனசுந்தரம் கூறியபோதே, அவன் பணச் செலவை மட்டுமாகக் கூறவில்லை என்று, யோசித்திருக்க வேண்டும் என்று, அவளுக்கு இப்போது தோன்றியது. தமக்கையோடு சேர்ந்து வசிப்பது என்றால், பாலாவின் சம்பளம் முழுவதுமே, அவளது கைச்செலவுக்கானதுதானே? அதிகப்படியாகப் பத்து ரூபாய்ப் பணம் தேவையே படாதே!

ஆனால், என் வீட்டுக்கு நீ வரக்கூடாது என்று முகத்தில் அடித்த மாதிரி, பாலாவிடம் எப்படிச் சொல்வது? அத்தோடு, அவள் தனியாக எங்கே, எப்படி இருப்பாள்?

திகைப்பும் அதிர்ச்சியுமாக, ''சார், அவள் என் தங்கை சார்! அவளை வீட்டுக்கு வரக்கூடாது என்று, எப்படி சொல்வது?'' என்று தவிப்புடன் வினவினாள்.

''சொல்லித்தான் ஆக வேண்டும், சாருமதி. நம் வீட்டுக்கு அவள் வரத் தொடங்கினால், அத்தோடு அது நில்லாது. அவள் உன்னைச் சார்ந்திருப்பதோ, நீ அவளுக்குக் குடை பிடிப்பதோ, இனி நடக்கக்கூடாது. இதற்கெல்லாம் நீ ஒப்புவது என்றால், ஒப்பினால் மட்டுமே சாருபாலாவின் மேல் சட்ட ரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்று, அவளிடம் போய்ச் சொல்லு'' என்று முடித்தான் அவன்.

அதாவது, அவனது நிபந்தனைகளில் எதை மறுத்தாலும், மணம் உட்பட எதுவும் நடக்காது என்கிறானா?

திக்கென்றது. அவளுக்கு அதெப்படி முடியும்? ஊகூம்!

ஆனால் கூடவே, காலையிலும், மாலையிலும் தங்கைக்காகச் செய்யும் வேலைகளும், சாருமதிக்கு நினைவு வந்தன. எல்லா வேலைகளையும், எப்படிச் செய்து முடித்து, அவள் சரியான நேரத்துக்கு, அலுவலுக்குச் சொல்லப் போகிறாள்? அவளால் சமாளிக்க முடியுமா?

பாலா வீட்டுக்குச் செல்லப் பெண். அவள் பிறக்கும்போது, மஞ்சுளா கிட்டத்தட்ட மரணத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்தாள். பிறகும், முழு ஆரோக்கியம் வரவே இல்லை.



பாலா எப்போதும், அம்மாச் செல்லம். எந்த நேரம், குழந்தை தாயை இழந்து தவிக்கப் போகிறதே என்று தொடங்கியது. பதினெட்டு வயதிலும் அவள் அப்படித்தான்.

அதைப் பயன்படுத்திக் கொண்டு தந்தை, தமக்கையிடமும் பாலா காரியம் சாதிப்பாள். கடைக்குட்டி என்பதால், அவர்களும் பெருமளவு விட்டுக் கொடுத்து, அதுவே குடும்பத்தில் பழகிவிட்டது.

இப்போதும் பாலா தனியாக எப்படி இருப்பாள் என்று, அதுதான் சாருமதிக்கு யோசனையாக இருந்தது. இவனிடம் பேசிப் பார்க்கலாமோ?

அவள் சின்னப் பெண் என்று சொல்ல வாயெடுத்துவிட்டு, அடக்கிக் கொண்டாள், சாருமதி. ஓட்டுப்போடும் வயது தாண்டி... வசனம், ஏற்கனவே கேட்டாயிற்று.

வேறு விதமாக ''ஆனால் சார், பாலாவுக்குத் தனியாக இருந்து பழக்கமில்லை...'' என்று அவள் தொடங்கும்போதே ''ஏன், கையைப் பிடித்துக் கூட்டிப் போக நீ அருகிருக்க வேண்டுமோ?'' என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

சாருமதி உதட்டைக் கடித்துக் கொண்டு அமைதியானாள்.

குரல் மாற ''தனியாக என்ன, சாருமதி? உன்னை விட்டுத் தனியாகச் சுற்றவில்லையா? அத்தோடு, விடுதியில் எத்தனையோ பெண்கள் இருக்கும்போது, இவள் மட்டும் 'தனி' என்ன? இவ்வளவு காலமும் போல அதே விடுதியிலேயே தொடர்ந்து தங்கட்டும். வாடகையைப் பகிர்ந்து கொள்கிற மாதிரி, ஏதாவது ஏற்பாடு

செய்து கொண்டால், நீ சொல்கிற தனிமையும் இல்லாமல், அவளுக்குப் பணமும் மிச்சமாகும்'' என்று எளிதாக, அதே சமயம் கண்டிப்புடனும் தீர்வு சொல்லி விட்டான் மோகனசுந்தரம்.

அலுவலகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வது போல!

அப்போதும், சாருபாலா என்ன சொல்வாளோ என்று மூத்தவளுக்கு உதைப்பாகவே இருந்தது.

ஆனால், மோகனசுந்தரம் சற்று ஏளனமாகச் சிரித்தான். ''அவள் உன்னைவிட உலகம் தெரிந்தவள், சாருமதி. சட்ட நடவடிக்கையில் இருந்து, அவள் சம்பந்தப்பட்ட முழு விவரத்தையும் சொல்லிப்பார். கல்யாணம் என்றைக்கு என்று அவளே கேட்பாள்.''

மோகனசுந்தரம் பாலாவை மட்டமாக நினைப்பது நன்றாகவே தெரிந்தது. ஆனால், ஒன்றரை லட்ச ரூபாய் இழப்பை ஏற்படுத்தி வைத்திருப்பவளை, உயர்வாக நினைக்க வேண்டும் என்று எப்படிக் கேட்க முடியும்?

திருடினால்தான் தப்பு என்று இல்லை. அவரவர் பதவியின் பொறுப்பு மறந்து, கவனக் குறைவாக இருப்பினும் மிகப் பெரிய குற்றமே. அத்தோடு, தங்கையின் தவறு, கவனக் குறைவு மட்டுமே என்றுதான், மோகனசுந்தரத்துக்கு என்ன நிச்சயம்?

அந்த நிச்சயம் இருந்ததால்தான், வீட்டுக்குள் வரக் கூடாது என்கிறான்.

அவமானமாக உணர்ந்தபோதும், அதில் அவள் சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று புரிய ''நான் போய், பாலாவிடம் சொல்கிறேன் சார்'' என்று மறுபடியும் சாருமதி எழுந்தாள்.



கூடவே எழுந்து ''செய், திருமணம் பற்றிய மற்ற ஏற்பாடுகளை நான் கவனிப்பதாகத் தெரிவித்து, அவளை, அவளது தளத்துக்குப் போகச் சொல்லிவிடு. அதற்குள், அங்கே அவள் செய்ய வேண்டிய பணி பற்றி, தளத்து நிர்வாகியிடம், நான் கூறி விடுவேன். வேலை நேரத்திற்கு அதிகத் தாமதம் ஆகாமல் பார்த்துக் கொள். ஆனால், அதற்கு முன்...'' என்றவாறு அவள் அருகில் வந்தான் அவன்.

அதற்கு முன்?

விரிந்த கண்களால் அவள் பார்க்க ''இன்று நம் திருமணத்தை உறுதி செய்திருக்கிறோம், சாருமதி. அதற்கு அடையாளமாக...'' என்று அவளது விரல்களைப் பற்றி, லேசாக முத்தமிட்டான் மோகனசுந்தரம்.

அவனது உதடுகள் பட்ட இடத்தில் தோன்றிய குறுகுறுப்பு, உடல் முழுவதும் பரவுவதை உணர்ந்து சாருமதி திகைத்தாள்.

## 6

மோகனசுந்தரம் திருமணத்துக்குக் கேட்டான் என்று அறிந்ததும், அவனை நேரில் வாழ்த்தப் போவதாகக் கூறி கிளம்பிய சாருபாலாவைத் தடுத்து நிறுத்துமுன், சாருமதி பெரிதும் சிரமப்பட்டுப் போனாள்.

''அடடே! இங்கே சேர்ந்த புதிதிலேயே ஒருநாள், முடிந்தவரை முதலாளி கண்ணில் படாமல் ஒதுங்கச் சொல்லி எச்சரித்தாய் அல்லவா? எதற்கு என்று, இப்போது தெரிகிறது. அப்போதே, அவரைக் கணக்குப்

பண்ணத் தொடங்கி விட்டாய் போல? என்னக்கா நீ? உனக்குப் போட்டியாக, நான் என்றேனும் வருவேனா? உண்மையைச் சொல்லியிருந்தால், என் நண்பர்களிடம் கேட்டு, நானும் ஏதாவது உதவி செய்திருப்பேன்., வேலையும் என்றோ முடிந்திருக்கும், வசதியோடு வாழவும் தொடங்கியிருப்போம்!'' என்று பேசிக் கொண்டே போனாள்.

பொறுக்க மாட்டாமல், அவளது பேச்சை நிறுத்தி, இது காதல் கல்யாணம் அல்ல, இந்த இக்கட்டான நிலையை சமாளிப்பதற்கான என்று சொல்லி, ஏற்க வைக்குமுன், சாருமதி படாத பாடு பட்டுப் போனாள்.

அப்போதும், மற்றவள் அதை முழுதாக நம்பியதாக மூத்தவளுக்குத் தோன்றவில்லை.

அடுத்து, சின்னவளது புதிய பணி பற்றிச் சொல்லி, அவளை வேலைக்கு அனுப்புமுன், சாருமதி இன்னொரு போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

''என்னக்கா உளறுகிறாய்? நிறுவனத்து முதலாளியுடைய மைத்துனி, அதே நிறுவனத்தில் சாதாரண விற்பனைப் பெண்ணாக வேலை செய்வதா? முடியவே முடியாது! நான் மாட்டேன்'' என்று ஒரேடியாகக் குதித்தாள்.

''நாம் இருக்கும் நிலையில்...'' என்று மூத்தவள் சொல்லத் தொடங்கியதை, சின்னவள் காதிலேயே வாங்குவதாக இல்லை.

'தன்'னிலேயே கவனமாக, படபடவென்று அவள் பேசிக் கொண்டே போனாள். ''அதிலும் எனக்கு இந்த பணி இறக்கம் வேறு! கல்லாவில் ஸ்டைலாக உட்கார்ந்து



பணம் வாங்கிப் போடுவதை விட்டு விட்டு, வாடிக்கையாளர் பின்னாலே ஓடிச் சாமான்களை எடுத்துக் கொடுப்பதா? சும்மாவே, இந்த மாதிரி கேவலப்பட என்னால் முடியாது. அதிலும், முதலாளியுடைய மைத்துனியாக இருந்து கொண்டு... சேச்சே, எவ்வளவு அசிங்கம்! மாட்டவே மாட்டேன்! நிர்வாகி, அல்லது உதவி நிர்வாகியாக... குறைந்த பட்சமாக, நிர்வாகிக்குச் செயலாளராக என் அளவிலாவது, ஏதாவது செய்கிறேன். அடடே! அதுதான் சரி. நீ பார்க்கும் வேலை காலியாகும் அல்லவா? அதை, எனக்குத் தரும்படி மோகனிடம் சொல்லிவிடலாம். வாக்கா, இப்போதே போய்ச் சொல்லிவிட்டால், உன் இடத்துக்கு வேறு ஆள் பார்க்கிற வேலை. மோகனுக்கு மிச்சம்!'' என்று சாருபாலா மடமடவென்று திட்டம் தீட்டிய விதத்தில் சாருமதி அயர்ந்தே போனாள்.

மோகனாமே!

மணந்து கொள்ளக் கேட்டிருக்கிறான்! அவளே இன்னமும் 'சார்' என்கிறாள்.

தங்கையின் பேச்சு, ரொம்பவும் அதிகப்படியாகத் தோன்ற ''யாருக்கு மிச்சம்?'' என்று உள்ளடக்கிய கோபத்துடன் வினவினாள்.

''மோகனசுந்தரத்துக்கு!'' என்றாள் தங்கை, மிகவும் இலகுவாக ''குடும்பத்தில் ஒருவராகப் போகிறார். அவரைப் போய் இன்னமும் சார், பாதாம்கீர் என்றா, கூறுவது? பெயர் சொல்லி, அதிலும் இப்படிச் சுருக்கப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டால்தான், முதலாளிக்கு நெருக்கமானவர்கள் என்று, நம்மோடு கூட வேலை செய்கிறவர்களுக்கு நம்மிடம் ஒரு பயம் இருக்கும்!'' என்று தமக்கை விளக்கம் வேறு கொடுத்தாள்.

தங்கை, அவளைவிட விவரம் அறிந்தவள் என்று, எம்டி சொன்னது சரிதான் என்று, சாருமதிக்கு இப்போது தோன்றியது.

''எழுந்திருக்கா, சீக்கிரமாகப் போய் மோகனிடம் சொல்லி விடலாம்'' என்று தமக்கையின் கையைப் பற்றி எழுப்பிவிடவும் சாருபாலா முனைந்தாள்.

கால்களை அழுத்தமாக ஊன்றி அசையாமல் இருந்து கொண்டு ''பொறு'' என்று பற்றிய தங்கையின் கையையே பலமாக இழுத்து மறுபடியும் உட்கார வைத்தாள், சாருமதி ''முதலில் நாம் சில விஷயங்கள் பேச வேண்டும்'' என்றாள் குரலிலும் அழுத்தத்துடன்.

இழுத்த இழுப்புக்கு வரும் தமக்கையின் போக்கு திகைப்பைத் தர, பேச்சிழந்து, மூத்தவள் முகத்தைப் பார்த்தாள் பாலா.

''கவனி பாலா, இந்தத் திருமணம் நடப்பதற்கும், அதைத் தொடர்ந்து, ஒன்றரை லட்சம் ரூபாயைக் கட்டி நம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சா... வந்து, அவர் சில நிபந்தனைகளைக் கூறியிருக்கிறார். அவைகளை அப்படியே நிறைவேற்றினால் தவிர, அவர் நமக்கு எந்த உதவியும் செய்ய மாட்டாராம்'' என்று தொடங்கி, மோகனசுந்தரம் கூறியவற்றைத் தங்கைக்குத் தெரிவித்தாள், சாருமதி.

சற்று நேரம் திகைத்துப் போய்ச் சிலையாக அமர்ந்திருந்த சாருபாலா திடுமென நகைத்தாள். ''எல்லாம் டூப் அக்கா. சும்மா, பொய்யான மிரட்டல். எதிர்காலத்தையே உன்னிடம் ஒப்படைக்கும் அளவு, அவருக்கு உன்னிடம் ஆசை இருக்கிறது, என்பது நிச்சயம். அதில்லாமல்



மணக்கக் கேட்க மாட்டார். அதனால் அவரது ஒன்றிரண்டு நிபந்தனைகளை மறுத்தாலும், அப்படி ஒன்றும் திருமணத்தை நிறுத்திவிட மாட்...''

தங்கையின் பேச்சில் குறுக்கிட்டு ''முட்டாள் தனமாக உளறாதே!'' என்று அதட்டினாள் சாருமதி. ''எம்டி கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். இதில் எந்த ஒரு சிறு மாற்றத்துக்கும் இடம் கிடையாது. அவர் சொன்னதை முழுதாக அப்படியே ஏற்காவிட்டால், இதையும் முழுதாக மறந்துவிட்டுச் சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுக்கப் போவதாகக் கூறிவிட்டார். அதனால், ஒன்று அவரது திட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள், அல்லது நடப்பது நடக்கட்டும். இதில் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. அத்தோடு இன்னும் ஒன்றையும் தெரிந்து கொள். வாழ்க்கை முழுவதுக்கும் ஒரே திருமணம் என்பதில் சாருக்கு நம்பிக்கை கிடையாது. பின்னாளில் எனக்குப் பிடிக்காமல் போனால், பிரிய வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்'' என்றாள்.

சற்று நேரம், ஒரு சில கணங்களாகவே இருக்கக் கூடும் அமைதியில் கழிந்தது.

நெற்றியைப் பிடித்துக் கொண்டு யோசித்தவளைப் பார்க்க பெரியவளுக்குப் பரிதாபமாகக் கூட இருந்தது.

ஆனால், திடுமென நிமிர்ந்து ''இந்தக் கல்யாணம் என்றைக்கு நடப்பதாக இருக்கிறது?'' என்று சின்னவள் கேட்கவும், சாருமதிக்கு தூக்கி வாரிப் போட்டது!

மோகனசுந்தரம் கணித்தது போல, அப்படியே சொல்கிறாளே!

''அ... அப்படியானால், உனக்குச் சம்மதம் என்று அவரிடம் சொல்லி விடவா?''

''வேறே வழி?'' என்று எரிச்சலுடன் கேட்டாள் தங்கை. ''இல்லையென்றால், ஜெயில் களி தின்ன வைத்து விடுவான் போல அல்லவா, இருக்கிறது! இப்போது சரிசரி என்று சமாளித்துவிட்டுப் பிறகு பார்த்துக் கொள்ள லாம் என்பதற்கும் இல்லாமல், அவனுக்கு ஒரே திரு மணத்தில் நம்பிக்கையும் இல்லை! கொஞ்சம் அனு சரித்து, அவனை நல்ல மனநிலையிலேயே வைத்துக் கொள், அக்கா! குறைந்த பட்சமாக, அன்றைக்கு பணம் எடுத்த திருடி, தான் திருடியதை ஒத்துக் கொள்கிற வரையாவது, எச்சரிக்கையோடு இரு!''

திருடியாமே! கண்ணால் பார்த்த மாதிரி, அதிலேயே நிற்கிறாளே! இவள் மாறமாட்டாள்.

''சரி பாலா. நீ, உன் தளத்துக்குப் போ. தாமதம் பண்ண வேண்டாம் என்று குறிப்பிட்டுச் சொன்னார்'' என்றாள் தமக்கை.

''அந்த ஆள் சொல்வதற்கென்ன? அவருக்கா, அவமானம் பிடுங்கித் தின்னப் போகிறது?'' என்று எரிச்சல் பட்டபோதும், அதற்கு மேல், நேரத்தை வீணாக்க தைரியம் இல்லாமல், சாருபாலா கிளம்பிச் சென்று விட்டாள்.

இவளுக்கு என்ன இலகுவாக மோகன் 'அந்த ஆள்' ஆகி விட்டார். ஒருவேளை இவளைப் போல, அந்தந்த நிமிஷத்துக்குத்தான் வாழ வேண்டுமோ? இப்படி உளப்பிக் கொண்டே இருக்க நேராதே!

மதிய உணவு இடைவேளையின்போது, வருங்கால மனைவியைத் தன் அறைக்கு வரவழைத்து, நடந்தது பற்றி, மோகனசுந்தரம் விசாரித்தான்.



சாருமதி உள்ளே சென்றதும், இருவருக்குமாகக் கொண்டு வந்திருந்த உணவை, உரியவாறு எடுத்து வைத்துவிட்டுச் சென்ற காண்டீன் பணியாளின் பார்வையில், அவளது முகம் கன்றியது.

''உன் முகத்தில் இந்தச் சிவப்பு பரவுவதைப் பார்க்க, அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் சாருமதி, மற்றவர்கள் கருத்துக்கு இந்த அளவு மதிப்புக் கொடுத்தால், அப்புறம், உனக்காக உன்னால் வாழவே முடியாமல் போய்விடும். ஏனென்றால், எல்லோருக்கும் நல்லவராக வாழ யாராலும் முடியாது! மானம் மரியாதை பற்றிக் கற்றுக் கொடுத்த என் மாமனார், இந்த பாடமும் எடுத்திருப்பார் என்பது, என் நிச்சயமான நம்பிக்கை!''

பார்க்க அழகாக இருக்கிறது என்கிறானே என்று மனம் குளிர்கையில், அவன் குறைப்பட்டது, அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அதிலும், மாமனாரை இழுத்து வைத்துப் பேசிய விதத்தில் சிரிப்புதான் வந்தது எனலாம்.

புன்னகையை அடக்கியபடியே ''சொன்னால், நானே வாங்கி வந்திருப்பேனே. அனாவசியமாக, அவன் வாய்க்கு அவல் கொடுத்திருக்க வேண்டாமே என்று நினைத்தேன்'' என்றாள் அவள்.

''ஏனோ? நமக்குத் திருமணம் என்று தெரியும்போது 'நான் அப்போதே நினைத்தேன்' என்று எல்லோரிடமும் சொல்லி, சந்தோஷப்பட்டுக் கொள்வான். பைசா செலவில்லாத மகிழ்ச்சி! அதைக் கெடுப்பானேன்?''

மனத்திரையில் மலர்ந்த அந்தக் காட்சியில் அவளது புன்னகை மேலும் விரிந்தது.

இருவரும் உரையாடியவாறே உணவருந்தினர்.

பாலா கூறியதைக் கேட்டதும், அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''பாதாம் கீரா?'' என்று மீண்டும் நகைத்தான். ''ஆனால், அவள் சொன்னதிலும் ஓர் உண்மை இருக்கிறது'' என்றான் ''நீ இன்னமும் என்னை, யாரோ போல சார் என்று அழைப்பது சரியில்லைதானே? என் தாத்தா பெயரை எனக்கு வைத்தார்களாம். ஆனால், ஒரே குடும்பமாக இருந்ததால், அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிட முடியாமல், அவரவருக்குப் பிடித்தமான செல்லப் பெயர் வைத்து, அழைப்பார்கள். அம்மாவுக்குக் கண்ணன், தம்பி, அப்பாவுக்கு ராஜா, தாத்தா பாட்டி சொன்னால் சிரிக்கக் கூடாது என்னை அப்புக்குட்டி என்பார்கள்! ம்ம்... சிரிக்கக்கூடாது என்று சொன்னேனில்லையா?'' என்று தானும் சிரித்து விட்டு ''நண்பர்கள் என்னை மோகன் என்பார்கள். இப்போது சொல்லு, நீ எப்படி என்னை அழைக்கப் போகிறாய்?'' என்று கேட்டான்.

பாலாவின் 'மோகன்' சாருமதியின் மனதில் ஒரு கைப்புச் சுவையை உண்டு பண்ணியிருந்தது. 'நெருக்க மானவ'னாகக் காட்டிக் கொள்வதிலும்.

பதிலைத் தள்ளிப்போட எண்ணி ''அப்பு என்று செல்லமாக அழைத்துக் கேட்டிருக்கிறேன்! குட்டி குட்டிம்மா என்று கொஞ்சுவதையும், அப்புக்குட்டி என்றால் பயங்கரச் செல்லம் போல!''

''படு பயங்கரச் செல்லம்! ஒரு பொருளை ஆசையாகப் பார்த்தாலே, நாலு பெரியவர்களில் ஒருவர் வாங்கி வந்து கொடுத்து விடுவார்கள்... ஒஹோஹோ!



விளையாட்டுப் பொருளில் தொடங்கி, உயிருள்ள பெண்கள் வரை வந்து விட்டது என்று எண்ணுகிறாய் அல்லவா?'' என்று மோகனசுந்தரம் கேட்கவும், சாருமதி திடுக்கிட்டுப் போனாள்.

அவள் அப்படி எண்ணமிட்டது மெய்யே!

தன் பேச்சைத் தொடர்ந்து, இப்படி நினைக்கக் கூடும் என்று ஊகித்துச் சொன்னானா? அல்லது 'அடுத்தது காட்டும் பளிங்கு போல...' என்று வள்ளுவர் சொன்னாரே, அதுபோல, மனம் எண்ணியதை, முகம் அப்படியே காட்டி விட்டதா?

எதற்கும் முக பாவனையில் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது என்று, தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டவள், வேகமாக யோசித்து ''சேச்சே, அப்படி யெல்லாம் நான் நினைக்க மாட்டேன், சார். நீங்கள் எப்படி இருந்தாலும், அவர்கள் பெற்று வளர்த்த பெரியவர்கள். அவர்களிடம் எனக்கு மரியாதை இருக்கிறது, சார்!'' அவனுக்கு ஒரு பதிலும் சொன்னாள்!

''நான் எப்படி இருந்தாலுமா? பரவாயில்லை. குட்டு வைக்கவும், மாமனார் கற்றுக் கொடுத்துதான் வைத்திருக்கிறார். ஒரேயடியாகப் பிள்ளைப் பூச்சியாக இருக்க மாட்டாய். நினைவில் வைத்துக் கொள்கிறேன். ஆனால் நாம் பேசிக் கொண்டிருந்த விஷயம் வேறு. சொல்லு, என்னை எப்படி அழைக்கப் போகிறாய்?'' என்று மறுபடியும் கேட்டான் அவன்.

தள்ளிப் போடாமல், சீக்கிரமாக முடிவெடுக்கச் சொல்லுகிறான் 'முந்தினவன் கை மந்திரவாள்' என்று தொழில் விவகாரங்களில் செய்வது போல.

ஆனால், தொழில் செய்ய மனம் தேவையில்லை மூளை போதும் வாழ்க்கை பெரும்பாலும் மனதிலேயே நடப்பதாயிற்றே!

மூளையைக் கசக்கி யோசித்து எந்தத் தெளிவும் தோன்றாமல், "முதலில் நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் மட்டும் என்னைச் சாருமதி என்று அரை மீட்டர் நீளத்திலா கூப்பிடப் போகிறீர்கள்? இல்லைதானே? என்னவென்று, நீங்கள் முதலில் சொல்லுங்கள்!" என்று அவனைக் கேட்டாள்.

லேசாக முறுவலித்தான் அவன் "சாரு என்றால் எழில் அழகு சுண்டி இழுக்கும்போது, சாரு என்றால் பொருத்தமாக இருக்கும்! மதி என்றால், புத்தி. என்ன பதில் சொல்வது என்று தெரியாதபோதும், அதைக் காட்டிக் கொள்ளாமல், பதில் கேள்வி கேட்டு சமாளிக்கும் போது மதி என்று கூப்பிடப் போகிறேன். இன்னும், டார்லிங் டியர்... சமயத்துக்கு ஏற்றபடி என்னென்னமோ இருக்கிறது. இப்போது சொல்லு மதி, என்னை எப்படி கூப்பிடப் போகிறாய்?" என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

அவளைக் கண்டு கொண்டான்!

கன்னம் சிவப்பது, முகச் சூட்டில் தெரிந்தாலும், அவளால் யும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், இப்போதும் அவன் சொன்ன எதையும் சாருமதியின் மனம் ஒப்பவில்லை.

முக்கியமாக அந்த 'மோகனை!' டியர், டார்லிங் சம்பனவும் அப்படித்தான், அன்னியமாகத் தோன்றின.

ஆனால், அவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் அதுவும் ஒப்பும் விதமாக!



சொல்வது அறியாமல் திகைப்புடன் பார்த்தால், குறுஞ் சிரிப்புடன் அவன் முகம், அழியாத சித்திரமாய் மனதில் படிய "சுந்தர்!" என்றாள் தன்னையறியாமல்.

அவன் புருவம் உயர்த்தவும், தாத்தா காலத்துப் பெயராகக் கருதுகிறானோ என்று தோன்ற "உ... உங்கள் பெயரின் பின் பாதி!" என்றாள் மெதுவாக.

"உண்மையாகவே இப்போது 'மதி'தான்!" என்றான் அவன் புன்னகை விரிய, "ஆனால், சுந்தர் என்று கூப்பிடுவேன் என்று அழுத்தமாகக் கூறவில்லையே!" என்றான் குறையாக.

"உங்களுக்குப் பிடிக்குமோ இல்லையோ என்று தெரியாமல்... உங்கள் அனுமதி இல்லாமல் எப்படி, அழுத்தம் வரும்?"

"அழைக்கப் போவது நீ. மணக்கக் கேட்டபோதே, அந்த அனுமதி உனக்குக் கிடைத்தாயிற்றே.. உன் விருப்பம் போல எப்படி வேண்டுமானாலும்..." என்றவன், அவளது கண்கள் பளிச்சிடவும் "ஊகூம்! அதற்காக கழுதை, நாய் என்றெல்லாம் எனக்கு பெயர் சூட்டிவிட முடியாதும்மா!" என்று நகைத்தவாறே கூறினான் மோகனசுந்தரம்.

"ஊகூம்... அது போலக் கிடையாதே!" என்று அவசரமாக மறுத்தபோதும், அவளது கண்களில் ரகசியச் சிரிப்பு மறையாதது கண்டு "ஓஹோ, முன் கதையா? அப்போது ரொம்பப் பயந்திருந்தாயா? வில்லன், அரக்கன்... இது போலப் பெயர் அர்ச்சனைகள், நிறைய நடந்திருக்கும் போல?" என்று மென்குரலில் வினவினான்.

நினைப்பதை சட்டென்று ஊகித்து விடுகிறானே என்றிருந்தது, சாருமதிக்கு. உடனே, கேள்வி வேறு!

இதற்கு, ஆமாம் என்று உண்மையான பதிலை அவளால் சொல்ல முடியுமா?

என்ன சொல்லிச் சமாளிப்பது என்று, சாருமதி யோசிக்கையில், எழுந்து அவள் அருகே வந்தான் அவன்.

அவள் அவசரமாகப் பின்னடையவும் நின்று நோக்கி ''ஏன்? அப்போது வெறுப்பாக இருந்ததா?'' என்று யோசனையோடு விசாரித்தான்.

''இல்லையில்லை'' என்று உடனே மறுத்தாள் சாருமதி.

''பின்னே?''

பார்வை தாழ ''வந்து... ரொம்ப நேரம், வேலையில் முழுக் கவனம் செலுத்த முடியவில்லை'' என்று அவள் சின்னக் குரலில் கூற, அவன் முகம் சட்டென மலர்ந்தது.

ஆயினும் அந்தப் பேச்சைத் தொடராமல் ''அதை அப்புறம் பார்ப்போம். நான் உன்னை வரச் சொன்னதற்கு, உன் தங்கை தவிர, இன்னொரு காரணமும் இருக்கிறது, சாருமதி. உன்னைப் பற்றி, என் பெற்றோருக்கு ஈமெயில் அனுப்பினேன். பதில் வந்திருக்கிறது பார்'' என்று அவளை அருகே அழைக்கவும், ஒரு கணம் இவளுக்கு இதயம் நின்று, பின் வேகமாகத் துடித்தது.

அவளைப் பற்றி, அவனுடைய பெற்றோருக்கு ஒன்றும் தெரியாதே! மகனது குணம் தெரிந்தவர்கள் என்றால், அவளை நிச்சயமாக மறுப்பார்கள். மறுத்திருப்பார்கள்.

அதை மீறி, இந்தத் திருமணம் எப்படி நடக்கும்?



ஆனால்... இவ்வளவு நேரம் அவன் பேசிய விதம் நினைவு வர, திகைத்துக் கலங்கிய அவளது மனம், சற்று அமைதி பெற்றது.

பெற்றோர் மறுத்திருந்தால், அவனால் இவ்வளவு சாதாரணமாக பேசிச் சிரிக்க முடியுமா?

பெற்றோருக்கு, அவன் முதலில் அனுப்பியிருந்த குறிப்புகள், அவளுக்கு வியப்பைத் தந்தன.

அவளே கூடச் சிலவற்றை மறந்திருந்தாள் ''இதெல்லாம்...'' என்று அவள் வியப்புடன் கேட்க, ''அலுவலக ஃபைலில் இருந்தது போக, மற்ற விவரங்களைத் தந்தவர், முத்துக்கிருஷ்ணன் சார்! மேலே படி'' என்று உந்தினான் மோகனசுந்தரம்.

அவனோடு ஒட்டினாற்போல, அருகில் நின்று பார்ப்பது, சாருமதியின் உடலில் குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

ஆனால், தள்ளி நின்று பார்க்கும் தைரியமும் இல்லாததால், உள்ளூரத் திணறியவாறு, அவனோடு சேர்ந்து ஈமெயிலைப் பார்த்தாள் அவள்.

பார்த்த அளவில் பிரமித்தும் போனாள்.

அவன் அனுப்பிய அத்தனைக்கும் பதிலாகப் பெற்றவர்கள் மகனுக்கு அனுப்பியிருந்த சுருக்கமான பதில், அவளை மருமகளாக ஏற்கும் விருப்பத்தைக் குறிப்பாகத் தெரிவித்திருந்தது!

வெறும் சம்மதம் அல்ல... விருப்பம்! ஆவல்!

அதாவது, திருமணப் பொறுப்புகளை ஏற்று நடத்த, மனைவியோடு உடனே கிளம்பி வருவதாக, மோகனசுந்தரத்துடைய தந்தை எழுதியிருந்தார்!

அதெப்படி?

மகன், யாரோ ஒரு மேனா மினுக்கியின் வலையில் விழுந்து, அவளை வீட்டுக்குள் கொண்டு வந்து பீடத்தில் ஏற்றப் போகிறானோ என்று, அவர்கள் ஏன் அஞ்சவில்லை?

'நாங்கள் வந்து பார்த்து, முடிவு செய்யலாம்' என்று கூடச் சொல்லவில்லையே!

''மகனிடம் அவ்வளவு நம்பிக்கை'' என்றான் மோகன சுந்தரம், தோளை நிமிர்த்தி, ''நான் எதையும் சரியாகச் செய்வேன் என்ற நிச்சயம்! கிராமத்து வாழ்வுதான் மனதுக்குப் பிடித்திருக்கிறது என்று, தொழிலை, முழு தாகக் கையில் கொடுத்துவிட்டுப் போகவில்லையா? முன்னேறிக் காட்டியிருக்கிறேனே, அதுபோலச் செய் வேன் என்கிற உறுதி!'' என்று பெருமையோடு கூறி னான்.

சரியாகச் செய்வானாமா? அப்படியானால், ஆறு மாதங் களுக்கு முன் அவளிடம் கேட்டதை, இந்தத் 'தப்பு சரி'யில் எதனோடு சேர்ப்பது?

ஆனால், இனி அதை அடியோடு மறப்பது, அவளது மன அமைதிக்கு நல்லது!

மோகனசுந்தரத்துடைய பெற்றோர், உண்மையாக பெரிய மனிதர்களாக இருந்தனர்!

தாயார் கனகலட்சுமி கனிவாகப் பேசினாள், கல்யாண சுந்தரத்தின் நடவடிக்கை, கொஞ்சம் அவருடைய தந் தையை நினைவூட்டுகிற மாதிரி இருக்கவே, சாரு மதிக்கு மிகவும் நிம்மதியாக... மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.



கிராம வாழ்வு பிடித்தம் என்று ஊர்ப்பக்கம் ஒதுங்கி விட்டாலும், தொழிலை அவர்கள் அடியோடு விட்டு விடவில்லை. சூப்பர் மார்க்கெட்டுக்குத் தேவையான அரிசி, பல்வகை தானியங்கள், பயறுகள், காய்கள் என்று பலவும், அவர்களது சொந்த வயல்கள், தோப்புகள், நிலங்களிலேயே விளைவித்து அனுப்பினார்கள்.

ஓரளவு நல்ல லாபம் வைத்து விற்றாலும், தரமான பொருட்களை, மற்ற விற்பனையாளர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்கே 'உங்களுக்காக'வில் கொடுக்க முடிந்தது. இப்படித்தான்!

நல்ல ஐடியா என்று சாருமதிக்குத் தோன்றியது.

நிர்வாகத்தில் தலையிடுவதாகத் தோன்றாதபோதும், விளை பொருட்கள் தேவைப்படும் அளவு, அவைகளுக் கான பணத்தை வாங்குவது போன்ற தொடர்புகளின் மூலம், மகன் தொழிலில் என்ன செய்கிறான் என்று, தந்தை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்!

ஆனால், மகனின் சொந்த வாழ்வில், இந்த கண் காணிப்பை ஏன் விட்டு விட்டார்? தலையிட்டுப் பய னில்லை என்று ஆகிவிட்டதா? அதனால்தான், திரு மணம் பற்றியும், உடனே ஒத்துக் கொண்டு விட்டார் களா?

இதற்கான பதில், ஒரு சாதாரண உரையாடலின் போது, மாமியார் கனகலட்சுமியின் மூலம், சாருமதிக்குக் கிடைத்தது.

ஆனால், கிடைத்தது, வெறும் பதில்தானே தவிர, நிம்மதி அல்ல.

# 7

மாமியார் என்ற பந்தா இல்லாமல் பழகிய கனகலட்சுமியிடம் சாருமதிக்கு பெருமளவு இயல்பாகவே பேசிப் பழக முடிந்தது.

மோகனசுந்தரத்துடைய தாயாருக்குச் செலவைப் பற்றிய கவலை கிடையாது, என்று சின்னவளுக்குத் தெரியும். ஆனால் 'உனக்கு இது நன்றாக இருக்கும், இது உன் அழகைத் தூக்கிக் காட்டும்' என்று நகை, துணிமணிகளைத் தேர்ந்தெடுத்து வாங்கிய விதம் அவளுக்கு வியப்பளித்தது.

வருங்கால மருமகளின் பார்வையைக் கவனித்து விட்டு "என்னம்மா, அப்படி என்ன ஆச்சரியம்?" என்று கனகலட்சுமி நேராகக் கேட்டுவிட, வெளிப்படையாகவே சாருமதியும் தன் மனதைச் சொன்னாள்.

"என்னைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. நான் கெட்டவளாக, பணத்துக்காக உங்கள் மகனை மயக்கியவளாக... இன்னும் எப்படிப்பட்டவளாகவும் இருக்கலாம். ஆனால், தயக்கமே இல்லாமல் என்னை ஏற்றதோடு, பிரியமாகவும் இருக்கிறீர்களே, எப்படி அத்தை?" என்று கேட்டாள்.

"கண்ணன்... என் பையன் அப்படி ஏமாறக் கூடியவன் அல்ல, சாருமதி. அதனால், நீ கெட்டவளாக இருக்க முடியாது என்பது, எங்களுக்கு நிச்சயம். அத்தோடு, உனக்கு அவனைப் பற்றித் தெரியும் என்று சொன்னான்..."

முகம் லேசாகக் கன்ற 'ஆம்' என்பது போலத் தலையசைத்தாள் சாருமதி. "அ... அதனால்தான்... அப்படி



பழகிய எவளோ ஒருத்தி பிடித்து விட்டாளோ என்று நீங்கள் நீங்கள் நினைப்பீர்களோ என்று..." என்று சாருமதி தடுமாறினாள்.

அவளது கையைப் பற்றி, லேசாகத் தட்டிக் கொடுத்தாள் பெரியவள். "இல்லையம்மா. மோகனசுந்தரம் என் பிள்ளை என்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் அவனுக்கு மன உறுதி அதிகம். அந்த மாதிரியெல்லாம் லேசில் மயங்கிவிட மாட்டான். இதை எப்படிச் சொல்வது... தம்பி, நிர்வாகப் படிப்புக்காக வெளிநாடு சென்றான், சாருமதி. அங்கே அவன் படிப்பை நன்றாக முடித்தான்தான். ஆனால், பசிக்கு உணவுபோல, அவர்களது இந்தப் பழக்கத்தையும் பிடித்துக் கொண்டு விட்டான்.

"நம் நாட்டுப் பழக்கம், பண்பாடு, கலாச்சாரம்... எந்தப் பேச்சும் அவனிடம் எடுபடவில்லை.

"நம் நாட்டுக் கலாச்சாரமா? அப்படி ஒன்று, இன்னும் இங்கே இருக்கிறதா? என்று சிரிப்பான்" என்று வருத்தத்தோடு தெரிவித்தாள் அந்த அன்னை.

"திருமணம் ஆகும்வரை, இதைப் பெரிதாக நினைக்க முடியாது. மணமான பின்னும் பார்வை அலைந்தால், அதுதான் பிழை என்று சொல்வான். தப்பு என்று தெரிந்து, ஒளித்து மறைக்கிறவனைத் திருத்தலாம். ஆனால் என்னமோ வேறு மாதிரி வளர்ந்து, இவ்வளவு காலம் வாழ்ந்தும் விட்டதால், எங்களால் இந்த சித்தாந்தத்தை ஏற்க முடியவில்லை. தொழிலை நீ பார், என்று சொந்த கிராமத்துக்குக் கிளம்பி விட்டோம். அதனால் தான், அவனுக்கு திருமணம் என்றதும், எங்களுக்கு இவ்வளவு மகிழ்ச்சி! நீங்கள் இருவரும் ரொம்ப காலம்

சந்தோஷமாக வாழுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு!'' என்று நிம்மதியோடு கூறி முடித்தாள் அன்னை.

பிரிவது பற்றித் தன்னிடம் சொன்னதை, மோகனசுந்தரம் தாயிடம் கூறவில்லை என்று, சாருமதிக்குப் புரிந்தது.

வேண்டும் என்று மறைத்தானோ, இப்போது தேவையில்லை என்று கூறாமல் விடுத்தானோ?

எப்படியோ, மாமியார் நிம்மதியுடனேயே இருக்கட்டும் என்று எண்ணினாள், சாருமதியும்.

சாருபாலாவைப் பற்றிய பேச்சு ஒரே ஒரு தரம் எழுந்தது.

''திருமணத்தின் பின், அவளுக்குத் தனியாக இருப்பது கஷ்டமாக இருக்கக் கூடும். அதனால் சில நாட்கள் எங்களோடு கிராமத்துக்குக் கூட்டிப் போகலாம் என்று பார்க்கிறேன்'' என்ற தாயாரிடம் ''கூடவே கூடாது'' என்று, மோகனசுந்தரம் ஒரேடியாக மறுத்துவிட்டான்.

''அவளுக்குத் தன்னைத்தானே பார்த்துக் கொள்ளத் தெரிய வேண்டும், அம்மா. அது, தனியாக இருந்தால் தான் வரும். ஒரு தரம், இன்னோர் இடம் இருக்கிறது என்று ஆகிவிட்டால், அப்புறம், அவளது சிறு பிள்ளைத் தனம் போகவே, போகாது. அதனால், உங்கள் அன்புப் பெருக்கை சற்று அடக்கியே வையுங்கள்'' என்று அவன் கேலி போலக் கண்டிப்புடன் கூற, அதற்கு மேல், கனக லட்சுமி அந்தப் பேச்சை எடுக்கவில்லை.



ஓரளவு எதிர்பார்த்ததுதான். ஆனாலும், எந்த விதத்திலும் அவன், சாருபாலாவை உள்ளே விடுவதாக இல்லை என்பது, சாருமதிக்கு வருத்தமாகவே இருந்தது.

சின்னப் பெண், பாவம் என்று இளகவே மாட்டேன் என்கிறானே!

ஆனால், இந்த அளவு அவள் சுதந்திரமாக வாழ்வதே பெரிய சலுகைதான் என்று தனக்கே அறிவுறுத்திக் கொண்டு, அமைதியடைய முயன்றாள், அந்தத் தமக்கை.

முதலில் சில தினங்கள், காலையும், மாலையும் சேர்ந்திருக்கும் நேரம் முழுதும் பாலா, அவமானம், கால்வலி என்று ஓயாது குறை பாடியது வேறு. அவள் இழுத்துப் பிடித்து வைத்திருந்த அமைதியை, ஓட ஓடத்தான் விரட்டியடித்தது.

ஆனால், ஒரு நாள் பொறுக்க முடியாமல் ''இப்போது வேறு என்னதான் செய்வது? எங்காவது கண் காணாத தூரம் ஓடிப்போய், நாலு வீடுகளில் பாத்திரம் துலக்கிப் பிழைப்போமா?'' என்று தமக்கை கேட்டுவிட, ''என்ன உளறுகிறாய்? பாத்திரம், துலக்கினால், என் நகம் உடைந்து விடாதா? அதைக்கூட யோசிக்கத் தெரியாமல், என்ன பேச்சு இது?'' என்று அப்போதைக்கு கத்தினாலும், அதன்பின், ஒருவாறு பாலாவின் வாய் அடங்கிப் போனது.

அக்கா ஒன்றும் ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்யவில்லை. ஒரேடியாக விரட்டினால், உதறினாலும், உதறிவிடுவாள் என்று, அவள் மனதில் பட்டிருக்கும் போல.

திருமணமும் நல்லபடியாக நடந்தேறியது.

தகப்பனார் சுந்தரம் சென்னையில் இருந்து, தொழிலைக் கவனித்துக் கொள்ள மணமக்கள் இருவரும் ஒரு வாரம் தேனிலவு சென்று வந்தார்கள்.

இது போன்ற ஏதோ ஒரு காரணத்துக்காக அல்லாமல், சாதாரணமாகத் திருமணம் செய்தவர்களும், இதைவிட ஒன்றும் அதிக சந்தோஷமாக இருந்துவிட முடியாது என்று, சாருமதிக்குத் தோன்றியது.

கிட்டத்தட்ட தேனிலவு முழுமைக்கும் இருவரும் ஒருவருக்கொருவர் 'சாரு' 'சுந்தர்' ஆகவே இருந்தார்கள்.

தேனிலவு முடிந்து மணமக்கள் திரும்பி வந்ததும், பொறுப்பை மகனிடம் ஒப்புவித்துவிட்டுப் பெரியவர்கள் நிம்மதியோடு கிராமத்திற்குச் சென்றார்கள்.

வந்ததும் தங்கையைப் பார்க்கப் போன தமக்கையிடம், சாருபாலா, தன் வழக்கமான 'ஞைஞை'யைத் தொடங்கினாள்.

அவளுக்குப் பதிலாகப் பில் போட வந்தவள், அவளை ஏளனமாகப் பார்க்கிறாளாம். வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களை எடுத்துக் கொடுத்து, வேண்டாததைத் திரும்பவும் அடுக்கி வைக்குமுன், கால் வலி உயிர் போகிறதாம். கொஞ்ச உட்காருமுன் 'சூபர்வைசர்' திட்டுகிறாளாம்.

இந்தக் கொடுமையை மறுப்பதற்காகச் சற்று வெளியே போய் வரலாம் என்றால், கையில் காசே இல்லையாம்.

மனவேதனை தாங்காமல், சீக்கிரமே செத்தாலும் செத்து விடுவாளாம்!



முகம் வாடி வந்த மனைவியைப் பார்த்த மோகனசுந்தரம், அவளது வெளிநடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினான்.

இப்போது சமூகத்தில் சாருமதியின் நிலைமை வேறு. முன்போல, ஆட்டோ ரிக்ஷா பஸ்சில் பயணம் செய்வது கூடாது என்றான். அதே சமயம், சாருபாலாவின் வேலை நேரத்தில் தவிர மற்ற சமயங்களில், மனைவிக்குக் கார் அல்லது காரோட்டி கிடைக்காமலும் பார்த்துக் கொண்டான்.

புத்தி கட்டையான ஒருத்தி என்றால், நம் ராசி அப்படி, தேவையான சமயத்தில் கார் சர்வீசுக்குப் போகும். அல்லது டிரைவர் வேறே எங்காவது போய் விடுவார் என்று தன் விதியை நொந்து கொள்வாள்.

ஆனால், இரண்டு மூன்று முறை கவனித்துவிட்டு, சாருமதி, கணவனிடமே நேராகச் சென்று ''ஏன் இப்படி?'' என்று விசாரித்தாள்.

அவனும் சாக்குப் போக்கு சொல்லாமல், நேரடியாகவே பதில் சொன்னான் ''என் மதி கெட்டிக்காரி, சீக்கிரமே கண்டு பிடித்து விடுவாள் என்று, எனக்குத் தெரியும்!'' என்று புன்னகை காட்டிப் பாராட்டியவன் தொடர்ந்து "இன்னும் அதற்கான காரணத்தையும் சேர்த்து, முழுதாகவே ஊகித்திருக்கலாம். ஆனால், அதற்குள் பாசமேகம் வந்து, என் முழுமதியைப் படுதா போட்டு மூடிவிட்டதே! ச்சுச்சு!'' என்று வருத்தப்பட்டான்.

அவன் சொன்ன விதம் மனதைக் குளிர்விக்க ''நான் அடிக்கடி போனால், தன் காலில் நிற்கப் பாலாவுக்குத் தோன்றாது என்கிறீர்கள்'' என்றாள்.

''மேகம் விலகி மதியின் பூரண உதயம்'' என்று அவளை அருகிழுத்து அவன் அணைக்க, மற்ற பேச்சு அடங்கிப் போனது!

இரண்டு நாட்கள், சாருமதி வீட்டைச் சுற்றி வந்தாள்.

ஆனால் நன்கு 'கிரீஸ்' தடவிய இயந்திரம் போல, வீட்டில் எல்லாமே, ஏற்கனவே ஒழுங்காக நடத்தப்பட்டு வந்ததால், வீட்டு நிர்வாகத்தில் சாருமதி செய்ய எதுவுமில்லை. தானாகவே சிறப்பாக நடக்கும் ஒன்றில் தேவையற்றுத் தலையிட்டுக் குழப்பம் செய்ய விருப்பம் இல்லாமல், சத்தமற்று ஒதுங்கிப் போனாள் அவள்.

ஆனால், சிறு வயதில் இருந்து, நோயாளித் தாயாருக்கு உதவியாகவும், தங்கையின் பல்வேறு தேவைகளை கவனித்தும், கூடவே தன் வேலைகளைச் செய்யும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டுப் பழகியிருந்தவளால் சும்மா சோம்பியிருக்க முடியவில்லை.

எவ்வளவு நேரம் தோட்டத்தில் நடப்பது? எவ்வளவு நேரம் டி.வி. பார்ப்பது?

பழையபடி வேலை செய்வதை, மோகனசுந்தரம் முதலிலேயே மறுத்துவிட்டான்.

அவளாகப் போகாவிட்டாலும், தங்கை தேடி வந்து ஏதாவது பிரச்சினை கிளப்புவாள் என்று கணவன் நினைப்பது தெரிந்து, அவளும் அதை வலியுறுத்த வில்லை.

ஆனால் ஒன்றுமே செய்யாமல் இருப்பது பெரிய கொடுமையாகத் தோன்ற, கணவனிடம் சென்று, ''என்னால் இப்படி நாள் முழுவதும் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. பழைய வேலை கூடாது என்றால், வேறு ஏதாவது வேலை வேண்டும்'' என்றாள் எரிச்சலோடு.



யோசனையோடு பார்த்தாலும், ''ஈஸி, ஈஸி, சாருமதி. உனக்குப் பொழுது போகவில்லை. அதுதானே? அதற்கு வெளியே போய் வேலை செய்தால்தான் தீரும் என்று இல்லையே! வீட்டில் இருந்தே கூட, எனக்காக ஒரு பெரிய வேலையை நீ செய்ய முடியும். உண்மையில், அந்தப் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டால், எனக்கு ஒரு பெரிய தலைவலி தீரும்'' என்று எளிதாகப் பேசினான் மோகனன்.

''என்ன வேலை?'' என்று சந்தேகத்துடன் கேட்டாள் மனைவி.

ஒப்புக்காக ஏதோ வேலையைத் தலையில் கட்டி, கணவன் தட்டிக் கழிக்க முயற்சிக்கிறான் என்பது அவளுக்கு. மற்றபடி, அவன் சொல்லுகிற அளவு முக்கியமான வேலை என்றால், இத்தனை ஆண்டுகளில், அதற்காக ஓர் ஆளை அவன் நியமிக்காமலா இருந்திருப்பான் என்பது அவளது கேள்வி.

''இது வெளி ஆட்களிடம் கொடுக்கக் கூடியது அல்ல, சாருமதி. என் தனிப்பட்ட தபால்களைப் பிரித்துப் படித்து தேவையானதைச் செய்ய வேண்டும். அம்மா, அப்பா இங்கே இருந்தவரை, அம்மாவிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்திருந்தேன். திடீரென்று 'நீயே பார்த்துக் கொள்' என்று கிராமத்துக்குக் கிளம்பிப் போய்விட்டார்கள். மற்ற வேலைகளுக்கு இடையே, இதைப் பார்க்க முடியாமல், மலை போலச் சேர்ந்துவிடும். அப்புறம், அவசர அவசரமாகச் செய்யும்போது, முக்கியமான சிலது விட்டுப் போய்விடுவதும், உரிய காலத்தில் செயல்பட முடியாமல் தட்டிப் போவதும் உண்டு. இந்தப்

பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டால், இனி, அது போன்ற பிரச்சினைகள் நேராது'' என்றான் அவன் சீரியசாக.

இன்னமும், சாருமதிக்குக் கணவன் பேச்சில் முழு நம்பிக்கை வரவில்லைதான். ஆனால், அதை வெளிப் படையாகச் சொல்ல, இன்னும் வலுவான காரணம் வேண்டும் என்பதோடு, சும்மா இருப்பதற்கு, இப் போதைக்கு, இந்த வேலையைத் தொடங்கலாமே என்று எண்ணி ஒப்புக் கொண்டாள்.

ஆனால், மெய்யாகவே நிறையத் தபால் சேர்ந்துதான் இருந்தது.

வீட்டில் இருந்த அவனது அலுவல் அறை மேசை யில் பல அடுக்குகளாக வைக்கப்பட்டிருந்த தபால் உறைகளைக் கண்டதும், 'ஈமெயிலும், எஸ்எம்எஸ்சும் சேர்ந்து, கடிதம் எழுதும் பழக்கமே அழிந்து போயிற்று என்று நினைத்தேனே! உங்களுக்கு இத்தனை வந்திருக் கிறதே!'' என்று சாருமதி ஆச்சரியப்பட்டாள்.

''இவற்றில் சில, பிறர் அறியக் கூடாதவைகளாக இருக்கும். சில எழுத்துக் காப்பி வைத்துக் கொள்ள வேண் டியவைகள். சிலது, படித்துவிட்டுக் கிழித்துப் போட வேண்டியவை... நேராக குப்பைத் தொட்டிக்குள் செல்ல வேண்டியதுகளும் இருக்கும். பிரித்துப் படித்து, அதற்கு உரிய மரியாதை செய்ய வேண்டும். நீயாக செய்ய முடிந்ததைச் செய். சந்தேகமாக இருப்பதை என்னிடம் கேட்டுக் கொள்'' என்று கூறி, அந்த அறையின் சாவியை அவளிடம் கொடுத்தான் மோகனசுந்தரம் ''எப்போதும் அறையைப் பூட்டியே வை'' என்றான்.

''ரொம்பப் பத்திரமாக பாதுகாக்கப்பட இங்கே என்ன...?'' என்றவாறு பார்வையை ஓடவிட்டபோது, சுவரில்



பதிக்கப்பட்டிருந்த அலமாரிகள் கண்ணில் பட்டன. ''இவைகளில் என்ன இருக்கின்றன?'' என்று ஆர்வத் துடன் கேட்டுவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள். ''சாரி, சாரி! உங்கள் தாத்தா காலத்து வீடு என்றீர்கள். அறையில் ஏசி இருந்தாலும், ஜன்னல்களே இல்லை. பழைய காலத்துப் பொக்கிஷ அறையோ என்று... சாரி, நான் கேட்டிருக்கக் கூடாது'' என்று சாருமதி மறுபடியும் வருத்தம் தெரிவித்தாள்.

அருகில் வந்து, அவளது தோளைப் பற்றினான் மோகனன் ''இத்தனை 'சாரி' எதற்கு? நீ என் மனைவி, சாரு. அறிந்து கொள்ளும் உரிமை உனக்கு உண்டு. நீ சொன்னது போல, இது பொக்கிஷ அறையாகத்தான் இருந்தது. தாத்தா பாங்கை நம்பியது இல்லை. எல்லாப் பணத்தையும் இங்கேதான் வைத்திருந்தார். அப்பா பார்க்கும்போது, எல்லாம் பாங்கிற்குப் போய்விட்டது. ஆனால் அப்பாவும், அவரைத் தொடர்ந்து நானும் இதை, அலுவல் அறையாகப் பயன்படுத்துகிறோம். சில முக்கியமான பத்திரங்கள், பிறர் அறிய வேண்டாத கணக்குகள் எல்லாம் இங்கே அலமாரியுள் இருக்கும்'' என்று விரலால் மனைவியின் கன்னத்தில் கோலமிட்ட வாறே விளக்கினான்.

வழக்கம்போல, அவனது அருகாமை உற்சாகத்தைத் தர, ''அடடா! இப்படி என்னை ஏமாற்றி விட்டீர்களே! நானும் இந்தப் பொக்கிஷ அறையில், பல லட்சம் ரூபாய் பணம் இருக்கும், எடுத்துப் போய் ஜாலியாக வேட்டு விடலாம் என்று ஆசையாக நினைத்தால், கணக்குப் புத்தகமும், கடிதங்களும்தான் இருப்பதாகச் சொல்லி மோசம் பண்ணி விட்டீர்களே! அச்சச்சோ!'' என்று சிரித்தாள்.

"சரி. மனைவிக்கு ஒரேடியாக ஏமாற்றம் வேண்டாம். இன்னொன்று தெரிந்து கொள். ஞாயிறன்று பாங்க் விடுமுறை அல்லவா? அதனால் அன்று முழுவதும் சனிக்கிழமை வசூல் தொகை இங்கேதான் இருக்கும். கிட்டத்தட்ட இருபது லட்சத்தைத் தொடும். அலமாரி சாவி கூட, மேஜையின் இழுப்பறைக்குள் தான் இருக்கும். என்ன செய்யப் போவதாக உத்தேசம்?" என்று, அவளது இரு காதுகளையும் வருடினான் கணவன்.

குறுகுறுப்பு தாங்காமல் தலையை இழுத்துக் கொண்டு "எல்லா ரகசியங்களையும் சொல்லி விட்டீர்களே! சும்மா விடுவேனா? ஒரு சனியன்று இரவில், எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டி விட மாட்டேனா?" என்று கெத்தாகப் பதில் சொன்னாள் மனைவி.

"கிழித்தாய்! மாமனார், எப்படி மகளை வளர்த்திருக்கிறார் என்று எனக்குத் தெரியும். இன்னும் நாலு நாள் விற்பனைப் பணத்தையும் சேர்த்து உள்ளே வைத்தாலும், ஒரு பைசா குறையாதாக்கும்" என்று பெருமையோடு கூறி, அவளை அருகிழுத்து, நெற்றியில் முத்தமிட்டான் அவன்.

"பாலாவும் என் அப்பாவுடைய மகள்தான். அவளும் அப்படித்தான்" என்று தன்னையறியாமல் வாயில் வந்தது, சாருமதிக்கு.

அவன் பதில் சொல்லாமல், அவளது விரல்களோடு விளையாடத் தொடங்கவும், "மெய்யாகத்தான் சொல்லுகிறேன், சுந்தர். பாலாவும் உரிமையற்ற பணத்தைத் தொட மாட்டாள்" என்று மீண்டும் உரைத்தாள், "இதை நீங்கள் நம்ப வேண்டும்."



"அவளாகத் திருட மாட்டாள். ஆனால், அவளுடைய நண்பர் குழாம் தவறானது. அவர்களோடு சேர்ந்து, எதுவும் செய்வாள் என்பது, என் அபிப்பிராயம்" என்றான் மோகனசுந்தரம்.

ஒத்துக் கொள்ள மனமற்று, ஆனால், ஒரேடியாக மறுத்துப் பேசவும் முடியாமல் நின்ற மனைவியைப் பார்த்து லேசாகத் தலையசைத்தான் அவன், "பன்றியுடன் சேர்ந்த கன்று பற்றிப் பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள், சாருமதி. நான் அதைத் திருப்பிச் சொன்னேன். அவ்வளவுதான். வா, வேலையைப் பார்ப்போம். மாதிரிக்குச் சிலதை என்ன செய்வது என்று காட்டி விட்டேன் என்றால், அப்புறமாக நீயே பார்த்துக் கொள்ளலாம்" என்று அவளைக் கைப்பிடித்து, மேஜைக்கு அழைத்துச் சென்றான்.

அந்த நேரத்து இனிமை கலைந்தது, சாருமதிக்கு வருத்தமே என்றாலும், பாலாவை அவன் நல்ல விதமாக ஒத்துக் கொள்ளவே மாட்டான் போலிருக்கிறதே என்பது தான் அதிக வருத்தத்தைத் தருவதாக இருந்தது.

ஆனால், அந்தப் பேச்சு முடிந்தது என்பது போல, அவன் அடுத்த விஷயத்தை தொடங்கிய பிறகு, பிடிவாதமாகத் தங்கையைப் பற்றிப் பேச, அவளுக்குத் தைரியம் வரவில்லை.

அதற்கான அடிப்படையான உரிமை, அவளுக்கு என்றேனும் கிடைக்குமா?

ஏதேதோ உரிமைகள் இருப்பதாகக் கூறும் கணவன், இந்த உரிமையைத் தரக் காணோமே! அல்லது, அவரவர் உரிமையை, அவரவர்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமோ?

ஆனால் தொடர்ந்து பேசி, அவன் 'வாயை மூடு' என்று விட்டால், அதை, அவளால் தாங்க முடியாதே!

எனவே அவளாகவே வாயை மூடிக் கொண்டு, அவன் சொன்னதைச் செய்யலானாள்.

மோகனசுந்தரத்தின் சொந்தக் கடிதங்களைப் படிக்கப் படிக்க, அவனிடம் சாருமதிக்குப் பெருமதிப்பு உண்டா யிற்று.

அவனது வருமானங்களில் கணிசமான ஒரு பகுதியை, மோகனசுந்தரம், பல்வேறு தருமங்களுக்குக் கொடுத்து வந்தான் என்பதை அறிய, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பண விஷயத்தில் அவனது கண்டிப்பு எல்லோரும் அறிந்ததே! தொழிலில், ஐந்து, பத்து ரூபாய்க்குக் கூடக் கணக்குப் பார்க்கிறவன், தேவைப்பட்டவர்களுக்கு, ஆயிரம், லட்சம் என்று அள்ளிக் கொடுத்திருக்கிறான். அதிலும் பெரும்பகுதி, படிக்கும் பிள்ளைகளது உதவிக்குச் சென்றது.

அவளது வியப்பைக் கவனித்துவிட்டு, ''நாட்டின் வருங்காலம் சிறக்க, நம்மாலான உதவி!'' என்றான் மோகனன்.

பயனடைந்த பிள்ளைகளின் பெற்றோரின் கடிதங் களைப் படிக்கையில், சாருமதியின் மனம் குளிர்ந்தது.

மனைவியின் மலர்ந்த முகத்தைப் பார்த்துவிட்டு ''எல்லாமே என் ஐடியா என்று எண்ணி விடாதே. சாரு மதி. அப்பா தொடங்கியது வருமானத்துக்கு ஏற்றவாறு நான் விரிவு படுத்தி இருக்கிறேன்'' என்றான் மோகன சுந்தரம்.



அவன் அப்படிச் சொன்னது கூட, அவளுக்கு மகிழ்ச் சியையே அளித்தது.

நன்றி தெரிவிக்கும் கடிதங்களுக்கு 'கடிதம் கிடைத் தது' என்று குறிப்பு மட்டும் போதும் என்றான்.

தேவை என்று பணம் கேட்டு வந்தவைகளுக்கு, எவ்வளவு என்ன என்ற விவரங்களைக் குறித்து வைக்கச் சொன்னான்.

இன்னும் பெரிய அடுக்காகச் சேர்ந்தது, ஏதேதோ அறக்கட்டளைகள் என்ற பெயரில், அல்லது சொந்த கஷ்டத்தைச் சொல்லிப் பணம் கேட்டு வந்த கடிதங்கள், கொடுக்கிறான் என்று தெரிந்ததும், பிடுங்க வந்த அவையோ என்று, சாருமதிக்கே தோன்றியது. அதையே, அவனும் சொன்னான்.

''இவைகளை மிகவும் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும், சாருமதி. தொண்ணூறு சதவீதம் பொய் யானவைகளாக இருந்தாலும், ஒன்றிரண்டு உண்மை யானவைகளாகவும் இருக்கக்கூடும். விசாரித்து அறிந்து, செயல்பட வேண்டும். அடுத்து...'' என்று கணவன் சொல்வதைக் கவனத்துடன் கேட்டவாறே இன்னொரு கடிதத்தைப் பிரித்துப் படித்த சாருமதியின் முகம் கன்றிச் சிவந்தது.

இவ்வளவு நேரம் இருந்த மகிழ்ச்சியும், வினாடிக்கு வினாடி கணவன் மேல் வளர்ந்த மதிப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட, கையில் இருந்த கடிதத்தை வெறுப்புடன் உற்று நோக்கினாள் அவள்.

வெட்கமே இல்லாமல், இப்படியெல்லாம் கூட எழுது கிறார்களா, என்ன?

மகனுக்கு உதவியாக, இந்த வேலையைச் செய்து கொண்டிருந்த மாமியார், அதைச் செய்ய மறுத்து ஊருக்கே போய்விட்ட காரணமும் இப்போது அவளுக்குப் புரிந்தது.

## 8

சற்று நேரமாக, மனைவியிடமிருந்து சத்தத்தையே காணாது போகவே, அவளைத் திருப்பிப் பார்த்த மோகனசுந்தரத்துக்கு விஷயம் உடனே புரிந்து போயிற்று.

தாயிடம் ஏற்கனவே அனுபவித்ததுதானே?

லேசாகத் தோளைக் குலுக்கி "ஓ! அந்த மாதிரி கடிதமா? கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடாமல் என்ன அழகு பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று எந்த விதச் சஞ்சலமும் இல்லாமல் கேட்டான்.

"அழகு பார்ப்பதற்கு, இதில் என்ன ஓவியமா வரைந்திருக்கிறது? உள்ளார்ந்த உணர்ச்சிகளையெல்லாம் கொட்டி எழுதியிருக்கிறார்களே. பத்திரப்படுத்தி வைத்து அவ்வப்போது படித்து ரசிப்பீர்களோ என்று தான் தூக்கிப் போடவில்லை" என்றாள் அவள், எரிச்சலை மறையாது காட்டி,

"அப்பா! என்ன சூடு! ஏன் இவ்வளவு கோபம்?" என்று கேட்டான்.

ஏன் கோபமா?

கணவனோடு காதல் செய்தது பற்றி, ஒருத்தி ரசித்து ரசித்து எழுதுகிறாள். அவன் மனைவிக்குக் கோபம்



வராதாமா? விட்டால், அந்த மற்றவளின் கண்ணையே நோண்டி எடுத்துவிடும் ஆவேசமே வருமே!

எண்ணியதைச் சொல்லுமுன், மோகனனே மறுபடியும் பேசினான் "ஏன் மதி, எப்போதோ நடந்தது. நானும் ஒன்றும், அதை மறைத்து ஏமாற்றியது கிடையாது. அப்புறம் என்ன கோபம்?" என்று வினவினான்.

உண்மைதான். தெரிந்துதான் மணந்திருக்கிறாள். இருவரும் நேராகவே பேசியிருக்கிறார்கள். அவனுடைய தாயாரும் சொல்லியிருக்கிறாள். அப்போதெல்லாம், அசுசியாக உணர்ந்தும் இருக்கிறாள்.

ஆனால், அப்போதெல்லாம் அவ்வளவேதான்!

அத்தோடு, அதற்கும் எனக்கும் ஒன்றுமில்லை என்று ஒதுக்கியும் இருக்கிறாள்.

அப்புறம்? இப்போது மட்டும் என்ன கோபம்?

ஆனால், கடிதத்தில் கண்டது போன்ற நெருக்கத்தில் கணவனோடு இன்னொருத்தி இருந்தாள் என்கிற எண்ணமே, நெருப்பாய் எரிகிறதே! ஏன்? ஏன்?

அவனது 'மதி' என்ற அழைப்பு நிதானப்படுத்த, பதில் சொல்லுமுன் சாருமதி யோசித்தாள். யோசிக்கும் போதே, நெஞ்சு படபடத்தது.

ஊகூம்! அவளது கொதிப்பு, அதன் காரணம் பற்றிய அவளது ஊகம் எதையும் இப்போது அவனிடம் கூறுவது சரியில்லை.

எனவே, தலையை லேசாகச் சிலுப்பி, "உங்கள் புது நாகரீகத்துக்கு. இது புரியாது. ஆனால், ஒருவனுக்கு ஒருத்தி என்று அதிலேயே வளர்ந்த எனக்கு, இதுபோல ஒருத்தி குறுக்கிடுவது. அநாகரீகமாக... அருவருப்பாக

இருக்கிறது. வந்து.... எல்லாமே. இந்த விதமாகத்தானே, பிரிக்க வேண்டும்? நான் அப்புறமாக வந்து பார்த்துக் கொள்ளுகிறேன். இ... இப்போது தலையை லேசாக முணுமுணு என்கிறது. அதனால், கொஞ்சம் வெளிக் காற்றில் நிற்கப் போகிறேன்'' என்று எழுந்து சென்றாள்.

நல்ல வேளையாக, அவனும் அவளை நிறுத்த முயற்சிக்கவில்லை!

மேஜை மீது அவள் வைத்து விட்டுப் போயிருந்த சாவியை மட்டும் அப்புறமாக, அவளிடம் கொண்டு போய் கொடுத்தான் ''தலைவலி பரவாயில்லையா?'' என்று நெற்றியில் இதமான ஒரு வருடலோடு.

இது போன்ற செயல்கள்தான், அவளை, அவனிடம் ஒட்டிக் கொள்ளச் செய்தனவோ?

காரணம் புரியாமல், கண்களில் நீர் மல்க, அதை மறைக்கும் முயற்சியாக, அவன் தோளிலேயே சாய்ந்து கொண்டாள்.

நெஞ்சின் ஒரு மூலையில், ஏதோ உருட்டிப் புரட்டிக் கொண்டே இருந்த போதும், அதைப் பற்றிய யோச னையைச் சாருமதி பிடிவாதமாகத் தள்ளி வைத்தாள்.

அது, தனியே இருந்து யோசிக்க வேண்டியது. இவன் குறுக்கிடக் கூடிய இடத்திலோ, வேளையிலோ செய்யக் கூடியது அல்ல!

முக்கியமாக. அவன் அருகில் இருக்கையில், கூடவே கூடாது!

ஏற்கனவே, ''இன்னமும் தலைவலி முழுதாக விடவில் லையா? முகம் தெளியவில்லையே, மாத்திரை ஏதாவது போட்டுக் கொள்கிறாயா?'' என்று கேட்டாயிற்று.



இன்னும் முழுதாக அந்த யோசனையில் ஆழ்ந்தால், கணவனிடம் நன்றாக மாட்டிக் கொள்வது நிச்சயம். அவனுக்குப் பதில் சொல்லி முடியாது.

ஒருவாறு மறுநாள் காலையில், மோகனசுந்தரம் அலுவலைப் பார்க்க கிளம்பும்வரை சாருமதி எப்படியோ சமாளித்தாள்.

மனதைக் கட்டுப்படுத்துவது, பெரிய பெரிய ஞானி களுக்குக் கூட முடியாதது. ஆனாலும், மனம் தறி கெட்டு ஓடும் போது, டீபாய்க்கு க்ரோஷே பின்னலில் கவர் போடலாமா, ஷாண்டிலியரில் எத்தனை பல்புகள் இருக் கின்றன என்று வேண்டாத விஷயங்களை யோசித்து, தூங்கு மனதை வேறு வழிக்குத் திருப்பினாள்.

அப்போதும் கூட, ''பேசாமல் படுத்துத் தூங்கும்மா. சோர்ந்தாற் போலவேதான் தெரிகிறாய். எதற்கும் டாக்டரைப் பார்த்துவிட்டு வருகிறாயா?'' என்று கேட்டு விட்டு, அவள் படுத்து ஓய்வெடுப்பதாக ஒத்துக் கொண்ட பிறகுதான். அவன் கிளம்பிச் சென்றான்.

கணவன் சொன்னதையே தொடர்ந்து ''சற்று சோர்வாக இருப்பதால் ஓய்வெடுக்கப் போகிறேன். யாருக்காகவும் எதற்காகவும் எழுப்ப வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு. அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

அவ்வளவு நேரமும் கடைப்பிடித்த கட்டுப்பாட் டையும், கவனத்தையும் விட்டு இயல்பாக இருக்கத் தொடங்கியவளுக்கு முதலில் முட்டிக்கொண்டு வந்தது கண்ணீர்தான்.

ஏனெனில். யோசித்து முடிவு செய்வதற்கு, அவ ளுக்கு அவசியமே இருக்கவில்லை.

'மஞ்சள் கயிறு மாஜிக்' என்று பெரியவர்கள் சொல் வது போல, மோகனசுந்தரம், அவள் மனதில் எப்போதோ குடியேறி இருந்தான்.

மற்றபடி, அந்த முகமறியாத பெண்ணின் கண்ணை நோண்டும் அளவு ஆத்திரம், அவளுக்கு வந்தே இராது!

கணவனின் இந்தப் பழக்கம் மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லதான். தந்தை வளர்த்த விதத்துக்கு, இப்படி ஒரு கணவனா என்று வருத்தமே பட்டிருக்கிறாள். எப்படியோ, தங்கை கேவலப்படாமல், தானும் அசிங்கப்படாமல் பாலாவைக் காப்பாற்ற ஒரு வழி கிடைத்தாகக் கருதி, சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று தன்னையே ஆறுதல் படுத்திக் கொண்டும் இருக்கிறாள்.

இதெல்லாம் திருமணத்துக்கு முன், திருமணத்தின் போதும் அப்படித்தான்.

ஆனால், இத்தகைய எண்ணங்கள் எல்லாம், தேனிலவின் போதே காணாமல் போயிருந்ததை, அவள் கவனிக்கவே இல்லை!

வெறும் ஆண் பெண் உறவால் மட்டும், அந்த மாற்றம் நடக்கவில்லை என்பது, அவளுக்கு நிச்சயம். அவனது பேச்சு, நடத்தை தோற்றம்....

முகம் சுளிக்க வைக்காத ஜோக்குகள், அவளது இதம் நாடிச் செயல்படும் கனிவு, கம்பீரமான நடை, உயர் பாவனைகள்.... எது, அவளைக் கவர்ந்து இழுக்காதது! நினைத்து நினைத்து மகிழ்வாளே!

அவன் அயர்ந்து தூங்கும் போது கூட, நிதானமாக அவன் மூச்சு விடுவதைப் பார்த்தபடி நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்திருப்பதே. சுகமாக இருக்குமே!



இதெல்லாம், கணவனிடம் கொண்டு விட்ட உயிர் நேசத்தின் அறிகுறிகளே என்று, அவளுக்கு இப்போ தெல்லாம் தெரிகிறது?

ஆனால், இந்த நேசத்தின் எதிர்காலம் என்ன என்று யோசிக்கும்போதுதான், அவளுக்குப் பகீரென்றது.

மோகனசுந்தரத்தைப் பொறுத்த அளவில், திருமணம் என்பது, புரிய முடியாத உறவு அல்ல.

அப்படிப் பிரியும்போது, அவள் பணம் இல்லாமல் கஷ்டப்பட நேராது என்று அவளிடமே கூடச் சொல்லி இருக்கிறான்!

அதாவது, காதல், நேசம் என்பதெல்லாம், சாருமதிக்கு மட்டும்தான். அவனுக்கு அவள் பத்தோடு பதினொன்று தான்.

கடிதம் எழுதிய அந்தப் பெண்ணைப் போல இன் னொருத்தி!

இந்த எண்ணம் தோன்றியதும், சாருமதி வலியால் துடித்துப் போனாள்.

என்ன தான் வலித்தாலும், உண்மை பொய்யாகாதே!

இதுபோலக் காதலும் கனிவுமாக அந்தப் பெண்ணிடமும் மோகனன் நடந்து கொண்டதால்தானே, அந்த உறவை ரசித்தது பற்றி விரிவாக எழுதி, இன்னொரு உறவை மனுப் போட்டு வைத்திருக்கிறாள்!

எழுதிய கையை ஒடித்து...

உள்ளங்கையில் 'சுருக்' கென வலித்த பிறகு தான், நகம் பதியும் அளவுக்குக் கையை முஷ்டியாக அழுந்த மூடியிருப்பதையே, சாருமதி உணர்ந்தாள்.

அவ்வளவு தூரம் தன்னை மறந்த ஆத்திரம்!

ஆனால் 'மதி' யாய் யோசித்தவளுக்கு, காதலால் வந்த சீற்றம் மட்டுமில்லாமல், இதில் வேறொன்றும் இருப்பது புரிந்தது.

கணவனின் அன்பு அவளுக்கே என்ற உறுதி இருக்கு மானால், ஏதோ பழைய கதை என்று, அந்தப் பெண் ணின் கடிதத்தை அவளால் அலட்சியப்படுத்தி இருக்க முடியும்.

அவனது ஆர்வம் தீர்ந்த பிறகு, சாருமதியின் அன்பும், அந்தப் பெண்ணின் கடிதத்தைப் போல குப்பைக் கூடைக்குத்தான் லாயக்கு. இதை மாற்ற, அவள் செய்வ தற்கு ஒன்றுமில்லை என்கிற கையால் ஆகாத தவிப்பு தான் அவளை, இவ்வளவு பாதித்திருக்கிறது!

இப்போது, எல்லாம் புரிந்து போயிற்று!

ஆனால், எதனால் வந்தது என்று தெரிந்ததால் மட் டுமே, வலி தீர்ந்து விடுமா? கவலையும் அப்படித்தான்.

என்ன செய்வது? அவளது தலைவிதி அப்படி வாங்கி வந்த வரம்....

இப்படியே மனதை உளப்பிக் கொண்டிருந்த சாருமதி சட்டென எழுந்தாள்.

இப்படியே தனியே கிடந்து, மனதைப் போட்டுக் கசக்கிக் கொண்டு இருப்பது மடத்தனம். தன்னிரக்கம் கொள்வது. அவளுக்கு உள்ள தைரியத்தையும் கெடுத்து விடும்.

அதைவிட, ஏதாவது... எதையாவது செய்யலாம்.

இப்படி நினைத்துதான், எழுந்து சென்று முகத்தைக் கழுவிவிட்டு, பக்கவாட்டில் பந்தல் கட்டிப் பட



விட்டிருந்த ஜாதிப்பூவின் மொட்டுக்களைப் பறித்து வந்து, அவள் தொடுக்கத் தொடங்கியது.

ஆனால் பாதிப் பூக்களைத் தொடுக்கு முன்பாகவே, கைகள் தன்னியல்பாகச் சரம் கட்டத் தொடங்கிவிட, மனது பிரச்சினைக்குத் திருப்பிவிட்டது.

இந்தப் பிரச்சினைக்கு விடிவே கிடையாதா?

இன்றைய் தன் மனநிலையை மோகனசுந்தரத்திடம் சொல்லலாமா என்று எழுந்த யோசனை, தோன்றிய கணமே மறைந்தது.

ஒன்று, அவனது பணத்துக்காக இன்றைய நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்பதாக நினைப்பான். அல்லது, அந்தக் கடிதக்காரி போல ஆகிவிட்டாள் என்று எண்ணுவான். எந்த விதமாகக் கருதினாலும், கேவலமே.

பேசாமல், தலையில் இடி விழும் நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டியது தான்.

அது எப்போது....

மயிலிறகால் வருடுவது போல, ஒரு வெண்ணிறக் கைக்குட்டை கன்னத்தில் மென்மையாகப் படவும், சாருமதி திகைத்துத் திரும்பிப் பார்த்தாள்.

அவளுடைய கணவனேதான்! எப்போது வந்தான்?

எதற்காக அழுதாய் என்று கேட்டால் என்ன சொல் வது?

அறிந்த மொழிகளில் உள்ள அத்தனை வார்த்தை களும் மறந்தவளாக அவள் மலங்க விழிக்கையில், மோகனசுந்தரம், அந்தக் கேள்வியைக் கேட்கவே இல்லை.

அலுவலகம் பற்றி ஏதோ சொன்னான் "உன் இடத்துக்கு வந்த வினிதாவுக்கும் முத்துக்கிருஷ்ணன் சாருக்கும் ஒத்தே போகாது போலத் தெரிகிறது. சாருமதி, தளத்து நிர்வாகியுடைய செயலாளர் என்றால், கொம்பு முளைத்த மாதிரி நினைத்துக் கொண்டு, கீழே உள்ளவர்களை அதிகாரம் செய்கிறாளாம்! இன்றைக்கு விற்பனைப் பெண் ஒருத்தியைக் குடிப்பதற்காக ஃபில்டரில் தண்ணீர் பிடித்துவர, வேலை நேரத்தில் அனுப்பி இருக்கிறாள்...."

இவ்வளவு நேரத்தில் சமாளித்துக்கொண்ட சாருமதிக்கு இயல்பாக பேச முடிந்தது.

"ஐயோ, அங்கிளுக்கு அது பிடிக்கவே பிடிக்காதே! சும்மாவே! சும்மாவே, தன் வேலையைத் தானே செய்ய வேண்டும் என்பார்! அதுவும் வேலை நேரத்தில் போய்.... நன்றாக வாங்கிக் கட்டினாளா?" என்று விவரம் கேட்டாள்.

புன்னகை செய்து "வாங்கிக் கட்டியது, அவரிடம் மட்டுமல்ல மதி" என்றபடி, அவள் அருகே அமர்ந்தான் மோகனன். "வாடிக்கையாளரைப் பாராமல் எங்கே போகிறாய் என்று, சூபர்வைசர் விற்பனைப் பெண்ணைத் திட்ட, அவள் விவரம் கூறவும், அவன் நேரே போய் வனிதாவை நன்றாக டோஸ் விட்டிருக்கிறான். தர வரிசைப்படி எனக்குக் கீழே உள்ளவன், என்னை அதட்டுவதா. அவனை 'சஸ்பென்ட்' பண்ண வேண்டும் என்று முத்துக்கிருஷ்ணன் சாரிடம் வனிதா ஆடினாளாம். அவருக்கு வந்த கோபத்தில், நன்றாகத் திட்டி அனுப்பி விட்டு, அவளை வேறே தளத்துக்கு மாற்ற முடியுமா என்று என்னிடம் கேட்டார்! எல்லா தளத்திலும்



வேலையைதானே, செய்வாள்? பயிற்சிக் காலம் ஒரு மாதத்தில் சரியாகவில்லை என்றால், அனுப்பி விடும்படி கூறிவிட்டு, நான் இங்கே வந்தேன்..."

இப்போது கேட்கப் போகிறான் என்று அவள் மீண்டும் பதிலைத் தேடும்போது, "வரிக் குறைப்புக்காக, ஒரு புதுக் கார் வாங்கினால் நல்லது என்று ஆடிட்டர் சொன்னார். உனக்கு நீலம்தானே, அதிகம் பிடித்த நிறம்? அதனால், நீலத்தில் ஒன்று எடுத்து வந்தேன். டிரைவரை வீட்டில் விட்டுப் போகிறேன். புதுக்காரை எடுத்து, உன் தங்கையைப் போய்ப் பார்த்துவிட்டு வா. இன்று.... அவளுக்கு ஓய்வு நாள்தானே?" என்று அவனாகக் கூறினான்.

பாலாவை நினைத்து அழுததாக நினைத்துவிட்டான்! மனைவி விழுங்கியிருப்பது கடப்பாரை என்று அறியாமல், செரிமானத்துக்கு சுக்கு கஷாயம் தருகிறான்!

கணவனின் கனிவு இன்னமும் நெஞ்சைக் கசக்க, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில், சாருமதி அசைவற்று அமர்ந்திருந்தாள்.

அவளது கையைப் பற்றி ஒருதரம் அழுத்தி விட்டு எழுந்தவன் "காரில் ஒரு 'டிரைவ்' போய்விட்டு வந்தால், தலைவலி கூடப் போனாலும் போய்விடும். நேற்றிலிருந்து, தொல்லை செய்கிறதே!" என்று கூறி, மனைவியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

கணவனின் முகத்தில் இருந்த குறுஞ்சிரிப்பும் இந்தப் பேச்சும் சேர்ந்து, சாருமதிக்குச் சுருக்கென்றது.

நேற்றிலிருந்து அவள் சரியாக இல்லை என்பதற்காக விட்டுக் கொடுக்கிறானாமா?

அவள் பேசாமல் இருக்கவும் "என்னடா, கிளம்புகிறாயா?" என்று கேட்டான் அவன்.

மறுப்பாகத் தலையசைத்தாள் மனைவி.

அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்து ''ஏன்?'' என்று வினவினான் மோகனன்.

''அழுது காரியம் சாதிக்க எனக்கு விருப்பம் இல்லை'' என்றாள் பதிலாக.

அவளை எழுப்பி நிறுத்தி ''நீ நினைப்பது தவறு அழாததால்தான் காரியம் நடந்திருக்கிறது. தைரியமாகப் போய்வா'' என்று விட்டுப் போனான் அவன்.

அப்படியென்றால்?

உண்மைக் காரணம், மோகனசுந்தரத்துக்குத் தெரியாது என்பது நிச்சயம்!

தங்கைக்காக ஏங்கினாலும், அதற்காக அவனைத் தொணதொணத்துத் தொல்லை செய்யவோ, அழுது ஆர்ப்பாட்டம் செய்யவோ இல்லாமல், மௌனக் கண்ணீர் வடிக்கிறாள் என்று எண்ணி விட்டான்.

அதற்காகத்தான் இந்த இளக்கம் போல!

அதுவும் நல்லதுதான். இந்த மாதிரி எண்ணிக் கொண்டிருக்கிற வரையும், மோகனசுந்தரம், உண்மைக் காரணத்தை ஊகிக்கவே போவதில்லை!

அந்த மட்டும் ஒரு பெரிய கவலை விட்டது!

சற்று இலகுவான மனதுடன், பாலாவைப் பார்க்கப் போனால், இரு மடங்குக் கனத்தை அவள் நெஞ்சிலே ஏற்றி வைத்தாள், சின்னவள். அந்த அளவுக்குப் புலம்பித் தீர்த்து விட்டாள்.

பணம்! பணம்! பணம்!

திருப்பித் திருப்பி, பணத்தைப் பற்றி மட்டும்தான் பேசினாள்.



கையில் காசே கிடையாதாம். ஒரு பர்கர், பீட்சா, கேஎஃப்சி, எதற்கும் வழியில்லையாம். விடுதியில் கொடுக்கிறதை மட்டும் சாப்பிட்டு வாழ்கிறாளாம். பிச்சைக்காரி வீடுகளில் போடுகிற பிச்சை என்னவானாலும் அதையே உண்டு பிழைக்கிற மாதிரி, அவமானமாக இருக்கிறதாம்.

''என்ன வித்தியாசம், வீடு வீடாகப் போய் கையேந்த இல்லை அவ்வளவுதான்'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் சின்னவள்.

மேஜை மேல் கண்டபடி கிடந்த பொருட்களை ஒதுக்கி விட்டு கையில் இருந்த பையை வைத்தாள் சாருமதி.

உட்காருவதற்கான ஒரு சிறிய இடம் கூட இல்லாமல், மேலும் கீழுமாக இறைந்து கிடந்த பொருட்களை பார்த்துவிட்டு ''அப்படிக் கையேந்துகிறவள் கூட, இருக்கும் இடத்தை, இதை விடச் சுத்தமாக வைத்திருப்பாள்'' என்று வறண்ட குரலில் கூறிவிட்டு, கட்டிலிலும், கீழேயுமாக கிடந்த துணிகளை எடுத்து மடிக்கத் தொடங்கினாள், பெரியவள்.

''இதையெல்லாம் அவ்வப்போது மடித்து வைப்பதற்கென்ன, பாலா? குப்பை மேடு மாதிரி, இதில் எப்படித்தான் படுத்துத் தூங்குகிறாயோ?'' என்று தமக்கையின் கேள்வியில், சாருபாலா கொதித்துப் போனாள்.

''ஆகா, கேட்க மாட்டாயா, பின்னே? உனக்கென்ன மகாராணி? சலவைக்குத் துணியை எடுத்துப் போக ஒருத்தி, சலவை ஆனதைக் கொண்டு வந்து அடுக்க ஓர் ஆள்! கேட்டதை சமையல் செய்து கொடுக்க இரண்டு பேர். அதைப் பரிமாற, சாப்பிட்ட பிறகு சுத்தம் பண்ண... அப்படி எடுப்பாரும் பிடிப்பாருமாக வேலையாட்களை

ஆட்டிப் படைக்கிறவளுக்கு இல்லாதவர்கள் கஷ்டம் எப்படித் தெரியும்? நீ இதுவும் கேட்பாய், இன்னமும் நிறைய கேட்பாய்! தினு கூட அதைத்தான் சொன்னான். புருஷன் வீட்டு சுகபோகத்தில் மூழ்கி, உன் அக்கா உன்னை மறந்தே போய் விட்டாளா என்று, அன்றைக்கு வருத்தப்பட்டான்! யோசித்துப் பார்த்தால், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!" என்று பொரிந்து கொட்டினாள்.

மறந்து விட்டாளா? ஒருவர் மூட்டிக் கொடுத்தால் என்ன வேண்டுமானாலும் சொல்வதா, இதுபோல இச்சகம் பேசுகிறவர்கள்தான் உண்மை விரோதிகள் என்று தெரியாமல்... என்ன பைத்தியக்காரத்தனமான பெண் இவள்!

சொல்லப் போனால், இவளுக்காக இல்லாவிட்டால் இப்படி ஒரு பிரச்சினையான வாழ்வே, சாருமதிக்கு நேர்ந்திராதே!

ஆனால், தன் பெரும் பிரச்சினை பற்றிப் பேச முடியாமல், "ரொம்பக் குறைப்பட்டு கொள்ளாதே. பாலா, நானும் இங்கே இருந்து இதே உணவைச் சாப்பிட்டு வாழ்ந்தவள்தான். எல்லாம் நன்றாகத்தான் இருக்கும்" என்றாள் சற்று அழுத்தமான குரலில்.

"உன் பிச்சைக்காரப் புத்திக்கு அப்படித்தான் தோன்றும். இருந்திருந்து, உனக்குப் போய் காரும் பங்களாவுமாக, இப்படியொரு ராஜ வாழ்வு கிடைத்திருக்கிறதே! கொஞ்சம் கூட உபயோகமே இல்லாமல் இவ்வளவு பணத்தை அமுக்கி வைத்துக் கொண்டு, எனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறாய் பார்! வெறும் பழங்கள். சை!" என்று மேசை மேல் இருந்த பழங்கள் அடங்கிய பையை எடுத்துத் தரையில் விசிறியடித்தாள்.



தரையில் உருண்டோடிய பழங்களைப் பார்க்கையில் சாருமதிக்கு மனம் நொந்தது.

தங்கைக்குப் பணமாக ஒரு பத்து ரூபாய் கூடக் கொடுக்க கூடாது என்பது, மோகனசுந்தரத்தின் நிபந்தனை. ஒத்துக் கொண்டதை, மீற முடியாது. ஆனாலும், ஏதோ தன்னால் ஆனது என்று, உயர்வகை ஆப்பிள், மாதுளை, திராட்சை என்று வாங்கி வந்தவளுக்கு தங்கையின் உதாசீனம் சினத்தையும் ஏற்படுத்தியது.

ஆனால், மனதளவில் வளரவே இல்லாத இவளுடன் என்ன பேசி, என்ன பயன்?

அறை முழுதுமாகச் சிதறிக் கிடந்த பழங்களை வெறித்துப் பார்த்தவள், ஒன்றுமே சொல்லாமல், அறை வாயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

தமக்கையின் பார்வையைப் பின் தொடர்ந்த சாருபாலாவுக்கு, சாருமதி வாயில் புறமாக நடக்கத் தொடங்கியதும், அளவு மீறி விட்டோம் என்று புரிந்து போயிற்று.

சீற்ற மிகுதியில், அக்கா தன்னை அடியோடு விட்டு விடுவாளோ என்ற பயம் வர, ஓடிப்போய்ச் சாருமதியின் கையைப் பிடித்து "அக்கா, மன்னித்து விடுக்கா, ப்ளீஸ். என்னை விட்டுப் போகாதேக்கா. எனக்குக் கையில் பணமே இல்லையா? விடுதிச் சாப்பாடே பிடிக்கவில்லையா? உன்னைப் பார்க்கவும் வர முடியாதா? மனசே சரியில்லாமல்... மனசு கஷ்டத்தில் ஏதோ கிறுக்கு மாதிரி நடந்து விட்டேன். மன்னித்து விடுக்கா. நீ கூடக் கோபப்பட்டால், அப்புறம் நான் எங்கே போவேன்? அம்மா, அப்பா யாரும் இல்லாமல்..." என்று அவள் விசும்பி அழவும், பெரியவளுக்கு மனம் உருகி விட்டது.

மீண்டும் உள்ளே வந்து, துணிகளை மடிக்கத் தொடங்கினாள்.

செய்த தப்பைத் திருத்துகிறவளாகக் கீழே கிடந்த பழங்களைப் பொறுக்கிப் பைக்குள் இட்டு, மறுபடியும் மேஜைமேல் வைத்தாள் தங்கை.

தமக்கை பேசாமலே இருக்கவும், சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு, பாலா, தானே தொடங்கினாள்.

''இப்போது என்னிடம் நூறு ரூபாய் கூட இல்லைக்கா இன்னும் ஒரு வாரம். நான் இதில் கடத்த வேண்டும்! ஒரு ஐஸ்க்ரீம் வாங்கக்கூட முடியாது!'' என்றாள் சோகமாக.

''ஏன் அப்படி? சம்பளம் வாங்கினாய்தானே?''

''பெரிய பிசாத்து சம்பளம்? அதிலும் முன்னை விட ஐநூறு ரூபாய் குறைத்து விட்டார்கள். இந்த வேலைக்கு இதுதான் ஊதியமாம். அக்கா, அத்தானிடம் சொல்லி, என்னைப் பழைய வேலையிலேயே போட ஏற்பாடு செய்க்கா. தினு கூட, நான் ஸ்டைலாக பில் போட்டுப் பணத்தை வாங்கிப் போட்ட அழகே, தனி என்கிறான் இதில் சம்பளமும் கம்மியா? செலவுக்கும் பற்றாமல், மனதுக்கும் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதுக்கா'' என்று குறைப்பட்டாள் சாருபாலா.

''அறையில் இன்னொருவரை வைத்துக் கொள்வது தானே? வாடகை குறையுமே'' என்று துணிகளை மடிப்பதிலேயே கவனமாகக் கேட்டாள் சாருமதி.

''போக்கா, யாரோ ஒருத்தியை இங்கே இருக்க விட எனக்குப் பிடிக்கவில்லை'' என்றவள், தமக்கை மௌனமாக இருக்கவும் ''வந்து பார்த்த இரண்டு பேரும், அறை



சுத்தமாக வைக்கவில்லை என்று போய் விட்டார்கள்'' என்று உண்மையைச் சொன்னாள்.

மடித்து வைத்த துணி வரிசைகளைப் பார்க்கையில், சாருமதியால், இதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், தன்னைத் திருத்திக் கொள்வது தவிர, வேறு வழியே கிடையாது என்று, இந்தப் பெண்ணுக்கு எப்படிப் புரிய வைப்பது?

தன் குறையை சொல்லிக் கொண்டே போனாள் சாருபாலா. ''கையில் பணம் இல்லாமல் சமாளிக்கவே முடியாது என்று, தினு கூடச் சொன்னான், அக்கா. சோனா, சுரேஷ், சங்கர் எல்லோருமே, அப்படித்தான் சொல்லுகிறார்கள்...''

இவர்களுக்கு வேறு வேலையே இல்லையா, கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லாமல், இவளை இன்னமும் கெடுக்கிறார்களே!

எரிச்சலுற்று ''எல்லாம் நன்றாகச் சொல்லுவார்களே, அப்படிச் சொல்லுகிறவர்களை செலவு பண்ணிக் காட்டச் சொல்லு'' என்றாள் சாருமதி காட்டமாக.

ஆனால் ''செய்கிறார்கள், அக்கா. இப்போதெல்லாம் எனக்கும் சேர்த்து பல தடவை. தினுதான் பணம் கொடுக்கிறான். நான், பழைய இடத்தில் உட்கார்ந்து வேலை செய்யும்போது, திருப்பிக் கொடுத்தால் போதுமாம். அப்புறம்... அப்புறம், அவன் இன்னொன்றும் சொன்னான், வந்துக்கா, வந்து உனக்குத் திருமணம்தான் ஆகிவிட்டதே. இனிமேல், அதை இல்லை என்று சொல்ல முடியாது இல்லையா? இவ்வளவு பணக்கார அக்காவை வைத்துக் கொண்டு, ஐந்துக்கும் பத்துக்கும் நான்

கஷ்டப்படுவது, அவனுக்கே அசிங்கமாக இருக்கிறதாம் அவனுக்கு மட்டுமல்ல. எல்லோருக்குமே, அப்படித்தான்! அதே உணர்வு, உனக்கு எப்படித் தோன்றாமல் இருக்கிறது என்று, எல்லோருக்குமே ஆச்சரியம்! உனக்குக் கைச்செலவுக்கு கொடுக்கிற பணத்தை, உன் கணவருக்குத் தெரியாமல், என்னிடம் கொடுக்கலாமே. பணமாக அதிகம் கொடுக்க முடியாவிட்டாலும், ஏதாவது நகையைத் தொலைத்து விட்டதாகச் சொல்லி தந்தால், அதை விற்று செலவைச் சமாளிக்கலாமே என்று. நல்ல நல்ல ஐடியா, தினு நிறையச் சொன்னான், அக்கா செய்து பார்க்கலாமா? இப்போது நீ அணிந்திருக்கும் வளையல், மூன்று சவரனாவது, இருக்காது பாதி விலைக்கு விற்றாலும்...'' என்று கண்கள் பளபளக்கச் சொல்லிக் கொண்டே போன தங்கையை, முகமறியாத அன்னியாளைப் போல வெறித்து நோக்கினாள் சாருமதி.

சாருபாலாவுடைய நண்பர் குழாம் தவறானது. அவர்களோடு சேர்ந்தால், அவளும் எதையும் செய்வாள் என்று மோகனசுந்தரம் சொன்னானே! எவ்வளவு சரியாகக் கணித்திருக்கிறான்!

இது எங்கே போய் முடியக்கூடும்?

## 9

சாருபாலாவுடைய நண்பன் தினேஷ் கூறிய யோசனைகள் எல்லாம், மிகவும் தப்பானவை, நம்பிக்கை மோசடி, பொய், களவு எனக் கூடிய பெரிய குற்றங்கள் ஆகும் என்று தங்கைக்குப் புரிய வைக்கச் சாருமதி எவ்வளவோ முயன்று பார்த்தாள்.



''ஒன்றை ஒத்துக் கொண்டு விட்டுக் காரியம் ஆனதும், மாறி நடப்பது, நம்பிக்கைத் துரோகம். அந்தத் துரோகம் தன்னால் செய்ய முடியாது. அதே போல, வளையலைக் கழற்றிக் கொடுத்து விட்டுத் தொலைந்ததாகச் சொல்வதும் திருட்டுக் குற்றமே!''

முயற்சி தோல்வியடைந்தது என்பது ஒரு புறமிருக்க, தமக்கையிடம் இருந்து இப்போது பைசாப் பெயராது என்று புரிந்ததும், பாலா அழுது ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கி விட்டாள்.

''என்னைவிட, உனக்கு இந்த நகைதானே பெரிதாகி விட்டது?

''நம் அம்மா மட்டும் இருந்திருந்தால், என்னை இப்படிக் கஷ்டப்பட விடுவார்களா?

''என் பேரைச் சொல்லிக் கல்யாணம் செய்தவள், காரியம் முடிந்ததும், என்னைக் கழற்றி விட்டுவிட்டாய்!

''புதுக்கார்! நம்பர் பிளேட் கூட மாட்டவில்லை! அதிலே உல்லாசமாக வருகிறாய்! பத்து லட்ச ரூபாய்க் காரை வாங்க முடிகிறது. எனக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் செலவுக்குக் கொடுக்க, உனக்கு மனம் வரவில்லையே. அம்மா இருந்திருந்தால், இப்படி என்னை அலட்சியப் படுத்தும் தைரியம், உனக்கு வருமா?

''ஐயோ...! அம்மா! அம்மா! அப்பா! எனக்கு வாழவே பிடிக்கவில்லையே! என்னையும் கூட்டிப் போய்விடுங்களேன்'' என்று பாலா கத்தி அழ, ஓரிருவர் அறைக்குள் எட்டிப் பார்க்க, சாருமதிக்கு மிகவும் அவமானமாகிப் போயிற்று.

எட்டிப் பார்த்தவர்கள், சாருமதிக்கு அறிமுகம் ஆனவர்களே.

''என்ன சாருமதி, எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டவர்கள், தொடர்ந்து ''பாலாவுக்கு, இங்கே தனியே இருக்கப் பிடிக்கவில்லை போல! பேசாமல் கூட்டிப் போய், உன்னுடனேயே வைத்துக் கொள்ளேன்'' என்று இலவச ஆலோசனையும் வழங்கி, அவளை இன்னமும் நோகடித்து விட்டுப் போனார்கள்.

தங்கை விடுவாளா?

''பார், பார்! உலகத்தில் உள்ள எல்லோருக்கும் தெரிகிறது. உடன் பிறந்த உனக்கு மட்டும் மனம் வரவில்லை! ஐயோ, அம்மா, அம்மா! உங்கள் அருமைச் சின்ன மகளை அனாதையாக்கி அழ வைத்து விட்டீர்களே!'' என்று மறுபடியும் அழுதாள்.

ஒருவாறு, அவளைச் சமாதானம் செய்து முடிக்குமுன், சாருமதி ரொம்பவே நொந்து போனாள்.

அப்போதும், ''அவரிடம் இது பற்றிக் கட்டாயம் பேசுகிறேன்'' என்று அவள் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல், சத்தியம் செய்யச் சொன்னாள் சின்னவள்.

கூடவே, ''நீ நினைத்தால், கட்டாயம் முடியும் அக்கா. ஒரு மனைவியால் முடியாத காரியமே கிடையாது என்று தினு கூடச் சொன்னான், தெரியுமா? அதனால் காசுக் கணக்கையே நினைத்துக் கொண்டு இராமல், கொஞ்சம் பாசத்தையும் மனதில் வைத்துக் கொண்டு அத்தானிடம் பேசு!'' என்று தப்பு செய்தவருக்கு புத்தி சொல்வது போலக் கூறவும், சாருமதிக்கு மனம் கொதித்தது.

''எதற்கும், தினு சொன்னான். தினு சொன்னான் என்கிறாயே. அந்த மடையனுக்குத்தான், நியாய அநியாயம் யோசிக்கத் தெரியவில்லை, உளறுகிறான்.



அதைக் கேட்டுக் கொண்டு, நீயும் ஆட வேண்டுமா? தானாக எதையும் யோசித்துப் பேசும் அளவு, உனக்கே மூளை கிடையாதா?'' என்று எரிந்து விழுந்தாள்.

கோபமும் வியப்புமாக வெறித்துப் பார்த்துவிட்டு, ''தினு சரியாகத்தான் சொல்லியிருக்கிறான். உனக்காகப் பரிந்து பேசுகிறேனே என்று, என்மேல்தான் உன் அக்காவுக்குக் கோபம் வரப் போகிறது, என்றானே. ரொம்பக் கரெக்ட்! அதேபோல. நிறையப் பணத்தைப் பார்த்ததும், உன் அக்கா, கஞ்சப் பிசுநாறி ஆகிவிட்டாள் என்றதும் சரியாகத்தான் இருக்கிறது! இல்லாவிட்டால் எனக்கு இப்படி நாலு பழத்தை மட்டும் வாங்கிக் கொண்டு நீ புத்தம் புதுக் காரில் வந்து இறங்குவாயா?'' என்று சாருபாலா ஆத்திரப்பட, அவளுக்கு முன் பிறந்தவள் பேச்சிழந்து நின்றாள்.

நடந்தது எல்லாமே இவளுக்காக என்பது கூடவா, மறந்துவிடும்?

தப்பு, தப்பு! பெரிய தப்பு நேர்ந்துவிட்டது!

எண்ணிப் பார்த்தால், சரியாக இருபது நாட்கள்!

மொத்தமாக இருபது நாட்கள் இவளை எட்டியே பாராமல் இருந்ததன் பலன்தான் இது. பெற்றோர் அவர் காது வளர்ப்பு, எதையும் நினைவுறுத்த ஆள் இல்லாது போனதன் விளைவு, இந்த உதவாக்கரை நண்பர்களின் போதனை பயங்கரமாக ஏறி விட்டது!

தங்கையை நினைத்து வருத்தப்பட்டால் போதுமா? அம்மா, அப்பா, குடும்பத்தை நினைவுறுத்த, அவளும் இங்கே வந்து, போயிருக்க வேண்டாமா?

என்ன மாதிரித் தப்பு செய்து விட்டேன் என்று கழிவிரக்கம் கொண்டு மறுக்கும்போதுதான், இந்தப்

பிழையின் காரணம் தானல்ல என்பது, சாருமதிக்கு உறைத்தது.

காரணம், முழுக்க முழுக்க அவளுடைய கணவன்!

கார் இல்லாமல், காரோட்டி இல்லாமல் செய்து, அவள் நேரடியாகக் கேட்டபோதும், ஏதோ ஒரு காரணம் சொல்லி, அவளைத் தடுத்து நிறுத்தியவன் அவனே தான்.

நேரே கணவனிடம் போய், காச் மூச்சென்று கத்த வேண்டும் என்று வீட்டுக்கு வந்தால், அவன் அங்கே இல்லை. இருப்பதற்கு வாய்ப்பும் இல்லை.

எட்டரை மணிக்கு அன்றைய பில் போடுவதை நிறுத்தி விட்டாலும், குறைந்தது இரண்டு சூப்பர் மார்க்கெட்களின் கணக்குகளைச் சரி பார்த்து விட்டு, அதன் பிறகே வீடு திரும்புவது, மோகனசுந்தரத்தின் வழக்கம்.

கம்ப்யூட்டரில் மட்டுமாய் கணக்கைப் பார்த்தால் என்றால், ஒன்பது மணிக்குக் கூட வந்து விடுவான். என்றேனும் நேரில் போனால், தூரத்தைப் பொறுத்துத் தாமதமாகும்.

அன்று, மோகனசுந்தரத்திடம் தன் கோபத்தைக் கொட்டித் தீர்ப்பதற்கு, சாருமதி, இரவு பத்து மணி வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

அந்தக் காத்திருத்தலும் சேர்ந்து, அவளது கோபத்தைப் பன் மடங்கு வளர்த்தது.

காரை அவனே 'ஷெட்'டில் விட்டுவிட்டு வரும் போதே, மோகனன் களைத்திருப்பது நன்றாகத் தெரிந்தது.

சண்டைக்குக் காத்திருந்த மனைவியின் முகத்தைப் பாராமல் ''இன்று இன்னும் சாப்பிடவில்லை, சாருமதி



ஏதாவது இருக்கிறதா என்று பார். சமையல்காரம்மாவிடம் இட்டிலியோ, தோசையோ, இலகுவாகச் செய்கிற ஏதாவது செய்யச் சொல்லு. தொட்டுக் கொள்ள, சாஸ் போதும். நான், இதோ குளித்துவிட்டு வந்து விடுகிறேன்'' என்று கூறியவாறே படியேறிச் சென்றான் அவன்.

எப்போதும் மோகனன் இப்படித்தான். நான் பெரிய முதலாளி என் சுகம்தான் முக்கியம் என்று இருக்க மாட்டான்.

காரோட்டியைக் கூடத் தாமதம் ஆனதால் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டு, அவனேதான் ஓட்டிக் கொண்டு வந்திருப்பான்.

அவளிடமும், தான் திரும்பி வருகிற நேரம், முன்னே பின்னே இருக்கும் என்பதால், நேரத்துக்குச் சாப்பிட்டு விடச் சொல்லியிருந்தான். ''எனக்குப் பசித்தால், நான் அங்கேயே ஏதாவது வாங்கி, உணவு வேலைக்கு முடித்தாலும் முடித்து விடுவேன். எனக்காகப் பசியோடு நீ காத்திருப்பது எல்லாம், வேலைக்காகாது'' என்று திடமாகவே கூறியிருந்தான்.

இப்படி எல்லோரிடமும் மனித நேயம் காட்டுகிறவன், சாருபாலாவை மட்டும், எப்படி ஒதுக்கி வைத்தான்? வெறும், கவனக்குறைவு! அதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?

என்ன சொன்னாலும், இதை ஒத்துக் கொள்ளவே முடியாது!

கணவனுக்கு வேண்டியதை ஒரு தரம் எடுத்துக் கொடுத்துவிட்டு, சாருமதி மொட்டை மாடிக்குப் போய் விட்டாள்.

பக்கத்திலேயே நின்று, பார்த்துப் பார்த்துப் பரிமாறு வதும், அவனுக்குப் பிடிக்காது. "நீ என்ன ஹோட்டல் பரிசாரகனா, பக்கத்திலேயே நின்று 'ஆர்டர்' எடுத்துப் போவதற்கு? நானே எடுத்துச் சாப்பிட்டுக் கொள்வேன், நீ உட்கார்" என்பான்.

ஆனால் இன்று அருகிலேயே அமர்ந்து, இலகுவாகக் கதை பேசிக் கொண்டிருக்க அவளுக்கு மனமில்லை.

இந்த மொட்டை மாடி, சாருமதிக்குப் பிடித்தமான புகலிடம். பழசையோ, தங்கையையோ நினைத்து மனம் சஞ்சலப்படும் வேளைகளில், இங்கே வந்து, அமர்ந்திருப் பாள்.

மூன்று தலைமுறையாகக் கையில் இருப்பதால், மா, பலா, சப்போட்டா என்று பழ மரங்கள் மிகவும் உயரமாக வளர்ந்து எப்போதும் நிழல் தந்தன. பெரிய மரங்கள் என்பதால், பறவைகளின் ஒலியும் கேட்டுக் கொண்டே இருக்கும். கிளிகளைக் கூடப் பார்த்திருக்கிறாள்.

இரவில் அந்தச் சத்தமெல்லாம் அடங்கிய பிறகு, அந்த அமைதி கூட, அவளுக்குப் பிடித்தமானதே. ஏதோ ஒரு பறவையின் சிறகடிப்பு, குஞ்சின் சிறு குரல், கேட்டு ரசித்துக் கொண்டு அங்கே உட்கார்ந்திருப்பாள்.

திருமணம் நிரந்தரம் அல்ல என்றானே! அப்படி ஒருநாள் வரும்போது, இதை விட்டு வெளியேற நேருமே என்று, வருத்தமும் பட்டிருக்கிறாள்.

ஆனால், இப்போது அவள் மனதில் கோபம், தவிர வேறு எந்த உணர்ச்சிக்கும் இடம் இருக்கவில்லை!

உணவை முடித்துக் கொண்ட மோகனசுந்தரம், மனைவியைத் தேடி அங்கே வந்தான்.



"என்ன உன் பறவைகள் சரணாலயத்துக்கு வந்தா யிற்றா? இந்த இரவில் என்ன தெரியும்?" என்று கேட்ட படி, அவள் அருகில் வந்து நின்று, அவளது கூந்தலில் குடியிருந்த ஜாதிப்பூவை வாசனை பிடித்தான்.

வீட்டுப்பூ. அவளுக்குமே அதன் மணம் பிடிக்கும் என்பதால், பறித்துத் தொடுத்து, சூடி கொள்வாள். சற்றுக் கட்டையாக வெட்டப்பட்டு, விரிந்து கிடக்கும் கூந்தல் சிடுக்காகி விடுகிறது என்று சாருபாலா என்றைக்குமே, பூ வைப்பது இல்லை. ஆனால் வீட்டுப் பூவை அவ ளுக்குக் காட்ட வேண்டும் என்றே, சாருமதி அவ்வளவு பூவையும் தலையில் வைத்துக் கொண்டு போனாள்.

ஆனால், பூவைப் பார்க்கவோ, ரசிக்கவோ, பாலா வுக்கு நேரம் எங்கே இருந்தது? அது போன்ற சின்னச் சின்ன சந்தோஷங்கள் எல்லாம், இப்போது அவளுக்கு நினைவிருப்பதாகவே தெரியவில்லையே!

தவறான ஆசைகளைச் சொல்லவும், அவைகளை நிறைவேற்றவில்லை என்று தமக்கையைக் குறை கூறவுமே, அவளுக்குப் பொழுது சரியாகிப் போயிற்றே!

தங்கையை நினைத்ததும், அவள் நடந்து கொண்ட விதமும் அப்போது நடப்பது போல, மனதில் வந்தது.

கணவனின் அருகாமையில் நெகிழத் தொடங்கிய மனது கடினப்பட்டுவிட சட்டென விலகி நின்று "இரவில் மட்டுமா, பட்டப் பகலில் நடப்பது கூடத்தான், எனக்கு ஒரு மண்ணும் தெரியவில்லை" என்று எரிந்து விழுந்தாள்.

"ஹே, இதென்ன? என் மேல் என்ன கோபம்?"

"என்ன... கோபமா? ரொம்பத்தான் நடிக்காதீர்கள்! இந்த இருபது நாட்களாகப் பாலாவைப் பார்க்கப் போக விடாமல், நீங்கள் சதி பண்ணவில்லை?"

''சதி என்பது பெரிய வார்த்தை. ஆனால், அது ஏன் என்றும் சொன்னேனேம்மா!''

''ஆமாம்! பெரிய மேதாவி! ரொம்பத் தெரிந்துதான் சொல்லியிருக்கிறீர்கள்! இப்போது, அவள் எப்படி ஆகி விட்டாள் தெரியுமா? மூச்சுக்கு ஒரு தடவை, பணம் பணம் என்கிறாள். தொலைந்து போயிற்று என்று உங்களிடம் சொல்லிவிட்டு, ஒரு நகையைக் கொடுத்தால், விற்று எடுத்துச் செலவு செய்வாளாம்! என் தங்கையா, என்று இருக்கிறது. தப்பு சரி எல்லாம் மறந்து விட்டது. தினு தினு என்று அவன் சொல் பேச்சு மந்திரம் மாதிரி தலைக்கேறிப் போய் இருக்கிறது! இதற்காகத்தானே, இப்படி ஏதாவது நடக்கட்டும் என்றுதானே, அவளைப் பார்க்க விடாமல், தடுத்தீர்கள்!'' என்று கடுகாய்ப் பொரிந்தாள் சாருமதி.

''இப்போது என்ன கெட்டு விட்டது? அதுதான், காரை யும் டிரைவரையும் முழுக்க உன் உபயோகத்துக்கே தந்து விட்டேனே! அடிக்கடி போய், உன் அருமைத் தங்கை யின் அழுக்கான ரத்தத்தை மாற்றி, நல்ல புத்தியை ஏற்ற வேண்டியதுதானே?'' என்றான் அவன் பரிகாசமாக.

''உங்களுக்குக் கிண்டலாக இருக்கிறதா? உங்களா லேயே ஏற்பட்ட துன்பம். அதைப் பார்த்து வருத்தப்படா விட்டாலும், சும்மாவாவது இருக்கலாமில்லையா? இப்படிக் குத்திக் கிளறிப் பேச வேண்டுமா?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் சாருமதி.

''நல்லதை நினைத்துச் செய்தது. அதை ஏற்றுக் கொள்ளத் தெரியாத குற்றம், அவளுடையது. செய்த குற்றம் நினைத்துத் தானாகத் திருந்தவும் அறிவில்லை. எவனோ, என்னவோ சொன்னான் என்று பேராசை



பிடித்து அலைந்தால், அதற்கு நானா, பொறுப்பு? தப்பு செய்தவளை விட்டு, என்னைக் காய்வானேன்? வரும் நாளில், ஓர் உதவி செய், சாருமதி உன் தங்கையைப் பார்க்கச் செல்லும் நாளை, முன் கூட்டியே தெரிவித்து விடு, அன்றைக்கு வீட்டுப் பக்கமே வராமல், எங்காவது போய் நிம்மதியாக இருந்து விட்டுக் காலையில் வருகிறேன்'' என்றான் மோகனசுந்தரமும் கடுப்பாகவே.

சீற்றத்துடன் ''ஊர் மேய ஆசை வந்து விட்டது என்று, உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே?'' என்று சடடென சொல்லிவிட்டு நாக்கைப் பற்களால் அழுத்தினாள் சாருமதி. ரொம்பவே அதிகப்படியான பேச்சு என்று அவளுக்கே புரிந்தது.

ஒரு வினாடி அமைதியின் பின் ''தங்கையின் பேச்சு எங்கிருந்து வந்திருக்கும் என்று, இப்போது புரிகிறது. எப்படியோ, இப்போது உன்னிடம் பேசித் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ள, நான் தயாரில்லை!'' என்று திரும்பி நடந்து, மோகனசுந்தரம் உள்ளே போய் விட்டான்.

திருமணத்துக்கு முன்னால் இப்படி அப்படி இருந்தவன்தான். ஆனால் மணமானபின், அவனுடைய எதிரி கூடச் சொல்லக் கூட, அந்தக் குற்றம், அவன் மேல் சுமத்த முடியாது. அதிலும் மனைவியாக இருந்து கொண்டு சொன்னது, ரொம்பவே அநியாயமான குற்றச்சாட்டுதான்.

பின்னோடு போய், மன்னிப்புக் கேட்டால் கூட குறை இல்லை... மன்னிப்புக் கேட்பதுதான் நியாயமே.

ஆனால், பாலா விஷயத்தில் அவன் தப்புப் பண்ணவில்லையா? அதற்கு அவனும்தானே, மன்னிப்புக் கேட்க வேண்டும்?

மன்னிப்புக் கேளாதது மட்டுமில்லை, கிண்டல் வேறு செய்தானே!

அவளுக்கு மட்டும் கோபம், வருத்தம் ஒன்றுமே வரக்கூடாதா?

யார் கையில், எவ்வளவு பணம் இருந்தாலும், கணவன் மனைவி என்றால், இருவரும் சமம்தான். அவனுக்குக் கோபம் வந்தால், அவளுக்கும் வரத்தான் செய்யும்.

அவளும் கோபமாக இருக்கிறாள் என்று மோகன சுந்தரம் புரிந்து கொள்ளட்டும்!

மறுநாளும் கூட, சாருமதியாகப் போய், கணவனிடம் எதுவும் பேசவில்லை.

அவனும் எந்நாளும் போலப் பத்திரிகை படித்தான், குளித்துச் சாப்பிட்டான், அலுவலைப் பார்க்கக் கிளம்பி, வெளியே சென்று விட்டான்.

செல்லுமுன், காரோட்டியை அழைத்து, "அம்மா எங்கேனும் போக வேண்டும் என்றால், காரை எடுத்துப் போ, பெட்ரோல் கார்டில் போட்டுக்கொள்" என்று சாரு மதியின் காது கேட்கச் சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனான்.

பெரிய கார்! இது இல்லாவிட்டால், உலகில் வாழவே முடியாதாக்கும் என்று, சாருமதி சம்பந்தமற்று எண்ணி விட்டு, என்ன மடத்தனம் என்று எரிச்சலோடு, அதை ஒதுக்கினாள்.

எப்படியும் காலையில் சற்று நேரம் கலகலப்பான பேச்சு இருக்கும். அவசரமாகக் கிளம்ப வேண்டி இருந் தாலும் கூட, அதையே கிண்டலாகப் பேசியவாறே, அவ ளோடு சேர்ந்து காபியேனும் அருந்திவிட்டுப் போவான்.



இன்று, அது இல்லாதது, சாருமதிக்கு ஒரு மாதிரி இருந்தது.

ஆனால், என்ன செய்வது? தானாகப் போய் பேசவும், அதுவும் ஒரு மாதிரிதான் இருந்தது.

இரண்டு பேரிடமும் தப்பு இருக்கும்போது, அவள் மட்டும் முந்திரிக்கொட்டை போல, முந்திக் கொண்டு போய், அவன் காலில் ஏன் விழ வேண்டும்?

இருக்கட்டும். கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்.

இந்த பாதிப்பு, கணவனுக்கும் இருக்கத்தானே செய்யும்? அதற்கு, அவன் என்ன செய்கிறான் என்று பார்க்கலாம்.

இப்படியெல்லாம் எண்ணும்போதே, மனம் இன்னொரு திசையிலும் பாய்ந்தது.

அவள் அளவு பாதிப்பு, அவனுக்கு எப்படி இருக்கும்?

திருமணத்தையே நிரந்தரம் கிடையாது என்றவன் பிரிவு பற்றி, சர்வ சாதாரணமாகப் பேசியவன்,

பின்னே, இதே பாதிப்பு, அவனுக்கு எப்படி ஏற்படும்?

இன்னும் யோசித்தால், 'காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறி' என்பது போல, அவளை விலக்கி விடக் கூட நினைக்கலாம்! கடவுளே!

வீட்டிலும் தோட்டத்திலுமாக கால் கடுக்க அலைந் தும், டி.வி. முன் அமர்ந்து அகல விழி விரித்துப் பார்த் தும், எதிலும், ஒரு பயனும் இருக்கவில்லை.

மனம் ஏதோ கற்பனைகளைச் செய்து, அவளைக் கலங்கடிப்பதை, நிறுத்த மறுத்தது.

அத்தனை முயற்சிகளும் பலனின்றிப் போய்விட, மோகனசுந்தரம் கிண்டலாகக் குறிப்பிடும் அவளது

மொட்டை மாடிப் பறவைகள் சரணாலயத்திலேயே சாருமதி, தானும் சரணடைந்தாள்.

அங்கே, அவளது சொந்தப் பிரச்சினை அடியோடு மறந்துவிடும்படி, அவளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

நியாயமற்று மனைவி பேசிய பேச்சில், மோகனசுந்தரம் மிகவும் எரிச்சலுற்று இருந்தான். அதனாலேயே காலை மாலை வேளை கலகலப்பேச்சை அலட்சியப்படுத்தி, அலுவலுக்குக் கிளம்பி வந்து விட்டான்.

ஆனால், வந்த பிறகு மனம் அவனைக் குடையத் தொடங்கி விட்டது.

எல்லாம், அவளுடைய தங்கை, அந்தத் தங்கையுடைய நண்பர்களால் வந்தது. நண்பர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, அந்தப் பெண் சாருபாலா அவன் மனைவி என்ன பாடு படுத்தினாளோ!

ஆனால், சும்மாவே ஆடும் பேய், கொட்டுக் கண்டால் விடுமோ என்று, அந்தப் பழமொழியைப் போல சாருபாலா, ஏற்கனவே அப்படி ஒன்றும் தேவதை கிடையாது. கூடவே, அந்த சினேகிதப் பட்டாளமும் தூபம் போட, அநியாயமாகத் தனக்குப் பெரிய அவமானம் நேர்ந்து விட்டது போல, அவளுடைய தங்கை நடிக்க சாருமதியும் அதை நம்பித் தன் கணவனிடம் காய்ந்திருக்கிறாள்.

இதில், தங்கையை எவ்வளவுக்கு நம்பலாம் என்று தெரியாதுதான், சாருமதியின் பெரிய குற்றம்!

தங்கை வறுத்தெடுத்ததை விடவும், அவள் நேர்மை இல்லாமல் பேசியதுதான், சாருமதிக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கும்.



தங்கை நேர்மை கெட்டுப் பேசியதன் காரணம், அக்காவான தன்னைப் பாராதது, அப்படிப் பார்க்க முடியாமல் போனதன் காரணம் கணவன், எனவே, அவன்தான் இந்தக் குற்றத்திற்கு முழுக் காரணம் என்று நினைத்து விட்டாள்.

என்ன நினைத்தாலுமே, சாருமதி அவனிடம் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்கக் கூடாதுதான். என்றாலும், மனம் கலங்கியிருந்த நிலையில் மனைவி செய்த குற்றம் மன்னிக்கக் கூடியதே என்று, இப்போது மோகனுக்குத் தோன்றியது.

அத்தோடு, தங்கையின் போக்கினால், சாருமதி சும்மாவே மிகவும் மனதில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள்! இப்போது அவனும் பேசாமலே வந்து விட்டதால், இன்னும் எவ்வளவு வேதனையாக இருக்கிறதோ? பாவம்!

இந்தத் துன்பம், மனைவி இன்னமும் படுவதா என்று தோன்றிவிட, மோகனசுந்தரம் வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.

வீட்டுக்கு வந்து பார்த்தால், கீழே தோட்டத்தில் எங்கும் சாருமதி இல்லை. அவளது பறவைகளைப் பார்த்தால், ஆறுதல் கிடைக்கக்கூடும் என்று, மொட்டை மாடிக்குச் சென்றிருப்பாள் என்று ஊகித்து, மோகனனும் மாடிக்குச் சென்றான்.

அங்கே சென்று அவன் பார்த்த காட்சியில், அவனது இதயம் தொண்டைக்கு வந்து துடிக்கலாயிற்று.

ஏனெனில், மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரின் மீது, அந்தப் பக்கம் குதிக்கத் தயாராக சாருமதி நின்று கொண்டிருந்தாள், குதித்து?

இந்த அளவுக்காக, அவளை நோகடித்துவிட்டான்?

நில் என்று குரல் கொடுத்தால், அவன் வந்திருப்பது தெரிந்தால் கூட, அவசரப்பட்டுக் குதித்துவிடுவாளோ என்ற பயத்தில், இறுகிப் போய் சிலையாக நின்றான் மோகனசுந்தரம்!

## 10

இப்படிச் செய்கையற்று நிற்பது மோகனசுந்தரத்துக்குப் புது அனுபவம்.

சும்மா இப்படி நின்றாலுமே, எப்போது வேண்டுமானாலும் ஏன், அடுத்த வினாடியே கூடச் சாருமதி அங்கிருந்து குதித்து விடலாம் என்பது திடுமென உறைக்க, பொன்னான ஒரு வினாடியைக் கூட வீணாக்கி விடக்கூடாது என்ற வேகத்தில், அவன் ஒரே தாவலில் அவளை அடைந்து, அவளது கையைப் பற்றி இழுத்துக் கீழே இறக்கினான்.

அதிகம் முரண்டு பிடிக்காமல், அவன் இழுத்த வேகத்திலேயே விழுந்துவிடாமல் சமாளித்து இறங்கிய போதும், சாருமதி, உடனேயே கைப்பிடிச் சுவரின்மேல் மறுபடியும் ஏறலானாள்.

மனைவியின் முயற்சியைத் தடுத்து, அவளை உட்புறமாக இழுத்தவாறே, ''என்ன பைத்தியக்காரத்தனம்? ஏன் இந்த அசட்டு வேலை?'' என்று அதட்டினான் கணவன்.

''ஷ்'' என்று ஒற்றை விரலை அவன் உதட்டில் மேல் வைத்து, அவனது பேச்சை நிறுத்தியவள், மறு கரத்தால் மேலே சுட்டிக் காட்டினாள்.



அவள் காட்டிய திசையில் பார்த்தவனுக்கு உள்ளடக்கிய சிரிப்பில், உதட்டோரம் துடித்தது.

மொட்டை மாடியின் ஓரம் வரை வந்திருந்த மாங்கிளையின் மெல்லிய முனையில், வெடவெடவென்று நடுங்கியவாறு, உயிரைக் கையில் பிடித்தபடி, ஓர் அணில் குட்டி ஒண்டிக் கொண்டிருந்தது.

சாருமதியின் விரல், இன்னமும் உட்புறமாகக் காட்டிய இடத்தில், அதே மரக்கிளையின் தடித்த உட்பாகத்தில், ஒரு பெரிய பூனை, இந்த அணில் குட்டியைப் பிடித்து பளீகரம் செய்வதற்காக காத்திருந்தது.

''பூனை கிட்டே வரும்முன் அணில் குட்டியைக் காப்பாற்றி விடலாம் என்று..'' என்று மெல்லிய குரலில், கணவன் காதில் சாருமதி முணுமுணுத்தாள்.

''மதி பிரமாதமாகத்தான் வேலை செய்திருக்கிறாள்! ஆனால் நீ காப்பாற்ற வருகிறாயா, பிடிக்க முயற்சிக்கிறாயா என்று, அணிலுக்கு எப்படித் தெரியும்? உனக்குப் பயந்து, ஓடி அது பூனையின் பக்கமே ஓடி மாட்டிக் கொண்டால்?''

''அதையும் யோசித்தேன். அதற்காகத்தான், சத்தமே இல்லாமல் மெல்ல ஏறினேன். அணில் குட்டி கவனிக்கு முன், அதைப் பிடித்து விடலாம் என்று நினைத்தேன்...''

''நன்றாக நினைத்தாய். கொஞ்சம் கால் தவறினால், நீ என்ன ஆவாய் என்று அதை யோசிக்க வேண்டாம்?''

''யோசித்தேன்ப்பா. அதனால்தான் ரொம்பக் கவனமாக ஏறினேன். எப்படியும் அணில் குட்டியைக் காப்பாற்றி ஆக வேண்டுமே!''

''அதற்காக?'' என்று அவன் கேட்கும்போதே, அணில் குட்டி கீச் கீச்சென்று சத்தமிட்டது.

பார்த்தால், பூனை கவனமாக முன்னே வரத் தொடங்கியிருந்தது.

''ஐயோ! பாருங்கள்! இப்போது வேறே என்ன..'' என்று அவன் பிடியிலிருந்து விலகி, மறுபடியும் கைப்பிடிச் சுவரை அணுக முயன்றாள் சாருமதி.

''பொறு'' என்று மொட்டை மாடியில் வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டி ஒன்றின் மேற்புறமாக, அழகுக்காக போடப்பட்டிருந்த சிறு கூழாங்கற்களில் ஒன்றை எடுத்து, பூனை மீது வீசினான்.

குறி தவறாமல் பட்டு விட, பூனை ஓடி மறைந்தது.

''அப்பாடி!'' என்று நிம்மதியாக மூச்சு விட்டபோதும், சாருமதியின் பார்வை அணில் குட்டியிடமே இருந்தது. ''ரொம்பப் பயந்து போய் விட்டது போல, அசையாமல் கிடக்கிறதே! மெல்ல தூக்கிப் போய் ஏதாவது ஆகாரம் கொடுக்கலாமா?'' என்று யோசித்தாள் அவள்.

''ஒன்றும் வேண்டாம்'' என்று இரு கைகளையும் தட்டி ஒலியெழுப்பினான் மோகனன்.

திரும்பிப் பார்த்தால் அணில் குட்டி கிளையில் ஏறி, ஓடிப் போயிற்று.

''ஒன்றைக் காப்பாற்றுவது என்றால், அதற்கு இருக்கும் ஆபத்தை அகற்றினால் போதும். அதற்கு மேல், தன் பாட்டை அதுவேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். பாவம் என்று பாதுகாத்து, பராமரித்து, அதன் இயல்புத் திறனைக் கெடுக்கக்கூடாது!''

தலைசரித்துக் கணவனைப் பார்த்தாள் சாருமதி ''இதில், எனக்கேதும் தனிப்பட்ட குறிப்பு இருக்கிறதோ?''

லேசாகத் தோளைக் குலுக்கினான் கணவன் ''விருப்பம் இருந்தால், பின்பற்றலாம்!'' என்றான் முறுவலித்து.



இதழ்களில் தொற்றிக் கொண்ட புன்னகையோடு ''ம்ம்ம்... யோசித்து முடிவு செய்கிறேன்'' என்றவாறு அவனைப் பார்த்தவளுக்கு, வேறு நினைவு ஒன்று தோன்றியது.

''அதிருக்கட்டும், சொல்லுங்கள் என்னை ஏன், அவ்வளவு முரட்டுத்தனமாக இழுத்து இறக்கி விட்டீர்கள்?'' என்று அதன் விவரம் கேட்டாள் அவள்.

அவளை அருகே இழுத்து கைகளுக்குள் நிறுத்திக் கொண்டு அவன் பதில் சொன்னான். ''கேட்க மாட்டாயா, பின்னே? நேற்றிரவுதான் நமக்குள் பெரிய சண்டை, காலையிலும் பேச்சு வார்த்தை இல்லை! அம்மணி எப்படி இருக்கிறாயோ என்று கவலையோடு வீட்டுக்கு வந்தால், இந்த மாதிரி, ஒரு 'போஸ்!' என்ன நினைப்பதாம்?'' என்று குறைப்பட்டான்.

''என்னது... ஹோ சேச்சே!'' என்றவளுக்கு சிரிப்பு வந்தது.

நெகிழ்வுற்று, அவன் தோளில் சலுகையாய்ச் சாய்ந்து கொண்டு, ''நான் ஒன்றும் கோழை கிடையாதுப்பா. அம்மாவின் நோய் அவ்வப்போது அதிகரிக்கும்போதும், எப்போதும் தூணாய்த் துணையிருக்கும் அப்பாவையும் சேர்த்து இழந்து, உறவுகள் ஒதுங்கிக் கொள்ள அனாதைகளாகத் தனியே நின்ற அப்போதுமே, நான் நம்பிக்கை இழந்து, சோர்ந்து போனதில்லை, தெரியுமா?'' என்றாள், அவள்.

தோளோடு சுற்றியிருந்த கை லேசாக இறுக ''பெற்றோரை இழந்து தவித்துக் கொண்டிருந்த இரு சின்னப் பெண்கள்! என்னவோ ஆகட்டும் என்று ஒதுங்கிப் போனார்களா? என்ன மனிதர்கள், இவர்கள்! ஆனால்,

திருமணத்தின்போது. சித்தி. அத்தை. மாமா என்று எல்லோருடனும் நீ சிரித்துச் சிரித்துப் பேசியதைப் பார்த்த நினைவு, எனக்கு இருக்கிறதே!'' என்றான் மோகனன்.

''அது... வயது வந்த இரு பெண்களின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள, யாருக்குமே தயக்கமாகத்தானே இருக்கும்? அத்தோடு, 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்று பழமொழியே இருக்கிறது. ஒரு தப்புக்காக, ஒருவரை அடியோடு ஒதுக்க என்னால் முடியாது.எனக்கு உறவுகள் வேண்டும்'' என்றாள் மனைவி, தெளிவாக.

''ஓஹோ!'' என்றான் அவன். ''இதில், எனக்கு ஏதும் தனிப்பட்ட குறிப்பு இருக்கிறதோ?'' என்று, ஒரு குறு நகையுடன், அவளைப் போலவே, தலை சரித்து வினவினான்.

ஓரக் கண்ணால் பார்த்து''விருப்பம் இருந்தால் பின் பற்றலாம்'' என்று கணவனைப் போலவே சொல்லிக் கலீரென்று நகைத்தாள் மனைவி.

''இதைப் பின்பற்றினால், தொழிலில் ஜெயிக்க முடியாது. ஆனாலும் சொந்த வாழ்க்கையில்... ம், யோசித்து முடிவு செய்கிறேனே'' என்றவனின் அணைப்பு வேறு மாதிரி மாறலாயிற்று.

வியந்து நோக்கி ''ஹேய், என்ன இது, திடீரென்று? அதுவும் இ... இந்த நேரத்தில்...'' என்று, சாருமதி விலக முயன்றாள்.

அரைகுறையாகத்தான், அவளுக்குமே, அப்போது அவனது அருகாமையை விட்டு விலக மனம் வரவில்லை.

அவனும் விடவில்லை ''பாரதியார் ரசிகையா பேசுவது? எந்தன் கண்ணம்மாவே, நான் எந்த நேரமும் நின்தனைப் போற்றுவேனாக்கும்...'' என்றான் குறும்பாகச் சிரித்து.



அன்று மதிய உணவின் பின்னர்தான், மோகன சுந்தரம் சூப்பர் மார்க்கெட்டுக்குக் கிளம்பிப் போனான்.

கிளம்பும்முன் கணவனும் மனைவியும் சற்று நேரம் பேசினார்கள்.

''கொஞ்சம் செல்லம் அதிகம் என்றாலும், பாலாவும் உன்னைப் போலத்தான், என்று பலமுறை சொல்லியிருக்கிறாய். அவளை அடிப்படையிலேயே மாற்றுகிற அளவு தப்பான போதனை ஏறியிருக்கிறது என்றால், போதித்தவர்களுக்கு தப்பு சரி என்பது, அடியோடு கிடையாது என்றுதானே, பொருள்? அவர்களே ஏன், அந்த ஒன்றரை லட்சத்தைத் திருடியிருக்கக் கூடாது என்று, இப்போது தோன்றுகிறது'' என்றான் மோகன சுந்தரம்.

''நானும், இதே போல எண்ணிப் பார்த்திருக்கிறேன்ப்பா. சின்னப் பசங்கள், இந்த அளவு புத்தி ஓடாது என்று, விட்டுவிடுவேன். இப்போது பார்த்தால், ரொம்பவும் சந்தேகமாக இருக்கிறது. பழைய வேலை செய்யும் போது. சும்மாப் பார்க்கவே அழகாக இருப்பாய், உன் அக்காதானே மனைவி? அந்த வேலையைச் சீக்கிரமாகப் போட்டுத் தரச் சொல்லு, என்பது போல, அவளுக்கு ஏற்றி விட்டுக்கொண்டே தானே, இருக்கிறார்கள்! அவளை வைத்துக் கொண்டே ஒரு தரம் திருடிப் பழகி விட்டார்கள், ருசி கண்ட பூனையாக, அதை விட மனம் இல்லையோ என்றெல்லாம் தோன்றுகிறது. அவர்கள் கையில் பகடைக்காயாக, பாலா என்ன ஆவாளோ என்று, அது வேறு கவலை! எல்லாம் சேர்ந்துதான் உங்களிடம்...'' என்று, குரல் கரகரத்த மனைவியின் உதட்டில் விரல் வைத்துப் பேச்சைத் தடுத்தான் கணவன்.

''விடும்மா. சொல்லப்போனால், நீ நொந்து வந்திருப்பது உணராமல், நானும் பரிகசித்திருக்கக் கூடாது. போகட்டும். அதுதான், ஏற்கனவே முடிந்துவிட்டதே. நல்...ல்ல விதமாகவே!'' என்று கண் சிமிட்டி நினைவூட்டி மனைவியின் மனநிலையை மாற்றியவன், முதலில் தொடங்கியதை மீண்டும் தொடர்ந்தான்.

''பணம் தொலைந்தபோது, அது பற்றி அந்தத் தினேஷ் சொன்னதையும், அதை உண்மை என்று நம்பி அதற்கேற்ப பாலா கூறியதையும் வைத்தே, இதுவரை தேடினோம். ஒரு பலனும் கிடைக்கவில்லை... என்ன பார்க்கிறாய்? ஒரு குற்றம் நடந்தது என்றால், குற்றவாளியைப் பிடிப்பது ஒரு புறம் இருக்க, அது போன்ற குற்றம் மறுபடியும் நடக்காமல் தடுப்பதற்காகவேனும், தப்பு எப்படி நடந்தது என்று கண்டுபிடித்தாக வேண்டும் அல்லவா? அதனால், நம் துப்பறியும் நிறுவனத்தின் மூலம், அது பற்றி புலன் விசாரணை நடந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால், சுயமாக ஒரு தெளிவற்று சுற்றும் அசட்டு இளைஞர் கும்பலில் சிலர் என்று எண்ணி, பாலாவுடைய நண்பர்களை, அதிகம் ஆராயாமல் ஒதுக்கியது தவறு என்று இப்போது தோன்றுகிறது. அவர்களை இனம் காண வேண்டும், மதி. அத்தோடு பாலாவையும் காப்பாற்றியாக வேண்டும்.''

கணவனின் பேச்சில் இருந்த இதமான மாற்றம், சாருமதியை, மனம் குளிர வைத்தது.

இதுவரை 'உன் தங்கை' என்றுதான், மோகனசுந்தரம் பாலாவை குறிப்பிடுவான். அவனுக்குச் சம்பந்தமே இல்லாத, யாரோ ஓர் அன்னியவள் அவள் என்பதாக அப்படிப்பட்ட வார்த்தைகளை அவன் சொல்லாமலே விளங்கும்.



சாருமதிக்கு அது வருத்தமாகவே இருந்தாலும் பாலாவின் கவனக்குறைவு காரணமாக நேர்ந்த நஷ்டத்தை நினைத்து அப்படி இருக்கிறான் என்று எண்ணி, அந்த வருத்தத்தை வெளிக்காட்டாமல் விழுங்கிக் கொள்வாள்.

ஆனால். இப்போது 'பாலா' என்று குறிப்பிட்டு, அவளைக் காப்பது பற்றியும் மோகன் கூறவும், சாருமதி உள்ளம் நெகிழ்ந்து போனாள்.

அவளது பிற்காலம் எப்படி இருக்கப் போகிறதோ? இன்றைக்கு, மனைவி இடத்தில் இருக்கும் ஒருத்தியாக மட்டுமாக, அவன், அவளைப் பார்க்கவில்லை. முழு அன்பும், அக்கறையும் வைத்திருக்கும் வாழ்க்கைத் துணைவியாக நடத்துகிறான் என்ற உணர்வில், அவளுக்கு ஆனந்தமாக இருந்தது.

வாழும் காலம் முழுமைக்கும், இது நிலைக்குமா, நிலைக்காதா என்று யோசிக்கக் கூட, சாருமதிக்கு பிடிக்கவில்லை.

எனவே, பிடிவாதமாக அதிலிருந்து மனதைத் திருப்பி, பேசிக் கொண்டிருந்த பிரச்சினை பற்றி யோசித்தாள்.

யோசித்து, ''நான் அடிக்கடி பாலாவைப் போய் பார்த்து வரலாம் என்று நினைக்கிறேன், சுந்தர். அப்படியே, அவளுடைய நண்பர்களையும் அவ்வப்போது சந்தித்துப் பழகி, அவர்களைப் பற்றி அறிய முயற்சிக்கிறேன்'' என்றாள்.

கணவனுக்கும் அதே எண்ணம்தான் என்றாலும், கூடவே ஒரு தயக்கமும் இருந்தது.

''உண்மை அறிவது. கூடவே பாலாவைக் காப்பாற்றுவது என்று யோசிக்கும்போது, நீ அவளை அடிக்கடிப் போய்ப் பார்ப்பது மட்டுமே, அதற்கான ஒரே வழி என்றுதான் தோன்றுகிறது. ஆனால், உழைக்காமல் இலகுவாகப் பணம் சம்பாதிக்க ஆசைப்படுகிறவர்கள், எப்போது எப்படி மாறுவார்கள், எந்த அளவுக்குப் போவார்கள் என்று, யாராலும் சொல்ல முடியாது. பாலா பொறுப்பில் இருந்த பணத்தை எடுத்தது கூட, முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்ததாகத் தோன்றவில்லை என்றுதான் துப்பறியும் நிறுவன ஆள் கூறினார். பணம் கண்ணில் பட்டு, எடுப்பதற்கு வாய்ப்பும் கிடைக்கவே, கூட்டத்தில் யாரோ தூக்கிவிட்டார்கள் என்பதுதான். அவரைப் போலவே, என் கருத்தும். தூக்கியது, பாலாவுடைய நண்பர் குழுவில் யாரோ என்பது, இப்போதைய சந்தேகம். எனவே, அது போன்ற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் பார்த்துக் கொள். போலி என்று தெளிவாகத் தெரியக் கூடிய நகைகளை மட்டும் அணிந்து போ.. நான் சொல்வது புரிகிறது அல்லவா?''என்று கேட்டபோது, அவன் முகத்தில் இருந்த கவலை சாருமதிக்கு வியப்பளித்தது.

''அப்படி என்னை அடித்துப் போட்டுவிட்டு பிடுங்குவார்கள் என்றா, எண்ணுகிறீர்கள்? பிறகு மாட்டிக் கொள்வோம் என்று தெரியாதா? அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல, சுந்தர். நன்றாகப் படிக்கிறவர்கள் தான். பாதி நாள் மட்டம் போட்டாலும், நல்ல மதிப்பெண் வாங்கி விடுகிறார்கள்'' என்றாள் சாருமதி.

எழுந்து வந்து, அவள் அருகே அமர்ந்து, ஒரு கரத்தால் அவளது தோளைச் சுற்றி சற்று இறுக அணைத்து, சற்றுக்



கனத்த குரலில், மோகனசுந்தரம் கூறினான் ''இதைப் பற்றி என்னை ரொம்பக் கற்பனை செய்ய வைக்காதே, சாரு. பிறகு, இந்த முயற்சியையே நாம் விட்டுவிட நேரும்.''

சொன்னதை மனைவி உள்வாங்கச் சற்று அவகாசம் கொடுத்துவிட்டு, ''ஆனால், உன் தங்கை என்பதால், அடியோடு விடவும் முடியாது. எனவே, அவர்களை அந்த மாதிரித் தப்புக்குத் தூண்டி விட்டுவிடக்கூடாது என்பதில், மிகவும் கவனமாக இரு. அதேசமயம், திருமணத்தின் போதான என் நிபந்தனைகளை வெளிப்படையாகப் பாலாவுக்கு நினைவுப்படுத்தி, இங்கிருந்து பணம் பெயராது என்பதையும் தெளிவுப்படுத்து.''

விஷயம் புரிந்துவிட, சாருமதியின் முகம் மலர்ந்தது.

''ஓஹோ! பாலா மூலம் எந்தவிதமான பணவரவுக்கும் வழியில்லை என்று உறுதியாகத் தெரிந்துவிட்டால், அப்புறம் அவர்களாகவே, அவளை ஒதுக்கிவிட்டுப் போய்விடுவார்கள், என்கிறீர்கள். அதுதானே ஐடியா? இவர்களது நட்பு இவ்வளவுதான் என்று தெரிந்ததும், பாலாவும் திருந்திவிடுவாள்! அருமையான திட்டம்!'' என்றாள் உற்சாகத்துடன்.

அவளை விடுவித்து எழுந்தவன், மனைவியின் கன்னத்தை லேசாக வருடிவிட்டு ''இன்னொரு விளைவும் ஏற்படலாம், சாருமதி. ஒருவேளை பணம் திருடிய நபருக்குச் சாருபாலாவிடம் சிறிதேனும் அன்பு இருக்குமானால், அவளை ஒதுக்காமலே, திருட்டுப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிக் கொண்டு வந்து, அவளுக்கும் சேர்த்து செலவு செய்தாலும் செய்யலாம். அந்த விரயமும், உன்னிப்பாகக் கவனிக்கப்படும். ஒருவேளை நட்பு,

பாசம் எதுவுமே இல்லையென்றால்... எதுவானாலும் பொறுத்திருந்து பார்ப்போம். ஆனால், நீ மட்டும், நூறு சதவீத எச்சரிக்கையுடனேயே, எப்போதும் இருப்பதாக எனக்கு உறுதி தர வேண்டும். மற்றபடி, இந்த முயற்சியே தேவையில்லை!'' என்றான் அவன், கண்டிப்பான குரலில்.

அவளது பாதுகாப்புக்காகவே மறுபடியும் வற்புறுத்துகிறான் என்று புரிய, அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது!

''நான் என்ன பச்சைக் குழந்தையா, சார்? என்னைப் பற்றி, எனக்கே அக்கறை இராதா? அதுவும், இப்போது எனக்கு என் உயிர் வெல்லம், முதலாளி!'' என்று அவள் சிரிக்க, அவளது மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, அவன் கிளம்பினான்.

ஆனால் கள்வன் கெட்டிக்காரனா, காப்பான் கெட்டிக்காரனா என்றால், கள்வன்தான் கெட்டிக்காரன்., ஏனென்றால், எங்கே என்ன மாதிரி முயற்சி செய்யப் போகிறான் என்பது, அவனுக்கு மட்டுமே தெரியும். திருட்டு நடந்த பிறகுதான், இப்படித் திருடியிருக்கிறான் என்று காப்பான் கண்டுபிடிப்பது என்று சொல்வதுண்டு.

அதேபோன்ற அனுபவம், மோகனசுந்தரம் தம்பதிக்கும், விரைவிலேயே நேர்ந்தது!

சாருபாலாவின் வேலை நேரம், விடுப்பு நாள், ஓய்வு சமயம் என்று எதையுமே அவளுடைய நண்பர் குழாம், சட்டை செய்ததே இல்லை.

பசையிட்டு ஒட்டியது போல, அவளுடைய நண்பர் கூட்டம், முன்பு, அவள் பக்கத்திலேயே சுற்றிக்



கொண்டு இருப்பார்கள். ஆனால், இப்போது அவளது பணியின் தன்மை காரணமாக, சாருபாலாவுக்கு, அவர்களோடு நின்று கலகலப்பாக இரண்டு வார்த்தை பேச முடியாமல் போயிற்று. ஓடு ஓடு என்று வாடிக்கையாளர் பின்னே ஓடுவதோ வெறுப்பாக இருந்தது.

எப்போதும் போல, நண்பர் கூட்டத்தில், யாராவது உனக்கு இதில்லையே, அதில்லையே என்று ஏதேனும் சொல்லி வைப்பார்கள். அதன் வேகம், வெப்பம் எல்லாவற்றையும் காட்டுவதற்கு ஆள் இல்லாமல், அப்படியே மூட்டை கட்டி வைத்திருப்பாள் சின்னவள்.

சமயம் பார்த்து, அங்கே போய், சாருமதி வாங்கிக் கட்டிக் கொள்வாள்.

தன் எரிச்சல், கோபம் எல்லாவற்றுக்கும், தமக்கை சாருமதியையே, பாலா வடிகாலாகப் பயன்படுத்தினாள்.

ஆனால், அவள் என்ன பேசினாலும், பெரியவள், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வது இல்லை. சாவி கொடுத்த பொம்மை மாதிரி, யார் யாரோ ஏற்றி விடுவதை, இவள் ஒப்பிக்கிறாள் என்று அறிந்திருந்ததால், கோபப்படக்கூடாது. வருத்தப் படக் கூடாது என்று தனக்குத்தானே சொல்லி, தன்னையே அடக்கிக் கொள்வாள் அவள்.

ஆனால், முன் போன்ற தயக்கங்கள் ஏதுமின்றி, மோகனசுந்தரத்திடம் நடந்தவை அனைத்தையும் மறைக்காமல் சொல்லுவாள்.

அப்படி மனம் விட்டு, வாய்விட்டுச் சொல்லும் போதே தங்கையின் கூர்நாவு சுட்ட காயங்கள் எல்லாம் ஆறிவிட்டதைப் போல, அவளுக்குத் தோன்றும்.

அவனது பரிவான ஒரு வருடலில் தழும்பு கூட மறைந்து போயிற்று!

ஆனால், மோகனசுந்தரம் எதிர்பார்த்த மாற்றம் எதுவும், பாலாவுடைய நண்பர்களிடம், ஏற்படவில்லை. பாலாவால் பயனில்லை என்று, அவர்கள் அவளை வெட்டி விடவும் இல்லை. பாலாவுக்காக, யாரும் பணத்தை அள்ளி வழங்கவும் முன்வரவில்லை. எப்போதாவது வெளியே போய் சுற்றும்போது ஓர் ஐஸ்க்ரீம், ஒரு பீட்சா, சூயிங்கம்... இதற்குமேல் அவளுக்காக, அவர்கள் பைசா நகட்டவில்லை!

அப்படிக் கொடுத்ததுமே, அவளது சம்பளப் பணம் முழுதாகத் தீர்ந்துவிட்டது என்பதை அறிந்த பிறகே! கொடுக்குமுன், பாலாவுடன் பிறந்த தமக்கையின் பெரும் பணக்காரத்தனமான சொர்க்க போக வாழ்வோடு தங்கையின் வறுமையை ஒப்பிட்டு அக்காவின் கஞ்சத் தனம், சுயநலம் பற்றி ஆளாளுக்கு வர்ணித்த பிறகே, கொடுத்தார்கள்.

சாருபாலாவுடைய சகோதரி குரூரமே உருவானவளாக இருந்தாலும் அவளுடைய நண்பர்கள், அவளிடம் உண்மையான அன்பும், அக்கறையும் உடையவர்கள் என்று, பாலாவுக்குத் தெளிவுபடுத்தினார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிந்த பிறகும், பணத் திருட்டு தொடர்பாக ஒரு முன்னேற்றத்தையும், மோகன சுந்தரம் ஜோடியால் காண முடியவில்லை.

ஆனால், இந்தத் திருட்டுக்கு தொடர்ப இல்லாத வேறு ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஒருநாள் அலுவலகத்தில் சோனா என்ற பெண் ஒருத்தி, மோகனசுந்தரத்தை தனிமையில் சந்தித்துப்



பேச வேண்டும் என்று கேட்டு, சீட்டுக் கொடுத்து அனுப்பினாள்.

அந்தப் பெயர் ஏதோ உறுத்த, வேறுபுறமாக வந்து, யார் என்று பார்த்த மோகனன், லேசாக அதிர்ந்தான்.

சாருபாலாவுடைய நண்பர் குழுவில் ஒருத்தி!

சாருமதியோடு தொடர்பு கொண்டு, அவன் விவரத்தைச் சொன்னபோது, அவளுக்கும் காரணம் புரியவில்லை.

திருடிய பணத்தை, அவ்வளவு எளிதாகத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள் என்று, இருவருமே எண்ணவில்லை.

ஆனால், ஏதோ ஒரு வகையில் அந்த ஒன்றரை லட்சம் திருட்டோடு, அந்தப் பெண் சோனாவின் வரவுக்குத் தொடர்பு இருக்கிறது என்ற கருத்து மட்டும் இருவருக்குமே இருந்தது.

ஒருவேளை தெரிந்தால் தமக்கை வருந்துவாளோ என்று, தன் தோழி மூலமாக மோகனசுந்தரத்துக்குப் பாலா எதையும் சொல்லி அனுப்பியிருக்கிறாளோ என்ற ஐயம் ஒன்று சாருமதிக்குத் தோன்றியது. என்னவென்று தெரிந்து கொள்வது நல்லதுதானே?

அது போன்ற நாகரீகம், நாசூக்கு எதுவும் பாலாவிடம் கிடையாது என்பது, மோகனனின் அபிப்பிராயம். ஆனால் அதைச் சொல்லி மனைவியின் மனதை வருத்த மனமின்றி, அந்த சோனாவைத் தனியாகச் சந்திக்க அவன் ஒப்புக் கொண்டான்.

ஆனால், அந்தப் பெண்ணுக்கும், அவனுக்கும் நடந்த பேச்சுவார்த்தையின் பலன் விபரீதமாக இருந்தது.

## 11

சாருபாலாவுடைய நண்பர் கூட்டத்தில் இருந்த இன்னொரு பெண்ணான சோனா, பொதுவாகவே உடை விஷயத்தில் ஒரு மாதிரி தான். மறைப்பதை விட, உடலைக் காட்டுவதற்காகவே அணிவது போலத் தோன்றும்.

இன்று, அது மிகவும் அதிகப்படியான அளவில் இருந்தது.

தோளில் இருந்து, மிக இறக்கமாக வெட்டப்பட்டிருந்த ஆடை, உடம்பின் மேல் பகுதியைக் கிட்டத்தட்ட திறந்து காட்டியது. தொடை வரை இருந்த 'ஸ்லிட்'டோ, கீழேயும் எதையும் மறைக்கவில்லை.

நடந்து வந்து உட்கார்ந்த விதமோ, வந்த நோக்கத்தை அவள் வாய்விட்டுச் சொல்லாமலே தெளிவாக்கியது.

எதையும் கவனியாதவன் போல ''உங்களுக்கு நான் என்ன உதவி செய்யக் கூடும்? சொல்லுங்கள்'' என்று சாதாரண தொழில் முறைப்படி, மோகனசுந்தரம் வினவினான்.

''உதவியா?'' என்று கிண்கிணியாகச் சிரித்தாள் சோனா.

மோகனசுந்தரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, சிரிப்பைச் சீக்கிரமே முடித்துக் கொண்டு, ''இது சூப்பர் மார்க்கெட்! பெரிய வியாபாரம் நடக்கும் இடம். இங்கே உதவியாவது இன்னொன்றாவது? இங்கே நமக்குள் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்வோம், மோகன். என்னை நன்றாகப் பார்த்தீர்கள் அல்லவா? பே...ரழகி! ஒரு நாளைக்கு ஒரு லட்சம்! நீங்கள் பணம் தரும் நாளெல்லாம்



உங்களோடு இருப்பேன்!'' என்றாள் அவள். ஒரு மயக்குப் பார்வையுடன்.

லேசாகப் புருவங்களை உயர்த்தினான் மோகனசுந்தரம்.

''ஏதோ தப்பான தகவலில் இங்கே வந்துவிட்டாய், என்று நினைக்கிறேன். நான் மணமானவன். அதுவும் உன் சினேகிதியான சாருபாலாவுடைய சகோதரியையே மணந்திருப்பவன், நான். என்னிடம் வந்து இந்தப் பேச்சு பேசுவது சரியில்லையே!'' என்றான் அவன்.

''உத்தம புருஷன் போல, ரொம்ப அளக்க வேண்டாம், மோகன்! உங்கள் கதை, எல்லாமே எனக்குத் தெரியும். நீங்கள் எப்படிப்பட்டவர் என்றும் தெரியும். உங்கள் திருமணம் எப்படி நடந்தது என்றும், தெரியும். ஆனால் நான் அப்படி ஆள் அல்ல. நிபந்தனைக்காக மணந்தவளை, விட என்னால் அதிக சுகம் கிடைக்கும்'' என்று தலை நிமிர்த்தி அறிவித்தாள் சோனா!

''ஓ! அப்படியா விஷயம்?'' என்று கேட்ட மோகனன், தன் பெரிய மேஜையின் பக்கவாட்டு இழுப்பறையைத் திறந்து, ஏதோ செய்தான்.

மறுபடியும் நிமிர்ந்து சோனாவைப் பார்த்துப் பேசினான். ''பார் பெண்ணே, நீ என்ன கருதி இங்கே வந்தாய் என்று, எனக்குத் தெரியாது. ஆனால், ஏதேனும் நாடகம் நடிப்பதாக எண்ணம் இருந்தால், இங்கு நடக்கும் எல்லாம், இப்போது 'டேப்'பில் பதிவாகிக் கொண்டு இருக்கிறது என்று தெரிந்து கொள். எனவே, அசட்டு நாடகங்கள் எதையும் அரங்கேற்றாமல், நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நான் ஒரு காலத்தில் எப்படிப்பட்டவனாக இருந்திருந்தாலும், இப்போது எனக்கு, என் மனைவி போதும். வேறு எந்தப் பெண்ணும் எனக்கு

தேவை இல்லை. சொல்வது தெளிவாகப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இது தவிர, வேறே எதுவும் சொல்ல வேண்டுமா? அல்லது உடனே கிளம்புகிறாயா?'' என்று அவன் கேட்டு முடிக்கும் முன் சோனா விசுக்கென எழுந்துவிட்டாள்.

வெறுப்பும் கோபமுமாக, மோகனசுந்தரத்தை ஒரு தரம் முறைத்துப் பார்த்துவிட்டு, அவளது 'ஹைஹீல்' செருப்புகள் அனுமதித்த அளவு வேகமாக நடந்து அங்கிருந்து வெளியேறினாள் சோனா.

அவள் சென்ற பிறகு, மோகனசுந்தரம் சிறிது நேரம் அசையாமல் உட்கார்ந்திருந்தான். கோபம் அடங்க அவனுக்கு அந்த அவகாசம் தேவைப்பட்டது.

இவளெல்லாம், சாருபாலாவுக்கு நட்பு!

இவள் உண்மையான தோழியாகவே இருந்தாலுமே, தமக்கையின் திருமணம் பற்றி, அவளிடம் எல்லா விவரங்களையும் இப்படிப் பறைசாற்ற வேண்டுமா?

அதில்லாமல், ஒருத்தி, இந்த மாதிரி வந்து நிற்பாளா?

கூடப் பிறந்தவளின் வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதே பாலாவுக்கு இல்லையே!

ஒரு பணக்காரனுடைய மைத்துனியாக, ஆடம்பர மான வாழ்வு பற்றி திட்டமிடத் தொடங்கிய தங்கையைக் கட்டுப்படுத்த வேண்டி தங்கள் திருமணம் பற்றிய உண்மை விவரங்களை பாலாவிடம் சொல்ல நேர்ந்த தாகச் சாருமதி, அவனிடம் ஒருமுறை கூறியிருந்தாள்.

அது, தேவைக்காகச் செய்யப்பட்டது.

ஆனால், யாருக்கு அவமானம் என்று யோசியாது, அதைச் சின்னவள் விளம்பரப்படுத்தியதுதான், மோகன சுந்தரத்துக்கு எரிச்சலூட்டியது.



இந்தப் பெண் திருந்துவதற்கு, இன்னும் பெரிய பெரிய அதிர்ச்சிகள் தேவைப்படும் என்று எண்ணினான் அவன்!

அதற்குரிய முதல் கட்டமாகத்தானோ, என்னவோ சாருபாலா கடத்தப்பட்டாள்!

பிணைக் கைதியாக அவளைப் பிடித்து வைத்திருப்ப தாகவும், அவளை உயிருடன் பார்க்க வேண்டுமானால், அவன் சொல்வது போலச் செய்தாக வேண்டும் என்று, சற்றுக் கம்மலான ஆண் குரல் ஒன்று, அவளது செல் போனில் தொடர்பு கொண்டு கூறவும், சாருமதி சற்று திகைத்தாள்.

முதலில், அவளால் அதை நம்ப முடியவில்லை.

ஏனெனில் சாருபாலாவுக்கு ஓய்வு நாள் என்று, சாருமதி அன்று காலையில்தான் தங்கையைப் பார்க்கச் சென்று, இரண்டு மணிநேரம் அவளோடு போராடிப் பார்த்துவிட்டுத் தோற்றுத் திரும்பி வந்திருந்தாள்.

கோபமும், வெறுப்புமாக பாலா கத்தியதையும், புலம்பியதையும் பொறுமையாகக் கேட்டதிலும், பலவாறு அவளுக்கு நல்ல புத்தி சொல்ல முயன்றதிலுமாக, அவள், மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

தமக்கை என்ன சொல்கிறாள் என்பதைக் காதிலேயே வாங்காமல் ''அப்படியானால் எனக்கு ஒன்றுமே செய்ய மாட்டாயா?'' ''எனக்கு பணமே தரமாட்டாயா?'' ''உனக்கு இவ்வளவு வசதி இருந்தாலும், நானே கஷ்டப்பட்டு உழைத்துதான் பிழைக்க வேண்டுமா?'' என்று திருப்பித் திருப்பி, பாலா அதையே கேட்ட விதத்தில், சாருமதிக்கு தலையும் வலிக்கத் தொடங்கியிருந்தது.

கடைசியாக, பாலா ஒரு போதும் திருந்த மட்டாள் என்ற முடிவுக்குத்தான் அவள் வர வேண்டியதாக இருந்தது.

நம்பிக்கை இழந்து சோர்ந்த மனம், சாருமதியின் உடலையும் பாதித்தது.

சற்று நேரம் படுத்துக் கிடந்தவளுக்கு, அப்படிச் சோம்பியிருக்கவும் பிடிக்கவில்லை.

சரிதான் என்று, சில தானிய வகைகளை எடுத்துக் கொண்டு, மொட்டை மாடிக்குச் சென்றாள். இதற்குள் சில குருவிகள், அவள் கையிலிருந்தே தானியங்களைக் கொத்தி எடுக்கப் பழகியிருந்தன. அதிலும் அப்போது தான் பறக்கத் தொடங்கியிருந்த குஞ்சுப் பறவைகள், ரொம்பத் தைரியமாக வந்து, தானிய மணிகளைக் கொத்தி எடுக்கும் இளம் கன்று பயமறியாது என்பது, இதைத்தானா என்று சாருமதி சந்தோஷமாக நினைப்பாள்.

ஆனால், மோகனசுந்தரத்துக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

ஒருதரம், ஒரு சிவப்புக் கொண்டைக் குருவி இடம் தவறிக் கொத்தியதில், அவளது கை கன்றிவிட்டது என்பதோடு, குருவிகளின் தானாகக் கொத்திக் கிளறி இரைதேடும் இயல்பைக் கெடுக்கிறாய் என்பான்.

ஆனால், அவளுக்கு அதிலே மகிழ்ச்சி என்பதால், அவளைத் தடுக்கவும் மாட்டான். அவளது சந்தோஷத்தை ரசித்தபடி, எதையாவது பேசிக் கொண்டு, அவள் அருகிலேயே அமர்ந்திருப்பான்.

இப்போதும், பாலா விஷயமாக, மேலே என்ன செய்வது என்று, அவனே ஏதாவது வழி கண்டுபிடிப்பான்...



யோசித்தபடியே அமர்ந்திருந்தவளுக்கு, அன்றும் சற்று நேரத்திலேயே, மனநிலை சரியாகிவிட்டது.

கணவன் வந்து என்ன சொல்லக்கூடும் என்று, ஓர் இனிய கற்பனையில், சாருமதி ஆழ்ந்திருந்த போதுதான், அந்த மோனத்தைக் கம்மல் குரல்காரன் கெடுத்தான்.

"பொய்!" என்று வாய் சொல்லும்போதே, சாருமதியின் மனம் சில குறிப்புகளைப் பதிவு செய்தது.

செல் திரையில் தெரிந்தது, அறிமுகம் அற்ற எண், பொது தொலைப்பேசி! பேசியவனின் கம்மல் குரல், இயல்பானது அல்ல, துணியால் டெலிபோன் கருவியை அல்லது வாயை மூடிக் கொண்டு பேசியதன் விளைவு.

இந்த மாதிரி யார்... என்று யோசனை ஓடும்போது, சட்டென அவளது நெஞ்சுக்குள் ஒரு குளிர் பரவியது.

சே, பயப்படக்கூடாது. இருந்திருந்து, பாலாவைப் போய் யார் கடத்தப் போகிறார்கள்?

அழகிதான். ஆனால், அழகுக்காக கடத்துகிறவன், அப்படியே கொண்டு போயிருப்பான். இப்படி, மிரட்டிக் கொண்டிருக்க மாட்டான். யாரோ, வேடிக்கைக்காக....

யார் அவளிடம் வேடிக்கை செய்வார்..கள்?

சாருமதி யோசிக்கையிலேயே, "என்னது? பொய்யா? அப்படிச் சொல்லி, இலகுவாகத் தப்பித்து கொள்ளலாம் என்று நினைத்தாயா? அதெல்லாம் முடியாதும்மா! நான் கேட்கிற பணம் நீ கொடுத்துதான் ஆக வேண்டும்!" என்றான் அவன் கண்டிப்பாக!

"ப.. பணமா?"

"ஆமாம்! பணமே தான். நான் கேட்கிற பணம். நான் சொல்லுகிற இடத்துக்கு வந்து சேர்ந்தே ஆக வேண்டும்!

இல்லாவிட்டால், உன் தங்கையைச் சின்னா பின்னமாக்கிக் கொன்றுவிடுவோம்! ஜாக்கிரதை!''

இதற்குள் அச்சம், சாருமதியை வெகுவாக பீடித்து விட்டிருந்தது. ஆனாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல், ''எல்லாம் பொய்! உனக்கு பணம் வேண்டுமானால், பெரிய பணக்கார வீட்டு பெண்ணை அல்லவா, கடத்துவாய்! அதை விட்டு, நடுத்தர இனத்தைச் சேர்ந்த எங்கள் குடும்பத்துப் பெண்ணைப் போய் கடத்துவாயா? இதிலிருந்தே, எல்லாம் பொய் என்று தெரியவில் லையா?'' என்று அமர்த்தலாகவே பேசினாள்.

ஆனால் ''உன் தங்கை சாதாரண குடும்பம்தான், பெண்பிள்ளை! ஆனால் அவளுடைய அக்காக்காரி, நீ பணக்காரிதானே? உன் தங்கை, உனக்கு முழுதாகக் கிடைக்கணுமா? அல்லது, துண்டு துண்டாகவா? அதை நீ முடிவு பண்ணிக்கொள்!'' என்றான் கம்மல் குரல். ''ஆனால், அதற்கு முன்னே, சாருபாலா எங்கள்கிட்டே இருக்கிறாளா, இல்லையான்னு, தெளிவு பண்ணிக்கோ! ஏய், இந்தாடி, உன் அக்கா கிட்டே பேசு! என்னது? பேச மாட்டியா? இதப்பாருடா, அவள் முதுகிலே, நல்லா நச்சென்று ஒன்று கொடு! ஓடி வந்து பேசுகிறாப்போல, மூச்சைப் பிடிச்சு ஒரு குத்து வை!'' என்று அவன் முடிக்கவும், எங்கோ உடல் தசையில் கை முஷ்டி இறங்கும் ஓசை கேட்டது.

''ஆ...! ஐயோ, அக்கா!'' என்று பாலாவின் குரல் வலியில் துடிக்கும் குரல் கேட்கவும், சாருமதி கலங்கிப் போனாள்.

''ஏய், வேண்டாம், வேண்டாம். அவளைத் துன்புறுத் தாதே!'' என்று பதறித் துடித்தாள்.



அம்மாவின் செல்லப் பெண். வீட்டில் யாரும் அவளை கடிந்து பேசியது கூடக் கிடையாது. யாரோ ஒரு ரௌடி, அவளை அடிப்பதா?

எல்லோரையும் போல, ஐயோ அம்மா என்று அலறா மல், 'அக்கா' என்று அவளை அல்லவா ஒரே துணை யாகக் கருதி அழைக்கிறாள்!

டெலிபோன் கருவி யார் கையில் இருக்கிறதோ "பாலாவை அடிக்க வேண்டாம்'' என்று தான் கதறுவது யார் காதிலாவது விழுகிறதா என்று தவித்தபடி, பாலாவை அடிக்க வேண்டாம் என்று, சாருமதி மீண்டும் மீண்டும் கத்திக் கெஞ்சினாள்.

''ஏய் சும்மாக் கத்தாதே'' என்று, முதலில் பேசிய கம்மல் குரல் மறுபடியும் கேட்டது. ''உன் தங்கையைத் துன்புறுத்துவதும், சும்மா விடுவதும் இனிமேல் உன் கையில்தான் இருக்கிறது. சத்தமே இல்லாமல், காதும் காதும் வைத்தாற்போல, நாங்கள் கேட்கிற பணத்தை நாங்கள் சொல்லுகிற மாதிரி எங்களிடம் கொண்டு வந்து, கொடுத்து விட்டாய் என்று வை, எந்தப் பழுதும் இல்லாமல், உன் தங்கை வீடு வந்து சேருவாள். இல்லை... போலீஸ், கீலீஸ் என்று போனாய் என்றால், மவளே, அவளைக் கூறு கூறாகத்தான் தூக்கிப் போகும்படி இருக்கும். என்ன? எப்படி வசதி?'' என்று மறுமுனையில் பேசிய விதத்தில் சாருமதியின் உடல் நடுங்கியது.

பயத்தில் காட்டிக் கொள்ளக்கூடாது என்று, அவள் எவ்வளவு முயன்றபோதும் ''எ.. என்ன செய்ய்..ய வேண்டும், என்கிறாய்?'' என்று கேட்கையில் அவளது குரலும் நடுங்கத்தான் செய்தது.

''ஆங், அப்படி வா, வழிக்கு! பெரிசாக ஒன்றுமே இல்லை. ஓர் ஐந்து... ஊகூம் ஐந்தெல்லாம், இன்றைக்கு ஒன்றுமே இல்லை! அதனால் உடனே பத்து லட்சம் ரூபாயைத் தயார் பண்ணி வை. அதை, எங்கே எப்படித் தர வேண்டும் என்று அரை மணி நேரத்தில் சொல்லு கிறேன். ஆனால், நினைவு வைத்துக் கொள். வெளியே மூச்சு விடக்கூடாது! அப்புறம் சாருபாலா, உனக் கில்லை!'' என்றான் கம்மல் குரல்.

சற்றுத் தள்ளியிருந்து ''ஐய்யோக்கா, வேண்டாம்க்கா என் கதி எப்படியேனும் ஆகட்டும். எனக்காக, நீ அத்தானிடம் கையேந்தி அவமானப்பட வேண்டாம்... ஐயோ, ஐயோ கையை முறுக்காதேயேன், வலிக்கிறதே, கடவுளே..'' என்று சாருபாலாவின் கண்ணீர் குரல் கதறிக் கொண்டிருக்கும்போதே, போன் தொடர்பு அறுந்து போயிற்று.

கையை முறுக்காதேயா? இன்னும் எப்படியெப்படிப் பாலாவைச் சித்திரவதை செய்கிறார்களோ!

காலையில்தான், பணத்துக்காக, அவ்வ...வளவு 'ஞைஞை' பண்ணியவள், இப்போது ஓர் ஆபத்தில் மாட்டியதும், தமக்கைக்காக எவ்வளவு யோசிக்கிறாள்!

இதுதான் ரத்த பாசம் என்பது!

தனக்காக, கணவரிடம் கையேந்தி, அக்கா கஷ்டப் படக் கூடாது என்று, என்ன மாதிரிச் சூழ்நிலையில் தங்கை கூறினாள் என்று நினைக்கையில், சாருமதியின் நெஞ்சுக்குள் பிசைந்தது.

இவளை எப்படிக் காப்பாற்றுவது?

இருப்பது, இன்னும் அரைமணி நேரம்! இல்லை, அதற்கும் சில நிமிஷங்கள் குறைவாகவே!



கணவனிடம் சொன்னால், அவன் ஏதாவது செய்வான் என்று செல்லைக் கையில் எடுத்தவளுக்குத் தயக்கம் உண்டாயிற்று.

மோகனசுந்தரம் சாருபாலாவுக்காகச் செய்ய மாட்டான் என்று இல்லை. செய்வான். ஆனால்,அவன் எல்லோரை யும் போன்றவன் அல்ல. செய்கையாளன். ஆனால், தானே சிந்தித்து செயல்படுகிறவன்.

இப்போது, அவன் என்ன மாதிரி யோசிக்கக்கூடும்?

அவன் தனியாகச் சென்று, அதிரடி வேலை எதுவும் செய்யக்கூடும் என்று, சாருமதிக்குத் தோன்றவில்லை.

அதைவிட, காவல், அல்லது தனியார் பாதுகாப்பு நிறுவனத்தாரைத்தான், அவன் முதலில் அணுகுவான். அவர்கள் துணையோடு பாலாவை மீட்க முயற்சிப்பான்!

இதுதான் புத்திசாலித்தனமும் கூட!

ஆனால், ஆள் கடத்தல்காரனுக்கு இது எப்படியோ தெரிந்து போனால், அப்புறம் பாலாவின் கதி என்ன ஆகும்?

'கூறுகூறாக' என்று அந்த வில்லன் சொன்னது நினைவு வர, சாருமதியின் உடம்பு மறுபடியும் நடுங்கியது.

இல்லை. அது நடக்கக்கூடாது!

மோகனசுந்தரத்துக்குத் துணை வருகிறவர்கள் கவன மாகத்தான் செயல்படுவார்கள் என்றாலும், பாலாவைக் கடத்தியிருப்பவன், கண்ணுக்குத் தெரியாத எதிரி! அவனுடைய ஆட்கள், எங்கெங்கே, என்ன மாதிரி இருக்கிறார்கள் என்று எதுவும் தெரியாது. எனவே அது போன்ற மீட்பு முயற்சியே தவறாகி, பாலாவின் கழுத் துக்குக் கத்தியாகி விடக்கூடும்.

எனவே, இப்போதைக்கு கணவனுக்குத் தெரிவிப்பது கூடாது என்று, சாருமதி முடிவு செய்தாள்.

அந்தக் கடத்தல்காரன் கேட்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு... என்று எண்ணமிடும்போதே, பத்து லட்ச ரூபாயை தயார் செய்து வைக்கும்படி, வில்லன் சொன்னது நினைவு வந்தது.

அவ்வளவு பணம் வீட்டில் இருக்கிறதோ, என்னவோ?

ஓடிப்போய், கணவனின் அலுவல் அறையைத் திறந்து, அவன் காட்டிய அலமாரியையும் திறந்து பார்த்தாள். தேவைக்கு மேலேயே பணம் இருந்தது.

அந்தப் பணம் பற்றி, முதல் நாளில் மோகனசுந்தரம் கூறியது நினைவு வர, சாருமதியின் மனம் கூசியது.

எவ்வளவு வைத்தாலும் பணம் குறையாது என்று, அன்று அவ்வளவு நம்பிக்கையோடு சொன்னானே!

ஆனால், கணவன் நிலைமையைப் புரிந்து கொள்வான் என்ற நம்பிக்கையும் இருக்கவே, பத்து லட்சம் ரூபாயை மட்டுமாக எடுத்துத் தனியே கட்டி வைத்தாள்.

சற்று யோசித்து, பணம் எடுத்த, எடுக்க நேர்ந்த விவரம் பற்றி, ஒரு கடிதம் எழுதி, வேலை செய்யும் மேஜை மேல், சட்டெனத் தெரியுமாறு வைத்தாள்.

பணத்தை எடுத்துக் கொண்டு, வெளியே சென்று மறுபடியும் அல்மாரியை மூடி, அறையையும் பூட்டி, உரிய இடத்தில் சாவியை வைத்தாள்.

பணத்தைப் பெரிய கைப்பையுள் பத்திரப்படுத்தி விட்டு, கம்மல் குரலானின் அழைப்புக்காக தவிப்புடன் காத்திருக்கலானாள்.



அவனுடைய அவசரம், அவனுக்கு! சொன்ன மாதிரியே, சரியாக அரைமணி நேரத்தில், பாலாவைக் கடத்தியவன் போன் செய்து விட்டான்.

ஆனால், இது வேறு எண்.

வேறு யாராகவும் இருக்கக் கூடுமோ என்று சாருமதி சற்றுத் தயங்கினாள். கடத்தல்காரன் போன் பண்ணும் போது, இவள் வேறு யாருடனாவது பேசிக் கொண்டிருந் தால், அவன் தப்பாக எண்ணி விடக்கூடாதே!

சில வினாடித் தாமதத்தின் பின் அவள் செல்லை 'ஆன்' பண்ணினால், அவனேதான். அவளது தாமதத்தின் காரணத்தை ஊகித்து, அவன் தன் கெட்டிக்காரத்தனத் துக்காக தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண் டான்.

''என்னம்... இன்னாம்மே, வேறே யாரோன்னு நென்ச் சியா? நானேதான். நீ ஒருக்கா, போலீசு கைலே போட்டுக் கொடுத்திட்டேன்னு வை! ஒரே நம்பர்ன்னா, அவங்க எளி... வந்து, சுளுவாக் கண்டு பிடிச்சிருவாங்க, பாரு! அதான் வேறே நம்பரு! இன்னா? பணம் ரெடியா?'' என்று வினவினான் அவன்.

கஷ்டப்பட்டு முயன்று, சென்னைத் தமிழில் பேசு கிறான் என்பது சாருமதிக்குப் புரிந்தது. பேச்சின் மூல மாக அடையாளம் கண்டுவிடக்கூடாது என்பதற்காக, மாற்றி மாற்றிப் பேசுகிறான். அப்படியானால் அவளுக் குப் பழக்கமான ஆளோ?

தீவிரமாக யோசித்தவாறே, ''ஆமாம்'' என்று அவ னுக்கு உரிய பதிலைச் சொன்னாள் சாருமதி.

யார்? யாராக இருக்கும்?

"ஆஹ்ஹா... அட்ரா சக்கை! ஏ பணம் ரெடியாம்டா! ஏ... என்னது? சரி, சரி! ஓகே ஓகே" என்று உரக்கப் பேசி மகிழ்ந்தவன், மறுபடியும் சென்னைத் தமிழுக்கு மாறினான் "இதப்பாருமே, இது வரைக்கும் நீ சரியாத் தான், நடந்துக்கீரே, இனிமேயும், இப்படியே நடந்துகினா, உன் தங்கச்சிக்கு ஒரு பிரச்சினையுமில்லே, மாத்தி, என்னமாச்சும் வெள்ளாட்டுக் காட்னே... அப்புறம், பாலாப் பொண்ணு பணால்தான். இன்னா? புரிஞ்சுக் கினியா?"

"பு... புரிகிறது! நீங்கள் சொல்வது போலவே செய் கிறேன்" என்றாள் சாருமதி.

"குட், குட்...டு, குட்ட்...டு ரொம்ப நல்லது! இதே போல் கடசீ வரைக்கும், நடந்துக்க! நீ என்ன ப... இன்னா பண்ற, முதல்ல, ஒரு ஆட்டோ புடி, அதிலே ஏறி..."

"கார்... காரிலேயே சீக்கிரம் வரலாமே!"

இந்த கொடியவர்களிடம் இருந்து, பாலாவைச் சீக்கிர மாக மீட்கும் வேகம், அவளுக்கு.

ஆனால், "உன்னிடம் கார் இருப்பது, எங்களுக்கும் தெரியும்டீ" என்று அந்தப் பக்கம் சீறினான் அவன்.

அவளிடம் கார் இருப்பதில், இவனுக்கு என்ன கோபம்?

காரணத்தை அவனே சொன்னான் "மகாராணி காரிலே பணத்தைக் கொண்டு வருவாய். கார் நம்பரைக் கொண்டு, அங்கங்கே போலீசுக்குக் கண்காணிப்பது இலகுவாக இருக்கும். அப்புறமாய் நீ பணத்தைக் கொடுக் கும்போது அவர்கள் லபக்கென்று எங்களைப் பிடித்து விடுவார்கள்! அதுதானே உன் திட்டம்? இதிலே மாட்டிக் கொள்ள, எங்களை என்ன, இளிச்சவாய் என்று நினைத் தாயா?" என்று எகத்தாளமாகக் கேட்டான்.



இதே போல, எத்தனையோ பேர் பேசலாம், குரலும் தெரிந்தால்...

ஆனால், குரல் விஷயத்தில் வில்லன் வெகு கவன மாக இருந்தான்.

அதற்குள் யாரோ எச்சரிக்கவே, கம்மல் குரல் மீண்டும் பேச்சுத் தமிழை மாற்றினான் "தோ பாரு! நான் சொன்னா, சொன்னபடி செய்யணும். குறுக்கே மறுக்கே கேள்வி கேக்கப்படாது! மொதல்ல, ஒரு ஆட்டோ பிடி, அதுலே ஏறி, கு... குந்திக்கினு, மாம்பலம் டேசனுக்குப் போ. ரயில் டேசன்மா! அங்க, எலக்ட்டிக் ரயிலைப் புடி, பல்லா வரத்துல எறங்கி நில்லு. அல்லா எடத்துலேயும் ஒன்னைக் கவனிச்சுக்கினே, இருப்பம். ஏதாச்சும் சிலுமிசம் பண்ணி னேன்னா, ஒட்டு மொத்தமாக, அல்லாத்தையும் அழிச் சிடுவோம். அத்த மனசிலே வச்சுக்கிட்டு, அங்கேயே நில்லு, நா மறுபடி கூப்டு, மேலே இன்னா செய்யோணு மின்னு சொல்றேன். அதும்படியும், அச்சுப் பெசகாமச் செய்தேன்னு வை. ஒன் தங்காச்சிப் புள்ளையைக் கூட்டிட்டு நிம்முதியா, வூட்டுக்குப் போவே! அல்லாட்டி அவ்ளோதான். ஆட்டம் குளோஸ்" என்று போன் தொடர்பைத் துண்டித்தான் அவன்.

மறுபடியும், கணவனிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று, சாருமதிக்கு வெகுவாக தோன்றியது. ஆனால், முன்னிருந்த காரணமும், எந்தவித மாற்றமும் இல்லாமல், அப்படியே இருந்ததே!

ஒரு பெருமூச்சுடன் கைப்பையை எடுத்துக் கொண்டு, சாருமதி கிளம்பினாள்.

வீட்டு வாயிலைத் தாண்டி, அவள் போர்டிகோவில் இறங்கவும், டிரைவர் ஓடி வந்தான் "பசங்க யாரும்

சொல்லலியேம்மா, கொஞ்சம் நில்லுங்கம்மா. இதோ, ஒரே நிமிட்டிலே காரைக் கொண்டாரேன்மா'' என்று கார் ஷெட்டை நோக்கி திரும்பினான்.

சாருமதி திகைத்து நின்றாள். இவனை என்ன சொல்லிச் சமாளித்து நிறுத்துவது?

# 12

சாருமதிக்கான தனிக் கார். அதை ஓட்டுவதற்கு மட்டுமேயான காரோட்டி.

இவனை என்ன சொல்லி நிறுத்துவது?

அவளது ''வேண்டாம், கந்தசாமி''யில் நின்றுவிட்ட போதும், கேள்வியாய், எஜமானி முகத்தைப் பார்த்தான் கந்தசாமி.

இவனுக்குப் பதில் சொல்ல வேண்டுமே.

தலையைத் திருப்பிக் கொண்டு போய்விடலாம், யாரும் அவளைக் கேள்வி கேட்க முடியாது.

ஆனால், விஷயம் உடனே மோகனசுந்தரத்துக்குப் போய்விடும். அது, இப்போது கூடாது. பாலாவைக் காப்பாற்றிக் கூட்டி வந்த பிறகு, அவளே சொல்லுவாள்!

அதுவரை...

''கந்தசாமி இது.. இது கொஞ்சம் கஷ்டப்பட்ட இடம். அங்கே காரில் போய் இறங்கினால், நன்றாக இராது. நான் ஆட்டோவில் போய்க் கொள்வேன். நீ வீட்டிலேயே இரு'' என்று இயன்றவரை கம்பீரமாக பணித்துவிட்டு, சாருமதி மேலே நடக்கத் தொடங்கினாள்.



ஆனால் ''அம்மா... அம்மா!'' என்று காரோட்டிப் பின்னாலேயே வரவும், எரிச்சலோடு திரும்பிப் பார்த்தாள்.

''என்ன?''

''அம்மா, காலிலே செருப்புப் போடலீங்கம்மா... அதான் கூப்பிட்டேம்மா.''

குனிந்து காலைப் பார்த்த சாருமதி, பிரமித்தாள். இந்த அளவுக்கா, அவள் கலங்கிப் போயிருக்கிறாள்?

கலக்கம்தான். பாலாவை நல்லபடியாக மீட்டுவர வேண்டுமே என்று கலக்கம்! கணவனிடம் சொல்லாமல், இவ்வளவு பணத்தை எடுத்துப் போவதும் கலக்கமே!

இன்னும் இந்தப் பணியாளனிடம் என்ன சொல்லிச் சமாளிப்பது என்று, அதுவும் கலக்கமே!

அவசரமாக யோசித்து ''ஓ! நேரத்துக்குப் போக வேண்டுமே என்ற அவசரத்தில், செருப்பையே மறந்துவிட்டேன் போல!'' என்று உரக்க முணுமுணுத்தவாறே வீட்டினுள் சென்று, செருப்புகளை மாட்டிக் கொண்டு வேகமாக வெளியே வந்தால், சுற்று மதிலைக் கடந்து ஓர் ஆட்டோரிக்ஷா உள்ளே வந்து கொண்டிருந்தது.

புரியாமல் பார்க்கையிலேயே, காரோட்டி கந்தசாமி, ஆட்டோவிலிருந்து இறங்கினான். ''அவசரமாகப் போக வேணுமின்னு சொன்னீங்களேம்மா. அதான் நீங்க செருப்பு போடப் போகவும், நான் ஓடிப்போய் ஆட்டோ பிடித்து வந்தேன். இல்லாட்டி, நீங்க தெரு முனை வரை நடக்கணுமே'' என்று விளக்கம் கொடுத்தான்.

என்னவோ, கண்ணைக் கரித்தது, சாருமதிக்கு!

''நன்றி கந்தசாமி'' என்று நிமிராமல் கூறியவாறே, ஆட்டோவில் ஏறி அமர்ந்தாள்.

''மாம்பலம்'' என்று அவள் ஆட்டோ ஓட்டியிடம் சொன்னது, கந்தசாமியின் காதில் விழுந்திருக்குமோ என்று ஒரு கணம் கலங்கினாலும், மாம்பலத்தில் எங்கே என்று கண்டான் என்று, உடனே தெளிந்தாள்.

ஆனால், தெளிவு அதில் மட்டும்தான்.

பாலா எப்படி இருக்கிறாளோ, என்னவோ என்று ஒரே கவலை!

பொதுவாகப் பாலாவுக்கு அவ்வளவாக நாவடக்கம் கிடையாது. இப்போது மாட்டிக் கொண்டிருக்கும் மன இறுக்கத்தில், துடுக்காய் பேசி, என்ன என்ன துன்பங் களை இழுத்துக் கொள்கிறாளோ!

கணவன் இப்போது வீட்டுக்கு வந்திருப்பானா? இல்லை, இது அவன் வீட்டுக்கு வருகிற நேரம் இல்லை. எனவே அவள் எங்கே இருக்கிறாள்! என்ன மாதிரி தவித்துக் கொண்டிருக்கிறாள் என்று, அவனுக்கு எதுவும் தெரியாது!

அவளுக்குமே, எப்படி டிக்கெட் எடுத்து, சரியான ரயிலில் ஏறினாள், எப்படிப் பயணம் செய்து பல்லாவரத் தில் இறங்கினாள் என்று எதுவும் தெரியாது.

உயிரே போலக் கைப்பையை வயிற்றோடு அணைத்து வைத்திருந்தது. மட்டும்தான் அவளுக்கு நினைவு இருந்தது. அவளுடைய தங்கையின் உயிர், அந்த உயிரைக் காக்கும் சக்தி, அந்தப் பையிலேதானே, இருந்தது! உயிர் போல என்ன? உயிருக்கும் மேலாகவே கருதிக் காக்க வேண்டியதுதான்!

சாருமதி பல்லாவரம் ரயில் நிலையத்தில் இறங்கி, சில நிமிஷங்கள் சென்ற பிறகு அவளது செல் ஒலித்தது



பாலாவைக் கடத்தியிருப்பவன்தான்!

செல்லை காதில் வைத்தபடியே, அவன் சொல்கிற படி, அவளை நடக்கச் சொன்னான் அவன்.

இடது பக்கச் சந்து, வலது பக்கம் திரும்பு, நேராக நட... அவன் சொல்லச் சொல்ல நடக்கையில், ஒரே இடத் தையே சுற்றுகிறோமோ என்ற சந்தேகம், சாருமதிக்கு உண்டாயிற்று. ஆனால், அதைச் சரி பார்த்துக் கொள் ளவோ, அவனிடமே விளக்கம் கேட்கவோ தைரியம் இல்லாமல், அவன் சொன்னபடியெல்லாம் சுற்றிக் கொண்டிருந்தாள் அவள்.

சுமார் அரை மணி நேரம் இப்படிச் சுற்றிய பிறகே, தான் செல்லும் இடத்திற்கெல்லாம், ஒரு தாடிக்காரன், தன்னைப் பின் தொடர்வதைச் சாருமதி கவனித்தாள். கறுப்புக் கண்ணாடி வேறு.

இவன், கடத்தல் கும்பலைச் சேர்ந்தவனா? அல்லது, ஆளில்லாத இடத்தில் அவளது கைப்பையைப் பிடுங் கிக் கொண்டு ஓடத் திட்டமிடும், சாதாரணத் திருடனா?

கால்கள் சோர்ந்தன. திருடன் விரட்டினால் ஓடக் கூட முடியாதோ என்று தோன்ற, தாடிக்காரனைப் பற்றி கம்மல் குரலானிடம் கூறினாள்.

''நம்ம ஆள்தான். நீ தனியாகத்தான் வந்தாயா என்று கவனிக்கிறான். இனிமேல் அவன் கூடவே, இங்கே வந்திடு'' என்றான் அவன்.

சாருமதி எதிர்பார்த்தது போலப் பாழடைந்த எந்த வீட்டினுள்ளும், தாடிக்காரன் அவளை அழைத்துச் செல்லவில்லை.

அதிக நடமாட்டம் இல்லாத பகுதியில் அங்கொன் றும் இங்கொன்றுமாகக் கட்டப்பட்டிருந்த வீடுகளில்,

மிகச் சாதாரணமான ஒன்று, ரொம்ப நாள் கவனிப் பின்றிக் காலியாகக் கிடந்தது போன்ற தோற்றம்.

அந்த வீட்டின் முன் தாடிக்காரன் நிற்கும்வரை, சாருமதியின் கண்ணில் பட்டது, இவ்வளவே. அந்த வீட்டின் முன் நின்று, ஏதோ சங்கேதம் போல, அவன் கையை இருமுறை தட்டவும், அவளது உடல் விறைத்துப் போயிற்று.

இங்கே தான் பாலா இருக்கிறாள்! வருவது கூட்டாளி தான் என்று, உள்ளே இருப்பவர்களுக்கு, இவன் தெரி விக்கிறான்!

கடவுளே! பாலா உயிருடன் இருக்க வேண்டுமே!

கால்கள் பின்ன, சாருமதி நடக்க முடியாமல் நடந்து தவிப்புடன், உள்ளே சென்றால், நல்லவேளையாகப் பாலா ஒரு பிளாஸ்டிக் நாற்காலியில், உட்கார்ந்து, உட்கார வைக்கப்பட்டிருந்தாள்.

பின்னே கத்தியோடு ஒருவன் நிற்க, உடலில் கட்டுக் களுடன் தங்கையைப் பார்த்த சாருமதிக்கு கண்ணை இருட்டிவிட்டது. உடல் வெலவெலத்து, நிற்க முடி யாமல் தடுமாறி, கீழே விழப் போனவள், ஒருவாறு சமாளித்து, அப்படியே தரையில் கிடந்த விரிப்பில், பாதி விழுந்தாற்போல, தொப்பென அமர்ந்துவிட்டாள்.

''பாலாம்மா!'' என்ற அழைப்பு காற்றாகத்தான் வெளி வந்தது ''கண்ணூ... உ.. உனக்கு ஒன்றுமில்லையேடா?''

திகைத்து விழித்த சாருபாலா ''அ.. அக்கா'' என்று ஏதோ சொல்லத் தொடங்கு முன், ''போதும், போதும் அக்கா. தங்கை கொஞ்சலை எல்லாம், அப்புறம் வைத் துக் கொள்ளுங்கள். பணம் கொண்டு வந்திருக்கிறாயா,



இல்லையா? முதலில் அதைக் காட்டு!'' என்று அதட்டி னான் உள்ளே நின்ற மூவருள் ஒருவன்.

கலக்கத்துடன் நிமிர்ந்தாள் சாருமதி. இவன்தான் இந்தக் கூட்டத்தின் தலைவனா? போனில் கம்மல் குரலில் பேசியவன்?

கூட்டி வந்த தாடிக்காரனோடு சேர்த்து, மொத்தம் நாலு பேர். ஒரு நபர், பெண். தாடி தவிர மூன்று பேரும், முகமூடி அணிந்திருந்தனர். அப்படியானால், தாடியும் அடையாள மாற்றத்துக்கான ஒட்டுதான்!

இவர்களிடம் பாலா எப்படி சிக்கியிருப்பாள்?

மேலே யோசிக்குமுன் ''என்னம்மே, முழிக்கிறே? பணம் கொண்டு வந்தியா? இல்லியா? இல்லைனாக்க, முகமெல்லாம் கீசிருவம்! டே சூனா, அந்த தங்காச்சி மூஞ்சி மேலே ஒரு கோடு போடு!'' என்று சென்னை தமிழுக்கு மாறினான், தலைவன், எல்லாம் ஏமாற்று.

''வேண்டாம், வேண்டாம். பணம் இதோ இருக்கிறது'' என்று அவசரமாகக் கைப்பையைத் திறந்து, பத்து ஆயிரம் ரூபாய் நோட்டுக் கட்டுக்களை எடுத்து, உட் கார்ந்திருந்த விரிப்பின் மேல் வைத்தாள்.

சில கணங்கள், அங்கே மூச்சு விடும் சத்தம் கூடக் கேளாது போயிற்று.

பத்துக் கட்டுக்களையும் பரப்பி வைத்துவிட்டு ''வேண்டுமானால், எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றவள், பதிலின்றிப் போகவும், திகைத்து நிமிர்ந்து பார்த்தாள்.

நின்று கொண்டிருந்த அத்தனை ஜோடிக் கண்களும், பணத்தின் மீதுதான் இருந்தன.

தெறித்து விழுந்து விடும்போல விரிந்திருந்த கண்களின் பளபளப்பைப் பார்க்கையில், ஏனோ சாருமதியின் அடி வயிற்றில் ஒரு குளிர் பரவியது.

திடுமெனப் பணம், நகையைக் கண்டதும், பெரிய குற்றத்தில் ஈடுபடுகிறவர்களைப் பற்றி கணவன் சொன்னது நினைவு வர, குளிர் அதிகமாயிற்று.

இங்கே தாமதிப்பது தப்பு, பாலாவை அழைத்துக் கொண்டு, விரைவாகச் சென்றுவிட வேண்டும் என்று எண்ணித் தங்கையைப் பார்த்தவள், மறுபடியும் துணுக்குற்றாள்.

ஏனெனில் சாருபாலாவும் அந்தப் பணக் கட்டுக் களைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆசையாகவே!

ஆனால், பாலா செலவாளி. எப்போதும் கொஞ்சம் பணத்தேவையும் அதனால் ஆசையும் அவளுக்கு உண்டு தான். மொத்தமாகப் பணத்தைப் பார்த்ததும், பரபரப்பு ஏற்பட்டிருக்கலாம்.

எப்படியும், இன்னும் இங்கே இருப்பது தப்பு!

கையை ஊன்றி எழுந்து "நீங்கள் கேட்ட பணம். இதோ இருக்கிறது. நானும் பாலாவும் கிளம்புகிறோம்" என்று விட்டு "வா... பாலா" என்று தங்கையை அழைத்தாள்.

"ம்ம்ம்..." என்று இழுத்தபோதும், "சரிக்கா" என்று சாருபாலாவும் எழுந்தாள். கட்டுகள் அவிழ்ந்து விழுந்தன.

கண்களில் நீர்த் திரையிட, "வாடாம்மா" என்று சாருமதி தங்கையின் கையைப் பற்றி, இருவருமாக வாயிற் புறமாகத் திரும்புகையில், "ஆகா, அவ்வளவு அவசரப் பட்டால் எப்படி?" என்று கட்டைக் குரலில் கூறிய



வாறே, குறுக்கே கையை நீட்டித் தடுத்தான், அவர்களில் தலைவன் என்று சாருமதி கருதியவன்!

அடி வயிற்றுக் குளிர் நெஞ்சை எட்ட "ஏன்? எண்ணிப் பார்க்க வேண்டுமா? பாங்க் கட்டு சரியாகத்தான் இருக்கும்?" என்றாள் சாருமதி. பதட்டத்தைக் கட்டுப் படுத்த முயன்றபடி.

"அது, எங்...களுக்கும் தெரி...யும்!" என்றான் தலைவன் அலட்சியமாக.

இரு பெண்களையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு "நீ அக்கா, நீதான் பணக்காரி!" என்றான் சாருமதியைப் பார்த்து.

இவன் என்ன சொல்ல வருகிறான் என்று, இருவருக்குமே புரியவில்லை.

அவனிடம் இருந்தே வரட்டும் என்று பெரியவள் காத்திருக்க "அதனால்தான், கேட்ட பணம் உடனே வந்திருக்கிறது!" என்று சின்னவள் பதில் கொடுத்தாள், "அப்புறம் என்ன?" என்று கேட்டாள்.

"அதைத்தானே சொல்லப் போகிறேன்!" என்று எல்லோரையும் ஒருதரம் எடுப்பாக நோக்கினான் அவன் "ஒன்றுமில்லாத உதிரி. இவளுக்கே பத்து லட்சம் என்றால், உண்மையான பணக்காரி, இவள் அக்காவுக்கு என்ன மதிப்புப் போடலாம்? ஐம்பது லட்சம்? ஒரு கோடி?"

கோடி என்ற வார்த்தையில், எல்லோர் கண்களிலும் ஆசை மின்னுவதைக் கண்ட சாருமதியின் தொண்டை வறண்டு போயிற்று.

"இல்லை... பேச்சு மாறாதீர்கள்! நீங்கள் கேட்ட பணம் தந்தாயிற்று" என்றவாறு, அவள் பின்னடைய "ஏய்,

இந்த அக்காக்காரியைப் பிடித்து, அவளது செல் போனைப் பிடுங்குங்கள். நாற்காலியோடு சேர்த்துக் கட்டுங்கள்! முன்னைப் போல இல்லாமல், இப்போது நன்றாக, இறுக்கமாகக் கட்ட வேண்டும்'' என்று உத்தர விட்டான் தலைவன்.

கடத்தல் கும்பல் சாருமதியை நோக்கி விரைய, ''நோ! கூடாது! பத்து லட்சத்துக்குத்தானே, நாம் திட்டம் போட்டோம். அதன்படி, ஆளுக்கு இரண்டு லட்சம் பிரித்துக் கொண்டு போய்விடலாம். அக்காவை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள்!'' என்று தமக்கையின் அருகே வந்து நின்று சாருபாலா மற்றவர்களைத் தடுக்க, தங்கையின் பேச்சில், புரிபட்ட உண்மையில், பெரிய வளுக்கு இப்போது மயக்கமே வந்தது!

இவர்கள் ஆள் கடத்திகள் அல்ல. பாலாவுடைய நண் பர்கள். பணத்துக்காக, எல்லோருமாகச் சேர்ந்து போட்ட நாடகம்! பாலாவும் சேர்ந்து!

'பன்றியுடன் சேர்ந்த கன்று' என்று எவ்வளவு சரியாகச் சொல்லியிருக்கிறான்!

''பாலா, நீயுமா?'' என்றாள் ஈனசுரத்தில், அவள்!

தமக்கையின் அடிபட்ட தோற்றம், தங்கையைத் தாக்கியதோ?

கூடவே, அவள் தடுப்பதை அலட்சியம் செய்து, சாருமதியை நண்பர்கள் இறுகக் கட்டியதும் ஆத்திரமூட்ட ''ஏய் விடு! அக்காவை கட்டாதே என்கிறேனே, காதில் விழவில்லை? இப்படிக் கட்டினால், அவளுக்கு எவ் வளவு வலிக்கும்? ஒரே நிமிஷம்க்கா. நான் கட்டை அவிழ்த்து விட்டு விடுகி...'' என்று குனிந்து கட்டை அவிழ்க்க முயன்றவள், முதுகில் விழுந்த பேயறையில்,



தலை, கீழே தரையில் முட்டிக்கொள்ள ''ஆ!'' என்று அலறினாள்!

''ஐயோ! என்றதற்கு மேல் ஒன்றும் செய்ய இய லாமல், சாருமதி தவிக்க, ஒருவாறு சமாளித்து எழுந்து சாருபாலா திரும்பிப் பார்த்து, ''தி.. தினு.. என்..னையா... என்னை நீயா, அடித்தாய்?'' என்று கன்றி வீங்கிய நெற்றியைப் பிடித்துக் கொண்டு, திகைப்பும் அதிர்ச்சியு மாக வினவினாள்.

''அடி மட்டுமா? கழுதை! பெயர் சொல்லி அழைத்து, என்னைக் காட்டிக் கொடுத்ததற்கு, உன்னைச் சித்திர வதையே செய்ய வேண்டும். ஆனால், பத்து லட்சம் சம்பாதித்துத் தந்திருக்கிறாய். இன்னமும் சம்பாதித்துத் தரப் போகிறாய் என்பதால், இத்தோடு விடுகிறேன். அத்தோடு இடக்கு முடக்காய் உன் அத்தான் நாலு கேள்வி கேட்டால், எப்படியும் உளறிக் கொட்டத்தானே, போகிறாய்? உன் அக்கா முன்னிலையில், என் பெயர் சொன்னதில் புதிய பாதிப்பு எதுவும் இராது என்று, அதைச் சும்மா விடுகிறேன். ஆனால், மறுபடியும் அக்காவைக் கட்டவிழ்த்து விடுகிறேன், மண்ணாங்கட்டி என்று ஏதேனும் செய்தால், முதுகுத் தோலை உரித்து விடு வேன், முன்னைப் போல நடிப்பு அடி அல்ல. நிஜமா கவே, தோல் உரிந்து விடும்! நம்பு'' என்று மிரட்டினான் அந்த தினேஷ்!''

ஒன்றும் விளங்காமல், மலங்க விழித்த தோற்றம் மெல்ல மாறி, பாலாவின் கண்களில் நீர் பெருகலாயிற்று. உச்சந் தலையில் அடித்தாற்போல உண்மை புரிந்து கொள்வது, இப்போது அவளது முறை போலும்!

''தினேஷ், நீயா இப்படி பேசுகிறாய்? எனக்காக, எதுவும் செய்வேன் என்பாயே!'' என்று வேதனையோடு வினவினாள்.

தங்கையை இவன் எப்படியெல்லாம் வளைக்க முயற்சித்திருக்கிறான் என்று, சாருமதியின் மனம் கொதித்தது.

வளைத்தே விட்டான் என்றல்லவா, தோன்றுகிறது! மற்றபடி, பணத்துக்காக, இந்தக் கடத்தல், நாடகம் எப்படி நடைபெற்றிருக்க முடியும்?

ஆனால், தினேஷ் வேறு சொன்னான் ''செய்திருப்பேன்தான்! ஆனால், நீதான் தொடக்கூட விடவில்லையே! அதனால், இத்தனை நாட்களை உனக்காக வீணாக்கியதற்கு, இப்படி ஓர் அறுவடை எடுத்துக் கொள்கிறேன்! ஏனென்றால், அந்த ஒன்றரை லட்சம் போல, இன்னொரு வாய்ப்புக்குத்தான், உன் அக்கா புருஷன் இடம் கொடுக்கவே மாட்டேன் என்கிறானே!'' என்றான் எரிச்சலாக.

அம்மா, அப்பாவுக்கு மகளாகத்தான் இருந்திருக்கிறாள் பாலா என்று, சாருமதியின் மனம் சற்றே ஆறுதல் அடைந்தது.

அத்தோடு, மோகனசுந்தரம் சந்தேகப்பட்டது போல, அந்தத் திருட்டும், இவனதுதான். அந்தத் திருட்டில் பலன் கண்டதில் நோகாத பணத்துக்காக. அடுத்துத் திட்டமிட்டிருக்கிறான்! அதில் வந்த பணத்தைக் கண்டதும், இன்னும் அதிகத்துக்கு வழி தேடுகிறான். பணம் மட்டும் எவ்வளவு வந்தாலும், திருப்தியே இராது என்று, இப்போது அல்லவா தெரிகிறது!

கணவனிடம் சொல்லியிருக்க வேண்டும் என்று, காலம் கடந்த ஞானோதயம் அவளுக்கு இப்போது வந்தது. பயனற்ற ஞானம்!



சாருமதிக்காவது, முதல் திருட்டுப் பற்றி, ஓரளவு ஊகம் இருந்தது. ஆனால் சின்னவளுக்குத்தான், இதில் ரொம்பப் பெரிய அதிர்ச்சி!

''நீ... நீயா தினேஷ், அந்தப் பணத்தைத் திருடியது? நீயே திருடிவிட்டு, வேறே யாரோ திருடிய மாதிரி பேசினாயே! கடைசியில், தண்டனை எனக்கு, பதவி இறக்கம்! எவ்வளவு அவமானமாக இருந்தது என்று, உனக்குத் தெரியும்தானே? பிறகும், நீ நிஜத்தைச் சொல்லவே இல்லையே!'' என்று கண்களில் வலியோடு வினவினாள்.

''நீ அவமானப்பட்டதற்கு, நான் ஏண்டி, மாட்டிக் கொள்ள வேண்டும்? உண்மையைச் சொன்னால், பணத்தை வேறே, திருப்பிக் கொடுக்க நேருமே! அதை யோசியாமல், கேட்கிறது பார்! சரியான லூசு.''

நாலு நண்பர்களும் சேர்ந்து சிரித்தது. எப்படிப்பட்ட தீப்பிழம்பாய்த் தங்கையின் இதயத்தைச் சுட்டெரித்திருக்கும் என்று, சாருமதியால் ஊகிக்க முடிந்தது! ஆனால், இன்னொரு நட்பை ஏற்குமுன் யோசிப்பாள் அல்லவா?

வளர்ச்சியின் வலி! விளைவு நல்லதாகவே இருக்கும்.

ஆனால், எந்தத் தைரியத்தில் இந்தத் தினேஷ் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்கிறான்?

இது, வெளியே தெரியும்போது, தனக்கே ஆபத்து என்று யோசிக்கவில்லையா? அல்லது, வெளியே சொல்ல ஆள் இல்லாமல், சகோதரிகள் இருவரையும் அழித்து விடப் போகிறானா?

சாருமதியின் இதயம், ஒருதரம் நின்று துடித்தது!

## 13

பந்தயக் குதிரை வேகத்தில் துடித்த இதயத்தைச் சமனப்படுத்துவது, சாருமதிக்குப் பெரும்பாடாக இருந்தது.

ஆனால், அஞ்சி நடுங்கி அதிலேயே அரை உயிராகி, எதிரிகளுக்கு இன்னமும் வசதி பண்ணிக் கொடுப்பதில் என்ன லாபம்? அதைவிட, மூளையையேனும் தெளிவாக வைத்துக் கொண்டால் தப்பிப் பிழைக்க, ஏதேனும் வாய்ப்புக் கிடைக்கலாம்!

வெகு சிரமத்துடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சாருமதி யோசித்தாள்.

இவர்கள், குற்றத்திலேயே பழகிவிட்ட முழு வில்லன்கள் அல்ல! பணத்தாசையில், ஏதேதோ பேசியபோதும், கொலை என்கிற அளவுக்குச் செல்லத் துணிவிராது!

அல்லது, மோகனசுந்தரம் கூறியது போலத் திடுமெனக் கண்ட பெரும் பணம், எதைச் செய்யவும் தூண்டுமா?

நாற்காலியோடு கண்டபடி இறுகக் கட்டப்பட்டிருந்த நிலையில், சாருமதியின் உடம்பில் அங்கங்கே வலி பிடுங்கத் தொடங்கியது. லேசாக அசைந்து கொடுத்து, வலியைக் குறைத்துக் கொள்ள முயன்றவள், திகைத்தாள்.

நண்பர்கள், நண்பர்கள் என்று உயிரை விடுகிறவள் சாருபாலா. சகோதரிகள் இருவருமாகச் சேர்ந்து பெண்கள் விடுதியில் தங்கியிருக்கும்போதே அப்படி!



சாருமதியின் திருமணத்துக்குப் பிறகு நேர்ந்த தனிமையில், ஒரேடியாக, எல்லாமே அவர்கள்தான் என்ற நிலைக்குப் போயிருந்தாள்.

அதிலும் தினேஷின் ஆசை வார்த்தைகள் அவன் கைக் கயிற்றில் ஆடும் பம்பரமாகவே அவளை மாற்றியிருந்தன.

ஆனால், பதறிக் கொண்டு சாருமதி, கொண்டு வந்த பத்து லட்சம், அவளுடைய நண்பர்களை தோலுரித்துக் காட்டியதோடு, உடன் பிறந்த தமக்கையின் பாசத்தையும் எடுத்துக் காட்டி, சாருபாலாவை மாற்றியது.

ஆனால், பணத்தின் முன் மனச்சாட்சி மறைந்த நாலு பேர்! அவளது பிழையால் கட்டுண்டு கிடக்கும் சகோதரி! இந்த நிலையில், அவள் ஒருத்தி, தனியாக இவர்களை எதிர்த்து என்ன செய்ய முடியும்?

அதிலும் சோனாவின் கையில் இருந்த கத்தி, பாலாவை இன்னமும் நடுக்கியது. அவள் சும்மாவே, ஒரு மாதிரி! என்னவோ தன் வெள்ளைத் தோலாலேயே, தான்தான் உலக அழகி என்று நம்புகிறவள்!

"என்ன பெரிய வெள்ளை? உன் கண்ணழகு, அவளுக்கு வருமா?" என்று தினேஷ் சொல்வான். ஆனால் அவன் சொன்னதில் இப்போது எதை நம்புவது? அவன் பேச்சை நம்பி, அன்பான தமக்கையை வேறு மாட்டி வைத்து விட்டாளே!

சாருமதியின் முகத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சி தெரியவும், அவளால் பொறுக்க முடியாமல் போயிற்று.

கவனத்தைச் சாருபாலாவிடம் வைத்தவாறு, ஏதோ வாதிட்டுக் கொண்டிருந்த மற்றவர்களை அணுகி, "தினேஷ் இப்போது நீங்கள் என்ன சதி செய்கிறீர்களோ, எனக்குத் தெரியாது. ஆனால், என் அக்கா நல்லவள். உங்களோடு சேர்ந்த பாவத்துக்கு, என்னைக் கட்டிப் போட்டுவிட்டு, அவளை விடுவித்து அனுப்பி வையுங்கள் ப்ளீஸ்!" என்று கெஞ்சினாள்.

"அட, இதைப் பார்டா. புதுப்பாசம் ஒன்று பொத்துக் கொண்டு வந்திருக்கிறது! அக்காக்காரியை பார்த்து வயிறெரிந்தது எல்லாம், அதற்குள்ளே மறந்து விட்டதா?" என்று ஏளனம் செய்தான் தினேஷ்.

முகம் கன்ற, "தப்புதான், பெரிய தப்புதான் செய்து விட்டேன். ஆனால், அதற்கு உரிய தண்டனையை எனக்குக் கொடுங்கள் என்றுதானே கேட்கிறேன்? அக்காவுக்கு வலிக்கிறது. தயவு பண்ணி அவள் கட்டுக்களை அவிழ்த்துவிடு, ப்ளீஸ் தினேஷ்" என்று அவள் காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கேட்டாள்.

"ஐய்யோ, அக்காவுக்கு வலிக்குதாமே! இந்தாம்மா, இப்படித் துடிக்குது! ஒன்று செய்வோமா? இந்தப் புதூ...ப் பாசம் எவ்வளவு வலுவானது என்று பார்ப்போமா? ரைட்! நாங்கள் இப்போது திட்டம், நீ சொன்னது போலப் பக்காவாகச் சதி பண்ணியாயிற்று! உன் அக்காவுக்கு விலை, இரண்டு கோடி என்று முடித்திருக்கிறோம்..."

"என்னது?! இ... இரண்டு...உங்கள் பேராசைக்கு அளவே இல்லையா?"

"பேராசையா? இரண்டு கோடியை நாலாகப் பிரித்தால், ஆளுக்கு ஐம்பது லட்சம் தான் வருகிறது. இந்தக் காலத்தில், இதை வைத்து என்ன செய்ய முடியும்? ஆனால், இதற்கு மேலே கேட்டால், இந்தப் பெண்டாட்டியே வேண்டாம், வேறே கட்டிக் கொள்கிறேன் என்று விடுவானோ என்றுதான், இதிலே நிறுத்தினோம்."



"எவ்வளவு கேட்டாலும் கொடுப்பான் என்று சொன்னால், உங்கள் யாருக்கும் புரியவில்லையே! ஒரு நாளைக்கு ஒரு லட்சம்தான் கேட்டேன். அவனுக்கு. அவனுடைய மனைவியே போதுமாம். என்னிடம் சொல்கிறான்! அதனாலே இவள் அக்கா முகத்தில் கத்தியாலே, நாலு கோடு போடலாம் என்று...'' என்று கத்தியை நீட்டினாள் சோனா.

"ஐயோ, வேண்டாம், வேண்டாம், தினேஷ். உன் காலில் விழுகிறேன். அக்காவை எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்லு" என்று மெய்யாகவே, அவன் காலிலேயே விழுந்தாள் பாலா.

தங்கையின் தவிப்பு. தாங்காமல் "விட்டுவிடு, பாலா. முதலில் அவர்கள் திட்டம் என்ன என்று கேட்போம்" என்றாள் சாருமதி, மெதுவாக.

கத்தியை நீட்டியதும், அவளுக்கும், நெஞ்சு வெடித்துவிடும் போலத் துடிக்கத்தான் செய்தது. ஆனால், அதை வெளிக்காட்டி அவர்களது எக்காளத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள் பெரியவள்.

அத்தோடு, மனைவி போதும் என்று கணவன் சொன்னான் என கேட்கையில், அந்த நிலையிலும் ஒரு பூரிப்பு எட்டிப் பார்க்கத்தான் செய்தது.

யோசித்துப் பார்த்தால், முதலில் இருந்ததைவிட, மோகனசுந்தரத்தின் அன்பும், ஆசையும் எவ்வளவோ பெருகித்தான் இருந்தது. இப்படியே போயிருந்தால், பின்னொரு காலத்தில் 'ஒருடல் ஈருயிராக' அவர்கள் மாறக்கூட வாய்ப்பிருந்தது.

ஆனாலும், இன்றைய நிலையில் இரண்டு கோடியை, அவளுக்காகக் கணவன் அள்ளிக் கொடுப்பான் என்ற நம்பிக்கை சாருமதிக்கு வர மறுத்தது.

அதுவும் அவனிடம் அனுமதி பெறாமல், பத்து லட்சம் ரூபாயை வேறு, எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாள்!

''பாருங்கள் தினேஷ், எங்களைப் பற்றிய எல்லா உண்மைகளையும், பாலா உங்களிடம் சொல்லியிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். நீங்களே, யோசித்துப் பாருங்கள், சுந்தர் எனக்காக இரண்டு கோடி ரூபாய் கொடுப்பாரா?'' என்று முடிந்த அளவு நிதானமாக வினவினாள்.

எப்படியாவது பேசி, இந்தப் பத்து லட்சத்தோடு, அவர்களை அனுப்பிவிட முடியாதா என்பது, அவளுக்கு அதுவுமே அவர்களுக்கு சும்மா வந்த காசுதானே?

தாடையைத் தடவியபடி, ''எனக்கும் அதுதான் சந்தேகமாக இருக்கிறது! ஆனால், இந்த சோனாதான் பிடிவாதமாகச் சொல்லுகிறாள்...'' என்று அவன் இழுத்த போது, உள்ளூர அவளுக்கு நம்பிக்கை தலை தூக்கத் தொடங்கியது.

ஆனால் திடுமென நிமிர்ந்து ''என்ன? என்னவென்று உன் கணவனைச் சொன்னாய்? சுந்தரா? ஹூம்! சுந்தர் கிந்தர் என்று செல்லப் பெயரெல்லாம் துள்ளி விளை



யாடுகிறது. பணம் மட்டும் தர மாட்டானாமா? எங்களை ஏமாற்றப் பார்க்கிறாயா? எல்லாம் தருவான், இதற்கு மேலே, ஒரு வார்த்தை நீ பேசக்கூடாது! என்னையே, ஒரு கணம் குழப்பி விட்டாயே! சோனா, நீ சொன்னதுதான் சரி. அந்தக் கத்தியைக் கொடு. இதோ பார், சாருபாலா. நீ நேரே உன் அக்கா புருஷனிடம் போகிறாய், அவனிடம் உள்ள நிலையைச் சொல்லி, இரண்டு கோடி ரூபாய் வாங்கி வருகிறாய். என்னமாவது, திரிசமன் பண்ணினே, உன் அக்கா குளோஸ்! அதுவும் இந்தக் கத்தியாலே, உடம்பு, முகம் எல்லாம் கோலம் போட்டு! கிளம்பு!'' என்றான் தினேஷ் அடித் தொண்டையில் அதிகாரமாக.

கவனமற்றுச் சொன்ன ஒரு வார்த்தையில் கெடுத்துக் கொண்டோமே என்றிருந்தது சாருமதிக்கு.

ஆனால், அது பற்றி, இனி எண்ணிப் பயன் இல்லை! தப்புவதற்கு வேறு வழியைத்தான் பார்க்க வேண்டும்.

ஆனால், கையில் ஆயுதத்தோடு, அவர்கள் நாலு பேர்! இது தெரியாத இடம் வேறு! ஒரு வேளை பாலாவுக்குத் தெரியுமோ என்ற நம்பிக்கை, உடனே அழிந்தது.

ஏனெனில், ''கிளம்பு, கிளம்பு என்று அதட்டுகிறாயே, இங்கிருந்து ரயில் நிலையத்துக்குச் செல்லும் வழிகூட எனக்குத் தெரியாதே! பின்னாலே யாரேனும் விசாரித்தாலும், வழி காட்டத் தெரியாமலே இருக்கட்டும் என்று, எங்கெங்கோ சுற்ற வைத்துதானே என்னை இங்கே கூட்டி வந்தீர்கள்? இப்போது போ, போ என்றால், நான் எங்கே போய் முட்டிக் கொள்வது? இப்போது இருட்டாக வேறு, இருக்கிறது!'' என்று எரிச்சலை மறையாமல் காட்டிக் கேட்டாள் சாருபாலா.

இவர்களை இப்படி நம்பினோமே என்று, அவளுக்கும் மறுகல்!

''ஆமா...ம்! அதுவும் சரிதான்! சங்கர்'' என்று தாடிக் காரனை கூப்பிட்டான் தினேஷ். ''நீ, இவளை வந்த மாதி ரியே கூட்டிப் போய், ரயிலடியில் விட்டுவிட்டு, அப்ப டியே நமக்கு, இரண்டு ரொட்டியும் வாங்கி வந்துவிடு, காலை உணவுக்குத் தேவைப்படும்'' என்றான்.

''போ, தினேஷ் இப்போதுதான் இந்த அக்காக்காரியை நீ சொன்ன விதமாக அழைத்து வந்ததில், காலெல்லாம் ஒரே வலி! சுரேஷுக்கு காய்ச்சல் என்பதால், சோனாவை வேணுமானால் போகச் சொல்லேன்'' என்றான் சங்கர் அலுப்புடன்.

''என்னப்பா நீ! ஐம்பது லட்சம் வேண்டும் என்றால், கொஞ்சம் கஷ்டப்படாமல் கிடைக்குமா? சோனாவும், பாலாவும் இப்போது இருக்கும் மனநிலைக்கு, வழியில் இருவரும், குடுமிப் பிடிச் சண்டையே போடலாம்! பின் பக்கமாக என் பைக் நிற்கிறது. அதை எடுத்துப்போ. புதுசுப்பா. ஜாக்கிரதை! எங்கேயும் இடித்து விடாதே!'' என்று சாவியை எடுத்துக் கொடுத்தான்.

''போகும் வழி மட்டும் முன்னைப் போலவே, ஒட்டு'' என்று சொல்லி அனுப்பினான்.

செல்லுமுன் சாருபாலாவிடம் மறுபடியும் ஒரு தரம் எச்சரித்தான்.

''சற்றுப் பெரிய தொகை என்பதால், அதைத் தயார் பண்ணத்தான். இப்போதே, அவளை அனுப்புவது, நாளைக்குப் பணத்தை, எப்போது எப்படி கொண்டு வருவது என்று, அவளுக்குத் தகவல் வரும்'' என்றான்.



''எப்படி? என் செல்போனையும் பிடுங்கிக் கொண் டாயே! அது மட்டுமில்லை. இந்த ராத்திரியில், எந்த பாங்க் திறந்திருக்கும்?'' என்று ஏளனமாகக் கேட்டாள் சாருபாலா.

இவள் வாயை மூடிக் கொண்டு போக மாட்டாளா என்றிருந்தது, சாருமதிக்கு.

இந்தக் கூட்டத்தின் பிடியிலிருந்து பாலா விலகிப் போய் விட்டால், அப்புறம் அவள் ஒருத்தி மட்டும் தப்புவதைப் பார்க்கலாம்!

அசட்டுத்தனமாய், அவர்களுக்கு கோபமூட்டி, உள்ள தையும் கெடுத்துவிடக் கூடாதே!

எனவே, ''பாலா, அதெல்லாம் அவர்கள் பொறுப்பு! பணம், அவர்களுக்குத்தானே தேவை? எப்படியோ தகவல் கொடுப்பார்கள்! அதன்படி மட்டும் நீ, ஒழுங் காகச் செய். நாம் இருவரும் நல்லபடியாக மீள, அது ஒன்றுதான் வழி!'' என்றாள் தங்கையிடம்.

''பெரியவள் என்றால் பெரியவள்தான்!'' என்று சிலாகித்தான் தினேஷ். ''இந்தச் சிலுப்பட்டை மாதிரி, பொறுப்பில்லாத அசட்டுக் கேள்விகள் கேட்டுத் தொல்லை தருவதில்லை! அட அடி முட்டாளே பாலா, உன் அக்கா கணவன் கேட்டால், இரண்டு என்ன இன்னும் நாலு கோடி சேர்த்துக் கொடுப்பதற்குச் சென்னையில், எத்தனையோ வட்டிக் கடைக்காரர்கள், தயாராக இருக் கிறார்கள், தெரியுமா? கேட்டு வாங்குவதற்கு, அந் தாளுக்கு அறிவிருக்க வேண்டும். கட்டின பெண்டாட்டி மேல் அக்கறையும் இருக்க வேண்டும். அத்தோடு உன் அக்கா சொன்னது போல, ஏதோ ஒரு வழியில் நான்

உனக்குத் தகவல் கொடுப்பேன். அவ்வளவுதான். இதற்கு மேலே ஏதாவது கேட்டு எரிச்சல் படுத்தாமல், உடனே கிளம்பு! போ!'' என்றான் முடிவாக.

தமக்கையை அந்தத் துரோகிகளிடம் தனியே விட்டுப் போக மனமின்றி, கலக்கத்துடன் ''அக்கா!'' என்று அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தாள் பாலா.

ஆனால், ''நீ சீக்கிரமாகப் போனால், நம் இருவரும் சீக்கிரமாக மீள முடியும். சீக்கிரமாகப் போ, பாலா'' என்று அவளை அனுப்புவதிலேயே குறியாக இருந்தாள் சாருமதி.

தினேஷ் குழுவுக்கும் அதுவே ஏற்புடையதாக இருக்கவே, ஒரு வழியாகப் பாலா புறப்பட்டுச் சென்றாள்.

பாலா கிளம்பிச் சென்றதும், சாப்பிடுகிறாளா, பாத்ரூம் போக வேண்டுமா என்று சாருமதியிடம் கேட்டார்கள்.

இரண்டையுமே அவள் மறுக்கவும், ''என்ன ஒத்துழையாமைப் போராட்டமா? உனக்குத்தானே, சிரமம்?'' என்றான் தினேஷ், சந்தேகமாகப் பார்த்து.

"அப்படியில்லை, ஒரு தரம் கட்டியதே. எங்கெல்லாமோ கை பட்டு அருவருப்பாக இருந்தது. இன்னொரு தரம்... கட்டை அவிழ்த்து, மறுபடியும் கட்டி... வேண்டாம் அதைவிட, நான் இப்படியே இருந்து கொள்வேன்'' என்றாள் சாருமதி.

தோளைக் குலுக்கிவிட்டு சோனா செல்ல, தினேஷ் பின் தொடர்ந்தான்.

சற்று நேரத்தில் பாலாவை ரயில் நிலையத்துள் விட்டு விட்டதாக சங்கர் போன் செய்தான்.



சுரேஷுக்குக் காய்ச்சல் அதிகமாயிருப்பதால், மருந்துக் கடையில் சொல்லி, மாத்திரையும் வாங்கி வருமாறு, தினேஷ் கூறினான்.

பிறகே, அவள் வந்தபோது பாலாவின் அருகில் நின்றிருந்த சுரேஷ், சுவரில் மெல்லச் சரிந்து, இப்போது படுத்தே விட்டான் என்பதைச் சாருமதி கவனித்தாள்.

அங்கே கிடந்த விரிப்பில், தினேஷ், சோனா இருவருமாகச் சேர்ந்து, அவனைப் புரட்டிப் படுக்க வைத்தனர்.

அந்த விரிப்பு கூடப் பாலாவினது என்று கண்டதும், அடப் பாவிகளா என்று இருந்தது, சாருமதிக்கு!

ஆனால், இது நல்ல தருணம்!

இருவருமாக, சுரேஷை நேராகப் படுக்க வைத்து, இன்னொரு போர்வையைச் சுருட்டி தலைக்கு வைத்து, இயன்றவரை வசதி பண்ணிக் கொடுத்துவிட்டுத் திரும்பினால், சாருமதியைக் கட்டி வைத்திருந்த நாற்காலி காலியாக இருந்தது!

தமக்கையைக் கட்டியது பொறுக்காமல், கட்டை அவிழ்க்க முயன்று, தினேஷிடம் அறை வாங்கி பாலா தரையில் முட்டிக் கொண்டு விழுந்தபோது, சாருமதியைக் கட்டியிருந்த கயிற்றின் ஒருமுனை சின்னவளின் கையிலேயே இருந்தது.

அறை விழுந்த வேகத்தில் தரையில் போய் முட்டிய போது, கையிலிருந்த கயிறும் இழுபட்டு கடைசியாக முடிச்சிட்டிருந்ததும் அவிழ்ந்து விட்டது. முடிச்சு அவிழ்ந்ததே தவிர, சுற்றியிருந்த கயிறு தளராததால், கட்டு அவிழ்ந்ததை, யாரும் அறியவில்லை.

வலியெடுத்ததும் அசைய முயன்றபோதுதான், சாருமதியே, அதை கவனித்தது.

அதிலிருந்து யாரும் கவனியாத சமயங்களில், மெல்ல மெல்லக் கட்டைத் தளர்த்திக் கொண்டே வந்தாள்.

இது, தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், அவள் உணவு, இயற்கை வசதிகளை மறுத்ததே!

பாலா அவர்கள் பிடியில் இல்லை என்றானதும், சரியான தருணத்திற்காகக் காத்திருந்தாள்.

இவள் தப்பிக்கக் கூடும் என்ற எண்ணமே இல்லாமல், சோனாவும், தினேஷும் நோயாளியிடம் முழுக் கவனத் தையும் செலுத்தியது, அவள், அங்கிருந்து தப்புவ தற்கான வாய்ப்பைக் கொடுத்தது.

ஆனால், வீட்டை விட்டு வெளியே வந்தவளுக்கு, அங்கிருந்து எங்கே எப்படிப் போவது என்று ஒன்றும் தெரியவில்லை.

சரியான வழியில் சென்றாலும் கூட, பைக்கில் வந்து கொண்டிருக்கும் சங்கரிடம் மாட்டிக் கொள்ள நேரிட லாம்.

மின் தொடர்பு இல்லாததாலோ என்னவோ இருள் அதிகமாகவே இருந்தது.

ஒரு வகையில் அந்த இருளே வசதியாகி, அவளைப் பிறர் கண்ணில் படாமல் மறைத்தபோதும், அவளுக்கும் செல்லுமிடம் தெரியாது போயிற்று!

கால் போன போக்கில் போய், இடக்கு முடக்காக எங்கேனும் அவர்களிடம் சிக்குவதை, குட்டிச் சுவராகி



விட்டிருந்த சுற்று மதிலை ஒட்டியே மறைந்திருப்பது மேல் என்று முடிவு செய்தாள்.

உள்ளிட்ட கேட்ட குரல்கள், அவள் தப்பியதைக் கண்டு விட்டார்கள் என்பதை உணர்த்தின. சங்கரோடு தொடர்பு கொண்டு பேசுவது கேட்டது.

இப்போது அவர்களுக்கு, அவள் இரண்டு கோடி ரூபாய் சொத்து! முழு மூச்சுடன் தேடுவார்கள். மறுபடி யும் மாட்டிக் கொண்டால், அவளைக் குரூரமாகப் பழி வாங்காமலும் விட மாட்டார்கள். அதிலும் கத்தியோடு காத்திருக்கும் அந்த சோனா!

அந்த வீட்டில் இருந்த மெழுகுவர்த்தியை எடுத்து வந்து தேட முடியாது என்று சாருமதி சற்று அமைதி அடையும்போதே, செல்போன்கள் ஒளிர்வது தெரிய, சட்டெனத் தரையோடு படிந்தாள்.

வீடு வரை வந்துவிட்டுத் திரும்பிச் சென்ற பைக்கின் முன் விளக்கு பாய்ச்சிய ஒளி வெள்ளம் படாதவாறு வீட்டின் ஒருபுறமாக மறைந்தாள்.

முதலில் வரும்போது சுற்றிச் சுற்றி வந்த சந்துகளை அலசியவாறு பைக் சென்றுவிட, சற்றே மூச்சு நேராக வந்தது. அந்த அளவு வெளிச்சம். இனி இராதல்லவா?

இரு செல்போன்களின் சிறு ஒளிக் கற்றைகளும் கூடச் சுற்றிச் சுற்றி, இங்கும் அங்குமாக அலைந்த வண்ணம் வீட்டை விட்டு விலகியே சென்றன.

அவை திரும்பி வரும்போதும், தன் மேல் பட்டு விடாமல், மறைந்து கொள்ள எண்ணிப் பின்புறமாக மெல்ல நகர்ந்தவள், மெத்தென்று எதிலோ மோதிக் கொண்டாள்.

அச்சத்துடன் அலறப் போனவளின் வாயை, ஒரு கரம் இறுகப் பொத்தியது.

ஒரு கணம் முழு மூச்சுடன் திமிறியவள், ஓசையற்ற விசும்பலுடன் அந்த உருவத்தின் தோளில் அடங்கிப் போனாள்!

## 14

கனவில் நிகழ்வது போலத் தொடர்ந்து நடந்த சில நிகழ்ச்சிகளைச் சாருமதியால் நம்பக்கூட முடியவில்லை.

ஆனால், கணவனின் தோள் தந்த அடைக்கலத்தை விட்டு, அவள் அசையக்கூட விரும்பவில்லை.

அசைந்து, இந்தக் கனவு கலைந்து விட்டால்?

நல்லவேளையாக, அவனும் அவளை விலக்கவில்லை!

அது பின்னால் வரலாம். பத்து ரூபாய்கூடக் கொடுக்கக் கூடாது என்றால், பத்து லட்ச ரூபாயை தூக்கிக் கொண்டு போய்த் தாரை வார்த்தாயா? போ வெளியே என்று, வீட்டை விட்டே வெளியே துரத்தவும் செய்யலாம்!

ஆனால், அது நடக்கிறபோது நடக்கட்டும். இப்போது இந்த சொர்க்கம் அவளுக்குக் கட்டாயம் வேண்டும். இல்லாமல் தீராது!

செல்போன் தந்த சிறிய ஒலியில் அதிகம் தேட முடியாததாலோ, ஜுரத்தில் கிடக்கும் சுரேஷைத் தனியே



அதிக நேரம் விட மனமின்றியோ, நடந்து தேடப் போனவர்கள் சீக்கிரமே திரும்பி விட்டார்கள்.

அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசிப்பதற்காக, சங்கரையும் வரச் சொன்னார்கள்.

இந்த இருட்டில், சாருமதியைத் தேடுவது, அவர்களுக்கு எவ்வளவு சிரமமோ, அதே போலத் தப்பிச் செல்வது, சாருமதிக்கும் கடினம் என்று சரியாகவே கணித்தார்கள்.

இது, பின்னிலவுக் காலம், நிலவு எழும்பி சற்று இருள் விலகும் வரை காத்திருந்து விட்டு, மூவருமாக அதற்குள் சுரேஷுக்குக் காய்ச்சல் விட்டு விட்டால் நால்வருமாகச் சாருமதியைத் தேடிக் கண்டு பிடித்தே தீர வேண்டும் என்று, இருவருமாக முடிவு செய்தார்கள்.

''அந்த நாய் மட்டும் என் கையில் கிடைக்கட்டும்'' என்று வன்மத்துடன் சோனா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தபோது, பைக் ஒலி கேட்டது.

பைக்கை நிறுத்திவிட்டு, மூவருமாக வீட்டினுள் செல்லவும், மோகனசுந்தரம் மனைவியிடமிருந்து ஒரு கையைப் பிரித்து, உயர்த்தினான். உயர்த்திய கையில் ஒரு சின்ன ஒளி வட்டம்.

அதன் பின் நிறையக் காரியங்கள், மடமடவென்று நடந்தன.

அங்கிங்கெனாதபடி மரங்கள், குத்துச் செடிகள், பாறைகள், கற்குவியல்களின் பின்னிருந்து கூட, நிறையப் பேர் ஓடிவந்து, அந்த வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள்.

என்ன சத்தம் என்று பார்க்க வந்தவர்களின் மீது, பல டார்ச் விளக்குகளின் மூலம் ஒளி வெள்ளம் பாய்ச்சப் பட்டது.

மந்திரத்தில் நடப்பது போல, போலீஸ், ஜீப், வேன், கார் எல்லாம் வந்தன.

வந்து நின்ற காரிலிருந்து "அக்கா!" என்று ஓடி வந்து பாலாவைப் பார்த்தபோதுதான், கனவின் பொய்மை, சாருமதிக்குக் கொஞ்சம் குறைந்தது.

தமக்கையை அணைத்துக் கொள்ள ஓடி வந்த சாருபாலா, கணவனின் கையணைப்பில் அவள் நின்ற நிலையைக் கண்டதும் சற்றுத் தயங்கினாள்.

பிறகு சிரிப்பும் கண்ணீருமாகச் சாருமதியின் கையைப் பற்றிக் கன்னத்தில் அழுத்தி வைத்துக் கொண் டாள்.

''எங்களை எதற்கு சார், கைது பண்ணுகிறீர்கள்? நாங்கள் தப்புப் பண்ணியதற்கு, உங்களிடம் சாட்சி இருக்கிறதா?'' என்று எகிறினான் தினேஷ். ''இவர்கள் இரண்டு பேரும், எங்களோடு ஜாலியாக இருப்பதற்காக வந்து விட்டு, அதிகப் பணம் கேட்டு, தகராறு செய்ததற் காக, அடித்துத் துரத்தினோம். அதற்குப் பழி வாங்குவ தற்காக, இவர்களை கடத்தியதாகப் பொய்ப் புகார் கொடுத்து, உங்களைக் கூட்டி வந்திருக்கிறார்கள், நம்பா தீர்கள்'' என்று அசிங்கத்தைக் கொட்டினான்.

''ஓகோ! அப்படியாப்பா? ஆனால் இவர்கள் ஆள் கடத்தல் புகார் கொடுத்தார்கள் என்று, உனக்கு எப்படி யப்பா தெரிந்தது? அது நிஜம் என்பதால்தானே?'' என்று காவல் அதிகாரி மடக்கவும், அவன் 'ஞே' என்று



விழிக்க, ''உன் வாயால் நாங்களும் கெடுவதா? எல்லாம், இவனால்தான் சார். இவன்தான்'' ''இவன்தான்'' என்று ஒருவருக்கொருவர் கைகாட்டி, மற்றவர்கள் உளறிக் கொட்டினார்கள்.

''நீங்கள் கவலைப்படாதீர்கள், சார். ஸ்டேஷனில் வைத்து விசாரிக்கிற விதத்தில் இவர்களில் யாருமே, இனி உங்கள் குடும்பத்துப் பக்கமே திரும்ப மாட்டார்கள். வருகிறோம்'' என்று போலீஸ் குற்றவாளிகளோடு கிளம்பிப் போன பிறகே, இறுகி நின்ற சாருபாலா, சற்று உடல் தளர்ந்தாள்.

''உனக்கும் அத்தானுக்கும் எவ்வளவு பெரிய அவமானத்தையும், நஷ்டத்தையும் கொண்டு வர இருந் தேன்! உங்களால், என்னைக் கொ... கொஞ்சமேனும் மன்னிக்க முடியுமா, அக்கா?'' என்று விம்மினாள்.

''நீங்கள் இருவரும் காருக்குப் போங்கள், நான் இதோ வருகிறேன்'' என்று அவன் கை காட்ட, அவன் கார் அருகில் வந்து நின்றது.

காரை ஓட்டி வந்தவர், இறங்கி சாவியை மோகன சுந்தரத்திடம் கொடுத்தார்.

அவரது கையைப் பற்றி குலுக்கி ''உங்களால்தான் சார், எல்லாம் நல்லபடியாக முடிந்தது. உங்கள் ஆட்கள் எல்லோருமே, பிரமாதமாக வேலை செய்தார்கள். இரவு நேரத்தில் இந்தக் காட்டிலும் மேட்டிலும் கிடந்து... அதற்காக, போனஸ் ஒரு தொகையும் சேர்த்து பில் அனுப் புங்கள்'' என்று கூறி அவரிடமிருந்து விடை பெற்றான் மோகனன்.

"இருவருமே முன்புறமே ஏறுங்கள். திரும்பிப் பார்த்து பேச வேண்டியிராது" என்று மோகனசுந்தரம் கூறியது. கணவன் அருகாமையை விட்டு விலகவும் பிடிக்காமல், தங்கையை தனியே விடவும் மனமின்றி நின்று கொண்டிருந்த சாருமதிக்கு ஆறுதலாக இருந்தது.

இருவரிடமே கேட்க, அவளுக்கு நிறைய கேள்விகளும் இருந்தன.

கார் ஓடத் தொடங்கியதும், "இருவரும், இவ்வளவு சீக்கிரம் எப்படி வந்தீர்கள்?" என்று முதல் கேள்வியைக் கேட்டாள், "கொஞ்ச நேரத்துக்கு முன்தானே பாலா, நீ கிளம்பினாய்?" என்றாள் தங்கையிடம்.

"ஆமாக்கா!" என்று அவள் விவரம் சொன்னாள்.

ரயில் நிலையத்தில் விட்டுவிட்டு, சங்கரின் பைக் கிளம்பியதுமே, சாருபாலா, பக்கத்தில் ஏதாவது டெலிபோன் பூத் இருக்கிறதா என்று தேடினாள். ஒருத்தி. செல் போனில் பேசி முடிப்பது கண்ணில் படவும், அவசரத் தேவை என்று, அவளிடம் செல்லை கேட்டு வாங்கி, மோகனசுந்தரத்துக்கு போன் செய்தாள்.

அவன் அருகில்தான் இருப்பதாகச் சொல்லி, வெளியே வந்து, தன் காரில் ஏறச் சொன்னான்.

"அதிலிருந்து நான் இந்தக் காரிலேயேதான் அக்கா, இருந்தேன். அத்தான் எப்படி வந்தார், என்ன நடந்தது என்று எனக்கு ஒன்றும் தெரியாது" என்றாள் அவள்.

கணவன் புறம் லேசாகச் சாய்ந்து "எப்படியப்பா வந்தீர்கள்?" என்று வியந்து கேட்ட சாருமதி, சட்டென நிமிர்ந்தாள் "கந்தசாமி? அவன்தானே? காலில் செருப்புப் போடவில்லையே என்று அவன் கேட்டபோதே, உங்களிடம் சொல்வானோ என்று தோன்றியது! ஆனால், இந்த ஊர், குறிப்பாக, இந்த வீடு? எப்படி வந்தீர்கள்?"



வெளியே தெரியாமல், அவளை மறுபடியும் தோளில் சாய வைத்துக் கொண்டு, மோகனசுந்தரம் பதில் சொன்னான்.

சாருபாலாவை, அவளுடைய நண்பர்கள் வெகுவாகத் தூண்டி விடுவதாகத் தெரிந்ததும், முதலில் எடுத்த பணத்தைச் செலவு செய்துவிட்டு, அவர்கள் அடுத்த வருமானத்துக்குத் திட்டமிடுகிறார்களோ என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று.

"'அந்தப் பைக்' கூட, அதில் வாங்கியது போலத்தானே, தெரிகிறது. சும்மா இருந்து சாப்பிடுகிறவனிடம், அதற்கு மேல் பெரிதாக என்ன மிச்சமிருக்கும்? சும்மா வந்த பணம், அதே வழியில்தானே, யோசிக்கத் தூண்டும்? நம் நிறுவனங்களின் பாதுகாப்பைக் கவனிக்கும் நிறுவனத்தின் கிளையாகத் துப்பறியும் நிறுவனம் ஒன்று இருக்கிறது. அவர்கள் ஏற்கனவே இவர்களை லேசாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். தினேஷ், பைக் வாங்கியது, முதல் குறிப்பு! பிறகு ரொம்பவே கவனிக்கத் தொடங்கினார்கள். அப்புறம் என்ன? கந்தசாமியின் போன் வந்ததும், நீ ஏதாவது குறிப்பு வைத்திருப்பாய் என்று வீட்டுக்குப் போய் பார்த்தேன். துப்பறியும் நிறுவனத் தலைவருக்கு வேண்டிய காவல் அதிகாரியைப் பிடித்தோம். உங்கள் இருவருக்கும் சேதம் ஏற்படாமல் காப்பாற்றுவதுதான், ஒரு பிரச்சினையாக இருக்குமோ என்று எண்ணினோம். அதுவும், உன்னைக்

கட்டி வைத்திருப்பது, சோனாவின் பேச்சு எல்லாம் பாலா சொன்னாளா? பாதி உயிர் போய்விட்டது'' என்று உடல் சிலிர்த்தான் மோகனன்.

கட்டிலிருந்து தப்பிய விதம் குறித்து சாருமதி கூறுகையில், மூவருக்கும் சிரிப்பே வந்தது.

தங்கையின் வீங்கியிருந்த நெற்றியை, மென்மையாக வருடிக் கொடுத்தாள் சாருமதி.

''யாரும் சாப்பிட்டிருக்க வழியில்லை. எனக்குப் பசிக்கிறது. அதனால்...'' என்று வழியில் இருந்த ஒரு பெரிய ஹோட்டலுக்குள் காரைச் செலுத்தினான் மோகன சுந்தரம்.

''ஐயோ, எங்கள் உடை...'' என்றபோதும், பெண் களும் மறுக்காது சாப்பிடப் போனார்கள். எல்லோருக் குமே நல்ல பசி!

சென்னைக்குள் கார் நுழைந்ததும், ''என்னை விடுதி யிலேயே விட்டுவிடுங்கள். அத்தான். நீங்கள் இருவரும் விரும்பியது போல, என் காலில் நின்று வளரவே, இப்போது நானும் விரும்புகிறேன்'' என்று சாருபாலா கூறியது, அவளது முழுமையான மனமாற்றத்தைப் பறைசாற்றியது.

''செய், பாலா. உன் அந்த வளர்ச்சிக்கு எங்கள் துணை எப்போதும் இருக்கும்'' என்றான் மோகனசுந்தரம்.

வீட்டுத் தனிமை கிடைத்த வினாடியிலிருந்து கண வன், மனைவி இருவருக்கும், ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியவே முடியவில்லை. காற்றுப் புக இடமில்லாத ஒட்டல்!



அவரவர் தாகம் தீர்க்க அணைத்தவர்கள். அடுத்த வரிடம் இருந்தும். அதே வேகத்தை உணரவும், வியப்பும் திகைப்புமாக விழி மலர நோக்கினார்கள்.

''ஹே, சாரு நீ... நீயுமா?'' என்று அவன் கேட்க ''சுந்தர், உங்களுக்குமா?'' என்று வினவினாள் அவன் மனைவி!

''ஒரு காரணத்துக்காக மணந்தவர் நீங்கள்! பிரியவும் கூடும் என்று சொன்னீர்களே! அதை நினைத்து, எவ்வளவு வருந்தியிருக்கிறேன், தெரியுமா?''

யோசனையோடு மனைவியைப் பார்த்தான் மோகனன்.

''இங்கே வா!'' என்று அவளைக் கை வளைவிலேயே அழைத்துச் சென்று இருவருமாக அமர்ந்தார்கள்.

''அப்போது என் மனநிலை அப்படித்தான் சாரு. ஆனால் அந்த இக்கட்டில் உன் வேதனையைத் தீர்க்க வேண்டும் என்பதும், நம் திருமணத்துக்கு ஒரு முக் கியமான காரணம், யாரோ ஒருத்தியான உன் வருத்தம் பற்றி, எனக்கென்ன என்று இருக்க முடியவில்லை. அதைக் காதல் என்றும், அப்போது நான் நினைக்கவில்லை. இந்த தலைமுறையில், கொள்கைப் பிடிப்புள்ள ஒரு நல்ல பெண் வருந்தக் கூடாது என்று எண்ணினேன். அத்தோடு, நானும் ஒரு நாள் மணந்துதான் ஆக வேண் டும். அது நீயாக ஏன் இருக்கக் கூடாது என்று தோன் றியது. ஆனால், பிரிவு பற்றிப் பேசியதன் பாதிக் காரணம், நீயும் தான்...''

''நானா? நான் எப்போது அப்படிச் சொன்னேன்?''

"சொல்லவில்லை. ஆனால், ஒரு பெரிய இக்கட்டு தீர்வதற்காக, உன் தங்கைக்காக என்னை மணப்பவள், நீ. ஒருவேளை என்னோடான வாழ்வு, உனக்குச் சகிக்க முடியாமல் போய்விட்டால், விடுதலை கொடுக்க வேண்டும் என்றும் எண்ணினேன்."

"ஓஹோ!" என்றாள் அவள் வியப்புடன்.

சட்டென அவனது பிடி இறுகியது. "ஆனால், அன்று மொட்டை மாடிச் சுவர் மேல், நின்றாய், பார்! ஒரு கணம் என் இதயத் துடிப்பே நின்று போயிற்று! நீ இல்லாத உலகில், எப்படி வாழ முடியும் என்று... அன்று, எனக்கு எல்லாம் தெளிந்து விட்டது. என் வாழ்க்கை முழு துக்கும் நீதான், நீ இல்லாமல், எனக்கு ஒன்றுமே இல்லை என்று, என்னவோ 'ஐயம் திரிபற, அறுதியிட்டு உறுதி யாக' என்று பழைய சொற்றொடர் ஒன்று சொல்வார் களே, அதுபோலத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அதனால்தான், இன்றைக்கும் மனம் நடுங்கி விட்டது!" என்றவன் ஒரு சிறு இடைவெளியின் பின், "ஆனால் அவ்விடம் எப்படி? அம்மையார் தியாக சீலியாகத் தங்கைக்காக, என்னை மணந்தவர்கள் ஆயிற்றே!" என்று கிண்டலாகக் கேட்டான் மோகன சுந்தரம்.

புன்னகை செய்தாள், சாருமதி. அவளது மனமாற்றம் பற்றி, அறிய ஆசைப்படுகிறான்!

"சுந்தர், நான் உங்களைப் போல இல்லை, அதிரடி யான திடீர் திருப்பங்கள் எதற்காகவும் என் மனம் காத் திருக்கவே இல்லை. அன்று, நாம் என்ன பெயர் சொல்லி அழைப்பது என்று பேசினோமே! நினைவிருக் கிறதா? ஒரு குறும்புச் சிரிப்போடு என்னைப் பார்த் தீர்கள். அந்த முகம், அப்படியே என் மனதில் பதிந்து விட்டது. சித்திரம் பயின்றிருந்தால், இப்போதுகூட அந்த முகத்தை வரைந்து விடுவேன். அதற்கு முன்பே, திருமணம் பற்றிப் பேசிய முதல் நாள், கையில் முத்த மிட்டீர்களே, எத்தனை நாள், அந்த இடம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது தெரியுமா? இப்போது கூடத் திடுமென, அதே போல உணர்ச்சி தோன்றுவதுண்டு. அப்புறம்... எப்போதுமே, நீங்கள் அருகில் இருந்தால் துள்ளிக் குதிக்க வேண்டும் போல, உள்ளூர ஓர் உற் சாகம்!



"பிரிவு பற்றிச் சொன்னீர்களே, அப்படி ஒரு நிலை வந்தால், எப்படி வாழ முடியும் என்று எவ்வளவு வருந்தி யிருப்பேன்!

"அதைப் பற்றி நினைக்கக் கூடாது. இப்போதைய மகிழ்ச்சியை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் என்று, கஷ்டப்பட்டு மனதைத் தேற்றிக் கொள் வேன்."

"ஐயோடா கண்மணி, அனாவசியமாகத் துன்பம் அனுபவித்திருக்கிறாயே" என்று பரிவுடன், அவள் முதுகை வருடிக் கொடுத்தான் கணவன்.

முறுவலித்து "எத்தனை நாள் நீங்கள் தூங்கும்போது உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு, சும்...மா உட்கார்ந்திருப்பேன், தெரியுமா? அந்த சுகத்தில், நானும் இரவில் தூங்க வேண்டும் என்பதே, எனக்கு மறந்து போகும்!" என்று தன் செயல், மற்றும் உணர்வு களைச் சாருமதி விவரித்தாள்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனந்தச் சிரிப்பு!

சிரித்துக் கொண்டே "ஆஹா! எனக்குத் தெரியாமல், இந்த வீட்டில் இப்படியெல்லாம் வேறு நடக்கிறதா? இதையெல்லாம், இனிமேல் நான் கவனித்துக் கொள் கிறேன், பார்" என்றான் அவன் கம்பீரக் குரலில்.

கிளுக்கிச் சிரித்து "தூங்கும்போது எப்படிக் கவனிப்பீர் களாம்?" என்று மடக்கினாள் மனைவி.

"அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றான் அவன் கெத்தாக.

அன்றிரவு, மறக்க முடியாத ஓர் இரவாக அமைந்தது.

இனிய மயக்கத்தில் இமைகள் செருகியபோது, மோகன சுந்தரத்தின் கைகள், சாருமதியை இறுக அணைத்துக் கை வளையத்துள் கொண்டு வந்தன.

காதோரம் சரிந்து "எப்படிக் கவனிக்கப் போகிறேன் என்று புரிகிறதா? நீ அசைந்தால், நானும் விழித்து விடு வேனே! அப்புறம் இருவருமேதானே பார்த்துக் கொண் டிருக்க வேண்டும்!" என்று நகைத்தான் அவன்.

இதுதான் அவளுடைய கணவன். எதற்கும் உரிய வழி ஒன்றைக் கண்டு பிடிப்பான். அவளைப் பொறுத்தவரை அது இனிய வழியாக இருக்கும்!

மையலாய் நகைத்தவாறு, அவன் கைகளில், வாகாகச் சுருண்டு கொண்டாள் அந்தக் காதல் மனைவி.

★